24 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com 416-282-4978



RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

கனேடிய இலங்கை இந்திய சர்வதேச விளையாட்டு செய்திகள்
உடனுக்குடன் செய்திளை பார்வையிட
தமிழ்வணக்கம்.கொம்
24/7 News
www.tamilvanakkam.com



நதி 24 பாலம் 23 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் DECEMBER 01, 2014


# ஜனவரியில் இலங்கை அதிபர் தேர்தல்

எதிர்வரும் ஜனவரி 08, 2015 இல் இலங்கை அதிபர் தேர்தல் நடைபெறும் என இலங்கை தேர்தல் திணைக்களம் உறுதி செய்துள்ளது. இத்தேர்தலுக்கான வேட்பாளர்களின் நியமனப்பத்திரம் டிசம்பர் 08, 2014 இல் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அதிபர் மகிந்த ராஜபக்ச மூன்றாவது முறையும் இத்தேர்தலில் போட்டியிட உள்ளார். மகிந்த ராஜபக்ச முதல் முறையாக இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிபராக நவம்பர் 17, 2005 இல் தெரிவு செய்யப்பட்டார். இலங்கை அரசியல் சாசனத்தின்படி அதிபரின் ஆட்சிக்காலம் ஆறு வருடங்களாக இருந்தாலும் தனது நான்கு வருட ஆட்சி முடிவடைந்தவுடன் தேர்தலை நடத்தி ஜனவரி 26, 2010 இல் மகிந்த ராஜபக்ச இரண்டாம் முறை அதிபராக தெரிவானார். தனது இரண்டாவது அதிபர் பதவிக்காலத்தை தனது முதலாவது தெரிவின் ஐந்து வருட முடிவின் பின்னர் நவம்பர் 19, 2010 இல் அதிபராக சத்திய பிரமாணம் செய்து ஆரம்பித்திருந்தார்.

மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது பதவிக்காலம் நவம்பர் 2016 வரை இருந்தாலும் கடந்த முறைபோல் இம்முறையும் நான்கு ஆண்டுகள் முடிவடைந்தவுடன் அடுத்த அதிபர் தேர்தலை ஜனவரி 08, 2015 இல் நடத்துகிறார். மகிந்த ராஜபக்ச வகிக்கும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் (SLFP), அவர் தேர்தலில் போட்டியிட்ட கூட்டணிக்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியும் (UPFA) இரண்டும் சேர்த்து ஏற்கனவே தங்களது கட்சி வேட்பாளராக ஜனவரி 08, 2015 இல் நடைபெற இருக்கும் அதிபர் தேர்தலில் மகிந்த ராஜபக்சவையே நிறுத்துவது என முடிவெடுத்துள்ளனர்.

இந்த வேட்பாளர் தெரிவை SLFP யின் பிரதித்தலைவரும் அமைச்சருமான நிமால் சிறீபால டி சில்வா முன்மொழிய தற்போதைய பிரதமர் D.M ஜெயரத்தினா அதை வழி மொழிந்து மகிந்த ராஜபக்சவை தங்களது அதிபர் வேட்பாளராக தெரிவு செய்தனர். ஜனவரி 26, 2010 இல் நடைபெற்ற அதிபர் தேர்தலில் மகிந்த ராஜபக்ச 58% வாக்குகளைப் பெற்று அதிபராக தெரிவானார். அவருக்கு எதிராக போட்டியிட்ட சரத் பொன்சேகா 40% வாக்குகளை பெற்றிருந்தார். 10.4 மில்லியன் மக்கள் இத்தேர்தலில் வாக்களித்திருந்தனர்.

மகிந்த ராஜபக்சவின் அமைச்சரவை யில் சுகாதார அமைச்சராகவும் தொடர்ச்சி 10ஆம் பக்கம்




தமிழீழ மண்ணிற்காகவும் மக்களுக்காகவும் தங்களுடைய இன்னுயிரை ஈந்த மாவீரர்களை உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் உணர்வுபூர்வமாக நினைவு கூர்ந்தனர். டென்மார்க், பிரான்ஸ், லண்டன், அவுஸ்திரேலியா போன்ற புலம்பெயர்ந்த நாடுகளிலும், இந்தியாவிலும், தாயகத்திலும் உள்ள மக்கள் வீர மறவர்களை நினைவு கூர்ந்தனர்.

கனடா ரொறன்ரோவில் நொவம்பர் 27, 2014 இல் மாவீரர் நாளில் நிகழ்வுகள் எழுச்சியுடன் நடைபெற்றன. காலை 7:05 மணிக்கு நினைவொலி எழுப்பப்பட்டு கனடியக் கொடி, தமிழர் தேசியக் கொடி ஏற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. தேசிய நினைவெழுச்சி அகவத்தினால் அன்றைய நிகழ்வுகள் நான்கு அமர்வுகளாக மார்க்கம் Fair Ground மைதானத்தில் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட மண்டபத்தில் நடைபெற்றது.


Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099
Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd.
Company#10214

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
அவசரகால பல் வைத்திய சேவைகள்
பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

MORTGAGE ALLIANCE
The Guardian
SAVE YOUR MONEY
SAVE YOUR HOME
- 2nd Mortgage - Purchase & Refinance
- Renewal & Switch - Home Equity Loan
- Residential & Commercial Mortgage
We're Hiring Experienced & New Agents
Gini Annarasa
Cell: 416.830.3241
*Independently Owned & Operated







CELEBRATING 25 Years
Vlambaram Publications inc.

# 25 ஆவது ஆண்டில் விளம்பரம் நடத்தும் உலகளாவிய போட்டி

ரொறொன்ரோவில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் விளம்பரம் பத்திரிகை 25வது வருடத்தை (1991 - 2015) முன்னிட்டு நடத்தும் தமிழ் சமூக-இலக்கிய-வரலாற்றுப் போட்டி. போட்டிக்கான படைப்புக்கள் பின்வரும் முகவரிக்கு ஜனவரி முதலாம் திகதி 2015க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். அஞ்சல் உறையில் அல்லது மின்னஞ்சல் பொருள் பகுதியில் ‘25வது ஆண்டு விளம்பரப் போட்டி’ என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி
Vlambaram Publication Inc.
GTA Square,
5215 Finch Ave. East, #201
Toronto ON, M1S 0C2
மின்னஞ்சல் முகவரி:vlambaram@sympatico.ca

போட்டியில் வெற்றிபெற்ற மூன்று படைப்புக்களை தவிர ஏனையவற்றிற்கு எவ்வித பணமும் வழங்கப்பட மாட்டாது. ஆனால் சிறந்ததென நடுவர்களால் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் விளம்பரம் பத்திரிகையிலும் விளம்பரம் மற்றும் தமிழ்வணக்கம் இணையத்தளங்களிலும் பிரசுரிக்கப்படலாம்.

படைப்புக்கள் முன்னர் பத்திரிகைகள், இணையங்கள் உட்பட்ட மற்றைய ஊடகங்கள் எதிலும் பிரசுரமாகியிருக்கக் கூடாது. இதனை எழுத்தாளர் படைப்பின் முகப்பகுதியில் உறுதிப்படுத்த வேண்டும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் விளம்பரம் பத்திரிகையில் வெளியிடப்படும்.

<u>போட்டி 1</u>
குறுநாவல் போட்டி

9,000-12,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

<u>போட்டி 2</u>
திரைப்படக் கதைப் போட்டி
(Script Writing)

1500-2000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

<u>போட்டி 3</u>
கவிதைப் போட்டி

60-100 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

<u>போட்டி 4</u>
கட்டுரைப் போட்டி

பின்வரும் தலைப்புக்களில் ஒன்றில் கட்டுரையை எழுதி அனுப்பலாம்.

1. புகலிட பொருளாதாரத்தில் தமிழரின் பங்கு
2. தமிழரின் கலையும் பண்பாடும்
3. தகவல் தொழில்நுட்பத்தில் தமிழரின் பங்கு
4. மருத்துவமும் தமிழரும்

1,500 - 2,000 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்

நன்கொடை: போட்டி 1இன் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 1,000, 500, 300 வழங்கப்படும்.
நன்கொடை: தனித்தனியே போட்டி 2, 3, மற்றும் 4இற்கும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு முறையே கனடிய டொலர்கள் 500, 300, 200 என வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 8.5"-11" (A4) தாளில் 11pt எழுத்துரு அளவில் தமிழ் unicode font இல் தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சல் மூலம் அனுப்புபவர்கள் word ல் ஆக்கத்தை பதிவு செய்து இணைக்கப் பட்டிருக்க வேண்டும். மின்னஞ்சலின் முகப்பில் ஆக்கத்தை பதிவு செய்ய வேண்டாம். படைப்பாளியின் முழுப்பெயர், முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம் உறுதிப்படுத்தலும் படைப்பின் முன் பகுதியில் தனித்தாளில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். போட்டி உலகில் வாழும் தமிழர்கள் அனைவருக்குமானது. விளம்பரம் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களோ விளம்பரத்தின் எழுத்தாளர்களோ இப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது.

# இலங்கை ஜனாதிபதி தேர்தல்

## பலமான போட்டிதான் ஆனால், எதிர்வு கூற முடியாது!

இலங்கை ஜனாதிபதி தேர்தல் ஜனவரி 8ஆம் திகதி நடைபெறும் என்பது அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தலுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. போரை வெற்றிகொண்டதன் பின்னர் இடம்பெற்ற அனைத்து தேர்தல்களிலும் சிங்களப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிகளை தமதாக்கி வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில்தான் முதற்தடைவயாக சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ மூன்றாது தடவை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது என்ற சட்டப்பிரச்சினை எதிர் கட்சிகளால் முன்வைக்கப்பட்டது. முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா கூட இதனை வலியுறுத்தி வந்தார். ஆனால், மஹிந்த அரசாங்கம் அதனையும் வெட்டியாடி விட்டது. நீதிமன்ற ஆலோசனையைப் பெற்று, மஹிந்த ராஜபக்ஸ மூன்றாவது முறையாக போட்டியிடுவதில் சட்டப் பிரச்சினை இல்லை என்ற முடிவை அரசாங்கம் அறிவித்தது. பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது அவர்களின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட பொது எதிரணியோ, அதன் பொது வேட்பாளரோ முதலில் மஹிந்தவிற்கு ஒரு பிரச்சினையாகவே இருக்கவில்லை.

ஆனால், திடீரென்று ஆளும் தரப்பிலிருந்து மைத்திரிபால சிறிசேன எதிரணிக்கு தாவியதும், அவரே பொது வேட்பாளர் என எதிரணியால் அறிவிக்கப்பட்டதும் மஹிந்த ராஜபக்ஸவினால் எதிர்பார்த்திராத ஒன்று. மைத்திரிபால சிறிசேன சிறிலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளரும், சுகாதார அமைச்சருமாக இருந்தவர். அவருக்கு ஆதரவாக மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன உள்ளிட்ட நால்வர் அடுத்த கட்டமாக எதிரணிக்கு தாவினர். அதன் பின்னர், இன்னும் சிலரும் ஆளும் தரப்பிலிருந்து கழன்றனர். அடுத்து வரும் நாட்களில் மேலும் பலர் அரசிலிருந்து விலகி எதிரணிக்கு வரலாம் என்றும் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. கடந்த காலங்களில் மஹிந்த அரசாங்கம் எதிரணியினரை தம் பக்கம் இழுத்தெடுப்பதில் சாதனை படைத்து வந்தது. பணம், பதவிகள் என வழங்கி இதனை ஆளும் தரப்பு மேற்கொண்டது. இந்நிலையில் ஆளும் தரப்பிலிருந்து திடீரென இவ்வாறான தாவல்கள் இடம்பெறும் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. இப்போது அமையப்பெற்றுள்ள பொது எதிரணிக்கு பலமான ஆதரவினை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வழங்கி வருகின்றார். தேர்தல் பரப்புரைகளில் அவரின் பங்களிப்பு முக்கியமானதாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்கும் வாக்கு வங்கிக்கு மேலதிகமாக சந்திரிகாவினால், சிறிலங்கா சுதந்திர கட்சியின் வாக்குகளை எதிரணிக்கு உடைத்தெடுக்க முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், அரசுடன் சேர்ந்திருந்த ஹெல உறுமயவும் அரசிற்கு ஆதரவாக இருந்த கடும்போக்கு அமைப்புகளும் கூட இப்போது விலகி நிற்கின்றன. இவர்களை சார்ந்திருக்கும் வாக்காளர்களும் ஆளும் தரப்பிற்கு வாக்களிக்க மாட்டார்கள். சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் பிரதான கட்சிகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் போன்றவை இப்பத்தியை எழுதிக்கொண்டிருக்கும் நேரம் வரையில் அவற்றின் முடிவுகளை வெளியிடவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் தலைமை இன்றைய நிலையில் மதில் மேல் பூனை என்கின்ற நிலையிலேயே உள்ளது. ஆனாலும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் சிலர் மஹிந்த ராஜபக்ஸவிற்கே தற்போது ஆதரவாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். அதனால், அவர்கள், நடைபெற வுள்ள ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஸவிற்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டையே எடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனாலும், முஸ்லிம் காங்கிரஸின் முடிவை ஏற்று, முஸ்லிம் மக்கள் நடப்பார்களா என்பது இன்றைய சூழலில் சிக்கலான கேள்வியே.



கடந்த காலங்களில் தொடர்ச்சியாக முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் குறித்த மனத் தாக்கங்கள் சாதாரண முஸ்லிம் மக்கள் மத்தியில் உள்ளன. பள்ளிவாசல்கள் மீது அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வந்த தாக்குதல்கள் பின்னர் தீவிரமடைந்து முஸ்லிம் மக்கள் மீதும், அவர்களின் வீடுகள் - உடைமைகள் மீதும் மேற்கொள்ளப்பட்டன. தெற்கில் அளுத்கம, பேருவளை பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் முஸ்லிம் மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அரசாங்கம் இதனை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வில்லை. இத்தாக்குதல்களின் பின்னணியில் யார் இருக்கின்றார்கள் என தெரிந்திருந்தும் கூட அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. அரசாங்கம் இப்படி நடந்து கொண்டுள்ள நிலையில், முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அரசை சார்ந்தே நிற்கின்றது. தங்களின் மக்களுக்காக ஒரு போராட்டத்தையேனும் நடத்த முடியாத நிலையில் உள்ளது. தங்கள் பதவிகளைத் தக்கவைக்கும் நோக்கிலேயே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் அக்கறை காட்டி வருகின்றனர் என முஸ்லிம் மக்கள் இப்போது கூறுகின்றனர்.

இந்த நிலையில், முஸ்லிம் காங்கிரஸ் தலைமையின் சொற்படி கேட்டு நடக்க சாதாரண முஸ்லிம் மக்கள் தயாராக இல்லை. இதனால் முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் தரப்பை ஆதரிப்பது என்ற முடிவினை அறிவித்தாலும் கூட முன்னரைப் போல முஸ்லிம் மக்கள் அதற்கு செவிசாய்ப்பார்கள் என்று சொல்ல முடியாது. அதனால் இம்முறை முஸ்லிம்களின் பெரும்பான்மை வாக்குகளை ஆளும் தரப்பு இழக்கும் நிலையே உள்ளது. கடந்த ஜனாதிபதி தேர்லில் வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் வாக்குகள் மஹிந்த ராஜ பக்ஸவிற்கு கிடைக்காத போதும், தென்னிலங்கை மக்களின் பெரும்பான்மை வாக்குப் பலத்தில் அவர் ஜனாதிபதியானார். இனிவரும் தேர்தல்களில் தமிழ் மக்களின் வாக்குகள் இல்லாமலேயே ஆட்சியமைக்கும் பலம் சிங்கள மக்கள் மூலமாக ஏற்படும் என்கின்ற நம்பிக்கை ஆளும் தரப்பினருக்கு ஏற்பட்டது. 'போர் வெற்றி' கோசமே இதற்கு காரணமாகவும் அமைந்தது.

இன்றைய நிலைமை அவ்வாறு இல்லை. இன்று தெற்கிலுள்ள பல்வேறு பிரிவினரும் அரசாங்கத்தின் மீது அதிருப்தி கொண்டுள்ளனர். இதனால் அங்கு வாக்குகள் சிதறும் நிலை காணப்படுகின்றது. இம்முறை தமிழ், முஸ்லிம்களின் வாக்குகள் ஜனாதிபதி தேர்தல் வெற்றியை தீர்மானிப்பதில் முக்கியத்துவம் பெறுகின்றன. இதனை எழுதும் வரையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் முடிவு வெளிவரவில்லை எனினும், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு சரியானதோர் தீர்வுப் பாதையை வெளிப்படுத்தும் அணிக்கு தங்கள் ஆதரவை தெரிவிப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். ஆளும் தரப்பினரதும், எதிரணியினரதும் தேர்தல் விஞ்ஞாபனங்களில் இது குறித்து என்ன வரப்போகின்றது என்கின்ற எதிர்பார்ப்பும் உள்ளது.

பொதுவாக பார்க்கப்போனால், போர் முடிவின் பின்னர் தமிழ் மக்களின் மனங்களை வெல்லும் முயற்சியாக பல விடயங்களை மஹிந்த அரசாங்கம் செய்திருக்க முடியும். அதனை அவர்கள் செய்யவில்லை. ஏற்கனவே இருக்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வைத் தேடுவதை விடுத்து, புதிதாக மேலும் சிக்கல்கள் ஏற்படுத்தப்பட்டன. உதாரணத்திற்கு போரின் பின்னர் காணி சுவீகரிப்பு என்பது புதிதாக ஏற்பட்டுள்ளதொரு சிக்கல்.

## - விகிர்தன் -

எதிரணி ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்து விடும் என்கின்ற எதிர்பார்ப்பு -கனவு என்பதெல்லாம் தமிழ் மக்களுக்கு கிடையாது. ஒரு ஆட்சிமாற்றம் ஏற்பட வேண்டும் என்ற ஒரேயொரு காரணத்திற்காக மட்டுமே எதிரணிக்கு ஆதரவளிக்க முடியும். அல்லது தமிழ் மக்கள் நினைத்தால் இந்த ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்கவும் முடியும்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் இதில் யார் வெல்வார்கள் என்பதை உறுதிப்படுத்த முடியாத நிலையே காணப்படுகின்றது. ஏனெனில், தென்னிலங்கையிலுள்ள அரசியல் நோக்கர்களின் கருத்துக்களின் படி, சிங்கள கிராம மக்கள் மத்தியில் இன்னமும் ஆளும் தரப்பிற்கு ஆதரவு உள்ளதாகவும் அதன்படி பெரும்பான்மை வாக்குகளைப் இம்முறை பெற முடியாவிட்டாலும் சிறிய வித்தியாசத்திலாவது மஹிந்தவே மீண்டும் ஜனாதிபதியாக வரலாம் என்றே தெரிவிக்கப்படு கின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிரணி பொதுவேட்பாளரை ஆதரிக்கும் அறிவிப்பை விடுக்குமானால்

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility


- *Detailing*
- *Motor Shampoo*
- *Interior Shampoo*
- *Exterior Wash*
- *Waxing*
- *Repairs*
- *Safety Certification*
- *Overall Maintenance*
- *Under Coating*
- *Rust Proofing*

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# தண்ணீருக்கும் நினைவாற்றல் உண்டு!



## சத்குரு வாசுதேவ்

நம் வாழ்வின் அடித்தளமாக உள்ள பொருட்களில் மிக முக்கிய பங்கு வகிப்பது தண்ணீர். திட நிலை, திரவ நிலை, வாயு நிலை போன்ற மூன்று தன்மைகளிலும் இருக்கின்ற, மிகச் சிலவற்றுள் நீரும் ஒன்றாக இருக்கின்றது. இந்த தண்ணீருக்கும் நினைவாற்றல் உண்டு என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும். இப்படிப்பட்ட நீரின் மறைஞானத்தை விளக்குகிறது இக்கட்டுரை

சத்குரு:

கடந்த சில வருடங்களாக, நீர், நீரின் ஆற்றல் குறித்து முனைப்புடன் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. உலகில் எங்கு பார்த்தாலும் ஒரு நபருக்குத் தேவையான குறைந்தபட்ச தண்ணீர் கிடைப்பதுகூடக் குறைந்து கொண்டே செல்வதால் இந்த நடவடிக்கை தொடங்கியுள்ளது. உதாரண மாக, இந்தியாவில் 1947-இல், ஒரு நபருக்குக் கிடைத்த நீரில், இப்போது சராசரியாக 20 சதவிகித அளவு நீர்தான் கிடைக்கிறது. 2025 ஆம் ஆண்டுவாக்கில், மேலும் குறைவாக ஒரு நபருக்கு ஏழு சதவிகித நீர்தான் கிடைக்கும் என்று கூறுகின்றனர். இதனால் நீர் மேலாண்மை குறித்த ஆராய்ச்சிகள் பல முனைகளிலும் நடக்கிறது. குறிப்பிடத்தக்க வகையில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள், இந்தப் பூமியில் நாம் வாழும் விதத்தையே மாற்றிவிடக்கூடும் என்று விஞ்ஞானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:**
www.innerengineering.org

நீருக்கு ஞாபகசக்தி இருக்கிறது என்பதை நம் கலாச்சாரத்தில் நாம் அறிந்து வைத்திருக்கிறோம். இதன் அடிப்படையில் தான் நீரை, தீர்த்தம் என்று அழைக்கிறோம். நீருக்கு ஞாபகசக்தி இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். நீர் தன்னுடன் தொடர்பு கொள்வது எதுவாக இருந்தாலும் அதை நினைவில் வைத்துக்கொள்கிறது. இன்றைய நீர் விநியோக அமைப்பில், மிகுந்த ஆற்றல் வாய்ந்த இயந்திரங்கள் மூலம் நீரை குழாய்களில் ஏற்றுகிறோம். ஏற்றப்படும் நீர் ஐம்பது வளைவு, நெளிவுகளுக்குப் பின்னரே உங்களது வீட்டுக் குழாயை அடைகிறது. இதனால், அறுபது சதவிகித நீர், உங்கள் வீட்டை அடைவதற்குள் விஷத்தன்மை அடைகிறது. இரசாயன மாற்றங்களால் அல்ல, நீரின் மூலக்கூறின் கட்டமைப்பு மாறிவிடுவதே இதற்கான காரணம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

வழக்கமாக நீரிலுள்ள நுண்கிருமிகளின் அளவு அதிகரித்தால், அது மாசுபட்டிருப்பதை நீங்கள் அறியமுடியும். அதற்கு மாறாக, நீர் குழாய்களில் பயணிக்கும் வேகத்தின் காரணத்தினால், அதன் மூலக்கூறு மாறிவிடுகிறது. இதனால், அது பயன்படுத்துவதற்கு ஏற்றதாக இல்லாமல் போவதுடன், விஷத்தன்மை உடையதாகிறது. இந்த மாசுபட்ட நீரை ஒரு தாமிரப் பாத்திரத்தில் சேமித்து, பத்து



அல்லது பன்னிரண்டு மணி நேரம் வைத்திருந்தால், நீருக்கு ஏற்பட்ட பாதிப்பு தானாகவே நீங்கிவிடும். இந்த நீரை குழாயிலிருந்து நேரடியாகப் பருகினால், ஒரு குறிப்பிட்ட அளவு விஷம் உங்களுக்குள் செல்கிறது. மக்கள் இதுபோன்ற அறியாமையில் வாழ்ந்துவிட்டு, பிறகு எனக்கு ஏன் புற்றுநோய் ஏற்பட்டது? எனக்கு எப்படி இது நடந்தது? என்று திகைத்து நிற்கின்றனர். வாழ்க்கை குறித்த எந்த அறிதலும் இல்லாமல், உங்களை உருவாக்கும் மூலப்பொருட்கள் குறித்த எந்தக் கவனமும் செலுத்தாமல் வாழ்கிறீர்கள், ஆனால் எல்லாம் சுமுகமாக நடக்கவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறீர்கள். எப்படி சாத்தியமாகும்?

நீரின் இரசாயனக் கலவையை மாற்றாமல், அதன் நுண்ணணுக் கட்டமைப்பை, மறு கட்டமைப்பு செய்வதன் மூலம் நீரை முற்றிலும் வேறுவிதமான தன்மையில் செயல்படச் செய்ய முடியும் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, நான் ஒரு குவளை நீரை என் கைகளில் எடுத்து, அதை ஒரு குறிப்பிட்ட விதமாகப் பார்த்து, பிறகு உங்களுக்குக் கொடுத்தால், அதனால் நீங்கள் நலம் அடைவீர்கள். அதையே நான் வேறு விதமாகப் பார்த்து உங்களுக்குக் கொடுத்தால், நீங்கள் ஒரே இரவில் உடல்நலம் குன்றிவிடுவீர்கள்.

நீங்கள் அறிமுகமற்றவர்களது கைகளிலிருந்து நீரை வாங்கிப் பருகுவதும், உணவு வாங்கிச் சாப்பிடுவதும் கூடாது. உங்கள் மீது அன்பும், அக்கறையும் கொண்டவர்களிடமிருந்தே எப்போதும் இவற்றைப் பெற்றுக்கொள்ளவேண்டும், என்று உங்களுடைய பாட்டி கூறியிருப்பார்கள். உணவுப் பொருட்களை எல்லா இடங்களிலிருந்தும் பெறுவது கூடாது. உங்கள் பாட்டி இப்படிக் கூறியபோது, அது உங்களுக்கு மூடநம்பிக்கையாகத் தோன்றியது. இதே விடயத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் கூறினால், அது உங்களுக்குப் பெரிய விடயமாக இருக்கும். இது ஒரு விதமான அடிமைத்தனம்.

நீருக்கு ஞாபகசக்தி இருக்கிறது என்பதை நம் கலாச்சாரத்தில் நாம் அறிந்து வைத்திருக்கிறோம். இதன் அடிப்படையில்தான் நீரை, தீர்த்தம் என்று அழைக்கிறோம். கோவிலில் வழங்கப்படும் ஒரு சொட்டு தீர்த்தத்திற்கு அனைவரும் போட்டியிடுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள் அல்லவா? தெய்வீக சக்தியின் பதிவுகளைக் கொண்டுள்ள அந்த நீர் உங்களுக்கு உன்னதமான விடயமாக இருப்பதால், கோடீஸ்வரராகவே இருந்தாலும், அந்த ஒரு சொட்டு நீர் கிடைக்க நீங்கள் பிரயத்தனப்படுவீர்கள்.

தமிழ்நாட்டில், பாரம்பரிய பழக்கங்கள் உயிர்ப்புடன் உள்ள வீட்டிற்குச் சென்றால், தண்ணீரை பித்தளை அல்லது செம்புப் பாத்திரத்தில் குறிப்பிட்டவிதமாக வைத்திருப்பதைக் காணமுடியும். ஒரு காலத்தில் பாரத தேசம் முழுவதும் இது வழக்கத்தில் இருந்தது. ஆனால் நாட்டின் பிற பகுதிகளில் இந்த வழக்கம் பெருமளவு மறைந்தேவிட்டது. அதிகாலையில், அந்தப் பாத்திரத்தை புளியினால் தேய்த்து பளபளப்பாக்கி, அதன் மீது விபூதி, குங்குமம் இட்டு பூஜை செய்வார்கள். இதன்மூலம் அந்தத் தண்ணீருக்கு ஒருவிதமான சக்தி ஊட்டுகிறார்கள். அதன் பிறகே அதில் நீர் நிரப்பப்படுகிறது. அதிலுள்ள நீர் இந்த செயல்முறைகளின் பதிவை தன்னுடன் தக்க வைத்துக் கொள்வதால், சக்தியூட்டப்பட்ட நீரினை மட்டுமே பருகுகின்றனர்.

ஒரு குவளை நீரை, உங்களது ஒரு எண்ணமோ அல்லது பார்வையோ இனிப்பாக மாற்றக்கூடுமென்றால், சரியான மனோபாவம், முனைப்பு மற்றும் கவனம் செலுத்துவதன் மூலம், இந்த உடல் என்ற பாத்திரத்தில் உள்ள நீரை உங்களால் இனிப்பாக மாற்ற முடியாதா என்ன? அந்த நீரை நீங்கள் இனிப்பாக மாற்றிவிட்டால், நீங்கள் 72% இனிமையானவராகிறீர்கள்.


**AABS DON VALLEY PEST CONTROL INC.**
**Please Call @ 647-931-7124 OR 1-800-816-6406**
ABDV PEST CONTROL
The Name You Can Trust
Licensed Graduate Exterminator, Insured and 10 years Experience Free Inspection, Free Estimates & Guaranteed services in GTA and out of GTA We control Cockroaches, Bedbugs, Mice, Flea, Wasps/Bees, Earwigs ,Carpenter ants and other ants, Fruit Flies, Drain flies, Silver fish, Centipedes, Spiders etc. We provide pest control services for Residential, Commercial, Industrial, Food Warehouses, Food Processing and Packaging industries.






**யோகா சோதிடம்**
• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

MORTGAGE ALLIANCE
Lic # 10530
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*
Brockerage Office : 112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC
Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல் பிரச்சினையா?



நல்ல ரேட்ல மோட்கேஜ்,
லைன் ஒப் கிரெடிட்,
ரீபைனான்ஸ்,
2வது, 3வது மோட்கேஜ்,
பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்,
எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க,
வீடு வாடகைக்கு விட அல்லது பெற்றுக்கொள்ள

மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,
"மோட்கேஜ் கிளினிக்"
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011
திங்கள்—வெள்ளி (call for an appointment)
வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00




Season's Greetings

உங்கள் மாதாந்த மோட்கேஜ் கொடுப்பனவுடன் Credit Card, Car Loan, Personal Loan, Line of Credit மற்றும் ஏனைய அதிகளவு வட்டி செலுத்தும் கடன்களை ஒன்று படுத்தி எவ்வாறு உங்களது மாதாந்த கடன் சுமையை குறைப்பது???

5 Yrs Fixed Rate : 2.79 % *OAC
5 Yrs Variable : Prime - .70% (2.3 %)

உங்கள் வீடு விற்பனைக் கொமிசனை நீங்களே தீர்மானியுங்கள் எமது மிகக் குறைந்த விற்பனைக் கொமிசன் $1000 மட்டுமே!!!

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
Cell : 647-861-8240



ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843

# கேள்விக்குறியாகும் முன்னாள் போராளிகளின் பாதுகாப்பு!

## தாயகமடல்

கிருஸ்ணசாமி நகுலேஸ்வரன் என்ற விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் மன்னாரில் இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப் பட்டார். இவர் போரின் பின்னர் படையினரிடம் சரணடைந்து புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலையானவர்.

புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட போராளிகள் ஆகக் குறைந்தது ஒரு வருடமாவது அங்கு இருந்துவிட்டே விடுதலை யாகின்றனர். அங்கிருக்கும் போது அவர்கள் பல்வேறு விசாரணைகளுக்குள்ளாக்கப்பட்டு, பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு பின்னரே விடுவிக்கப்படுகின்றனர். அவர்கள் சமூகத்துடன் இணைக்கப்படுகின்றனர் என்று கூறப்பட்டாலும் படைத்தரப்பினால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டே வருகின்றனர். அவர்கள் தங்கள் நிரந்தர இருப்பிடங்களில் உள்ளனரா என்பது குறித்து படைத்தரப்பினால் ஆராயப் படும் நிலைமைகள் உள்ளன. அவர்கள் குறித்த இடத்தில் இல்லாவிட்டால் அது குறித்த விசாரணைகள், தேடல்கள் நடைபெறும்.

இவ்வாறான சூழ்நிலையிலேயே விடுதலை யான அவர்களின் வாழ்நாள் கழிந்து வருகின்றது. இந்நிலையில், மேற்படி முன்னாள் போராளியான நகுலேஸ்வரனின் படுகொலையானது விடுவிக்கப்பட்ட அனைத்து முன்னாள் போராளிகள் மத்தியி லும் மிகுந்த அச்சத்தை தோற்றுவித்துள்ளது. அவர்களது பெற்றோர், மனைவி - பிள்ளை கள், உறவினர்கள் என அனைவருமே அச்சம் கொள்ளும் நிலையை இப்படுகொலை ஏற்படுத்தியிருக்கின்றது. மன்னார், வெள்ளாங்குளம் பகுதியில் வாழ்ந்து வந்த கிருஸ்ணசாமி நகுலேஸ்வரன் கடந்த 12ஆம் திகதி இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் 2012ஆம் ஆண்டு தடுப்புக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டவர். திருமணமாகி இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் மேசன் வேலை செய்து தன் குடும்பத்தை நடத்தி வந்தவர். தான் வாழும் கிராமத்தின் அபிவிருத்தி, முன்னேற்றங்களில் அக்கறை மிக்கவராகவும் இருந்து வந்தவர். பொதுப்பணிகளில் ஈடுபாடு கொண்டவர். இவ்வாறான நிலையில் இவர் யாரால் ஏன் கொல்லப்பட்டார்? என்று ஆராய ப்பட வேண்டியது சட்டத்தின் கடமையாகும்.

நகுலேஸ்வரனுக்கு தனிப்பட்ட எதிரிகள் யாரும் இல்லை என்று அவரது மனைவி கூறுகின்றார். ஆனால், அவர் கொல்லப்படு வதற்கு சில தினங்களுக்கு முன்னர் யாரோ அவரை மிரட்டிவிட்டு சென்றதாகவும் சொல்லப்படுகின்றது. இந்நிலையில், அவரது கொலை தொடர்பில் கிராமசேவகர் ஒருவர் உட்பட ஆறு பேர் கைது செய்யப்பட்டிருப்ப தாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். கொலைச் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி கைப்பற்றப்பட்டதாகவும் மேற்படி நால்வரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித் துள்ளனர். அத்துடன், தடயவியல் ரீதியான முக்கிய சாட்சியங்களும் விபரங்களும் விசாரணைகளில் கிடைத்திருப்பதாகவும், அதன் அடிப்படையில் சாட்சிகள் பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் கொலைக்கான காரணம் பற்றிய தகவல் களை விசாரணைகள் முடிவடைந்ததும் சில தினங்களில் வெளியிடுவதாகவும் அவர் கூறியிருக்கின்றார்.

ஆனால், அவ்வாறு கூறப்பட்டு இரு வாரங்கள் கடந்துவிட்ட போதும் மேலதிக தகவல்களை அறிய முடியாமலுள்ளது. பொலிஸ் தரப்பினர் சரியான முறையில் விசாரணைகளை மேற் கொண்டு, அதனை மக்களுக்கு பகிரங்கப் படுத்தாவிடில் சாதாரண பொதுமக்கள் பாதுகாப்பு தரப்பினர் மீதே சந்தேகம் கொள்ளும் நிலைமையை தவிர்க்க இயலாது. கிராம சேவகர் உள்ளிட்ட அறுவர் கைது செய்யப்பட்டுள்ளதும், மேலும் ஒரு அதிகாரியும் இதில் சம்பந்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுவதும் பல்வேறு சந்தேகங் களை ஏற்படுத்தியுள்ளது. நகுலேஸ்வரனின் மரணச்சடங்கில் கலந்து கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ள விடயங்களையும் இங்கு கவனத்தில் எடுக்க வேண்டும். தனது பிரதேசத்தில் இடம்பெறும் காணி அபகரிப்புகள், வளப் பங்கீடுகளில் பாரபட்சம், குளறுபடி போன்ற விடயங்களுக்கு எதிராக நகுலேஸ்வரன் குரல் கொடுத்து வந்திருக் கின்றார் என அவர் கூறியுள்ளார். மாவட்ட, பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டங்களில் கூட, அவர் தனது கிராம மக்கள் சார்பாக கலந்து கொண்டு பல்வேறுபட்ட பிரச்சினை- களை துணிச்சலுடன் வெளிக்கொணர்ந்த மையை தான் அவதானித்துள்ளதாகவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டுள்ளார்.

நகுலேஸ்வரனுக்கு வெளிப்படையாக எதிரி கள் எவரும் இல்லை என்று கூறப்பட்டாலும், சிவசக்தி ஆனந்தன் குறிப்பிட்டுள்ள மேற்படி விடயங்கள் அவருக்குத் தெரியாமலேயே எதிரிகள் உருவாக காரணமாக இருந்திருக்க லாம். இவையெல்லாம் விசாரணை செய்து வெளிப்படுத்தப்பட வேண்டும்.

**- ஆதித்தன் -**

தடுப்பு முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட போராளிகளின் பல குடும்பங்கள் மிகவும் வறுமை நிலைப்பட்டவையாகவே காணப்படு கின்றன. இவ்வறுமையுடன் பாதுகாப்பின்மை யும் சேர்ந்து அவர்களை மேலும் வதைக்கின்ற நிலைமைகள் மாற வேண்டும்.

நாட்டில் இன்று பல பகுதிகளிலும் பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றன ஆனாலும், இவற்றில் முன்னாள் போராளிகள் சம்பந்தப்பட்டதான தகவல்கள் இல்லை. அவர்கள் ஒரு புதிய வாழ்க்கையில் ஈடுபடுகின்றவர்களாகவே இருக்கின்றனர். இவர்களின் நலன்களிலும், பாதுகாப்பிலும் சமூகத்திலுள்ள நலன் விரும்பிகளும், முக்கியஸ்தர்களும் அக்கறை செலுத்த வேண்டும். விடுவிக்கப்பட்ட போராளிகளை இணைத்து மதப்பெரியார்கள், சமூக நிறுவனங்களைச் சேர்ந்தோர் அமைப்புகளை உருவாக்குவது நல்லது. ஒவ்வொரு பகுதிகளிலும் இவற்றை உருவாக்கும் போது விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு அது ஒரு பாதுகாப்பாக, சமூகப் பலமாக அமையும். இவர்களை சந்தேகத்துடன் அவதானிக்கும் நிலையிலும் ஒரு மாற்றத்தை இதன் மூலம் கொண்டு வர முடியும். இது, முன்னாள் போராளிகளான இவர்கள் தங்கள் பிரச்சினைகளை அந்த அமைப்பின் முக்கியஸ்தர்களிடம் கூறி ஆறுதலடையவும் வழிசமைக்கும். இவர்களை சந்தேக கண் கொண்டு பார்த்துக் கொண்டிருப்பவர் களுக்கு விளக்கமளிக்க குறித்த அமைப்புக் களின் முக்கியஸ்தர்களும் உதவியாக இருப்பர். இவ்வாறான அமைப்புக்களை உருவாக்குவது முன்னாள் போரளிகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் உளவியல் ரீதியாக ஒரு பாதுகாப்பையும் வழங்கக் கூடியதாக அமையும்.


விளம்பரம் VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜயபாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளி யாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர் கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் ப்பளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமை யாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## இலங்கை...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

அதுவே மஹிந்த தரப்பிற்கு தென்னிலங்கையில் சிங்களவர்கள் மத்தியில் தீவிர பிரச்சாரத்தை மேற்கொள்ள வழிவகுக்கும் என தென்னிலங்கை ஊடகவியலாளர் ஒருவர் என்னிடம் கூறினார். அவரது கருத்தில் உண்மை இல்லாமலில்லை.

சிங்கள புத்திஜீவியும் அரசியல் ஆய்வாளருமான தயான் ஜயதிலக்க தற்போது கூறியிருக்கும் கருத்தை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமானது. பொது வேட்பாளராக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன போட்டியில் இறங்கியுள்ள போதிலும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் அதிகமான வாய்ப்பு இன்னும் மகிந்த ராஜபக்ஸவிற்கே உள்ளது. கிராமிய, விவசாய அடிப்படையை கொண்ட, மக்களுக்கு மிக நெருக்கமான, நீண்டகால அரசியல் அனுபவங்களை கொண்டுள்ள மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக போட்டியிடுவதால், ஜனாதிபதித் தேர்தல் பலத்த போட்டியான ஒன்றாக மாறியுள்ளது. மைத்திரிபாலவின் வருகை ஆக்கபூர்வமான ஒன்று. எனினும் அவர் வெற்றி பெற்று ராஜபக்ஸவை தோற்கடிப்பார் என்று கருதி விட முடியாது. இருந்த போதும் இங்கு பலத்த போட்டி உள்ளது. எப்போதும் இருக்காத அரசியல் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. பொது வேட்பாளரின் பின்னால் சர்வதேச சதித் திட்டம் இருப்பதாக அரசாங்கம் சுமத்தும் குற்றச்சாட்டுக்கு எவ்விதமான சாட்சியங்க ளும் இல்லை.

ரணில் விக்ரமசிங்க, சந்திரிகா குமாரதுங்க ஆகியோருடன் ஒப்பிடும்போது மைத்திரிபால சிறிசேனவுக்கு மகிந்த ராஜபக்ஸவை தோற்கடிக்கும் இயலுமை காணப்படுகின்ற போதிலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் வெற்றிக்கே அதிக வாய்ப்புகள் உள்ளது. மைத்திரிபால சிறிசேன, பொது வேட்பாளராக தான் நன்கு அறிந்த பெரும்பான்மை விவசாய மக்களின் விருப்பு, வெறுப்புகளுக்கு அமைவான வேலைத்திட்டம் ஒன்றை முன் வைக்காது 100 நாட்களுக்கு அரசிய லமைப்புச் சட்டத்தை மாற்றுவது போன்ற வேலைத்திட்டத்தை முன்வைத்தமை துரதிஸ்டவசமானது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் இருவரும் ஒரு விதத்தில் முகமூடி அணிந்து கொண்ட பாத்திரங்கள். அவர்களின் முகத்தை மாத்திரம் பார்த்து மக்கள் தீர்மானம் ஒன்றை எடுக்க முடியாத நிலைமை உருவாகியுள்ளது. இதேவேளை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தோல்வி யடைந்தால், அவரை போர் குற்றங்களுக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல முடியும் என உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளமை மகிந்த ராஜபக்ஸவிற்கு சாதகமானது இவ்வாறு அவர் கூறுகின்றார். இக்கருத்துக்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பும், புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் இப்போது கவனத்திற் கொள்வது அவசியமானது.

# நல்ல கடன் VS தவிர்க்கப்பட வேண்டிய கடன்

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

**தொடர் - 428**

வாழ்வில் அனேகமானவர்கள் கடன்பெற்றே வாழ்கின்றார்கள். வாகனம் வாங்குவதற்கு, புதிய தொழில் தொடங்குவதற்கு, தளபாடப் பொருட்கள் வாங்குவதற்கு, ஆதனம் வாங்குவதற்கு, பிறரின் தேவைக்கு கொடுப்பதற்கு, தயாகத்திலிருக்கும் உறவினருக்கு கொடுப்பதற்கு, சுற்றுலா செல்வதற்கு, வட்டிக்கு கொடுப்பதற்கு, முதலிடுவதற்கு இவ்வாறு பலவிதமான கடன் வகைகளைக் கூறிக் கொண்டே போகலாம். இதில் அனேகமான கடன்களைக் கூடிய வகையில் தவிர்ப்பது எதிர்காலத்தில் ஏற்படும் பலவிதமான நெருக்கடிகளை தவிர்ப்பதற்கு வழிசமைக்கும். பொதுவாக அனேகமான கடன்கள் கூடாத கடன்களே (Bad deft). ஒரு சிலவே நல்லவிதமான (Good deft) கடனாகும். நல்ல கடனோ, கெட்ட கடனோ திருப்பிச் செலுத்தியே ஆக வேண்டும். குறிப்பாக அடமானக் கடன் நல்ல கடன் என்றே சொல்ல வேண்டும். கனடாவில் மிக அதிகமானவர்கள் கடன்பெற்றே ஆதனம் வாங்குகின்றார்கள். இவ்வாறு கடன் ஒன்று இருப்பதனாலேயே, கனடாவில் ஆதனம் வாங்க விரும்புபவர்களில் மிகக் கூடியவர்கள் ஆதனத்தை வாங்கக் கூடியதாக உள்ளது. கடந்த 4 வருடங்களிற்கு மேலாக முதன்மை வட்டிவீதம், மத்திய வங்கியின் வட்டிவீதம் மாறாமலே காணப்படுகிறது. இந்த கீழ்மட்டத்திலிருக்கும் வட்டிவீதம் ஆதனத்தை வாங்குபவர்களிற்கு மிகவும் சாதக-மான நிலைப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. மேலும் ஒரு சில ஆண்டுகளிற்கு இவ்விதமான நிலைப்பாடே காணப்படலாம்? அல்லது குறைந்த வட்டிவீத சூழலே காணப்படலாம்? வட்டிவீதம் அதிகரிக்க தொடங்கினாலும் மெல்ல மெல்லமாகவே அதிகரிக்கலாம். இதற்கு சில காரணங்களை முன்வைக்கலாம். பலரிற்கு இப்பொழுதும் வேலையில்லாமல் போவது தொடர்கின்றது. இப்பொழுதும் எதிர்பார்த்தளவு பொருளாதார வளர்ச்சி காணப்படவில்லை.

கனடாவின் வங்கிகளின் அமைப்பின் சுற்றறிக்கையின்படி கனடாவில் 70% ஆன கடன்கள் அடமானக்கடனாகவும் (Mortgage) 20% ஆனவை line of credit கடனாகவுமே காணப்படுகின்றது. கடன்பெறும் கனடியர்கள் மிகவும் பொறுப்புள்ளவர்களாகவே காணப்படுகின்றார்கள் என அமைப்பு தெரியப்படுத்துகின்றது. இவ்வாறு பெறும் கடன் எல்லாம் இவர்கள் தமது எதிர்காலத்தை வளமுள்ளதாக மாற்றிக் கொள்வதாகவே தெரிகின்றது.



அடமானக் கடன் பெற்றுக்கொடுப்பவர்களிற்கு பொறுப்பான அமைப்பின் புள்ளிவிபரங்களின் பிரகாரம் 2013 இல் 16% அடமானக் கடன் பெற்றவர்கள் தமது மாதாந்த கொடுப்பனவை மேலதிகமாக செலுத்துவதாகவும் மற்றும் 17% ஆனவர்கள் வருடக் கடைசியில் மேலதிக பணத் தொகையை செலுத்தி அடமானக்கடனை குறைப்பதாகவும் தெரிய வருகின்றது. அத்துடன் வீட்டின் பெறுமதியின் கூடியளவு பகுதி கடனிலே காணப்படுகின்றது. அண்மையில் மத்திய அரசு கொண்டு வந்த திட்டத்தின்படி குறைந்தளவு அடமானக்கடன் கொடுக்கும் காலம் சாதகமான பலனையே மக்களிற்கு கொடுகின்றது.

குறைந்த வட்டிவீத, சூழ்நிலையினால், மாதாந்த கொடுப்பனவின் கூடிய பகுதி முதலிற்கே செல்வதனைக் காணக்கூடியதாக உள்ளது. குறைந்த பகுதியே வட்டிக்கு செல்கின்றது. மேலதிக அடமானக் கடனிற்கெதிரான கொடுப்பனவு விரைவான வேகத்தில் கடனின் பெறுமதியைக் குறைக்க கூடியதாக உள்ளது. இவ்வாறு கடன்தொகையின் பெறுமதி குறையும் போது, வட்டிவீத அதிகரிப்பு ஏற்பட்டால் குறைந்த அடமானக்கடனின் தொகையின் கொடுப்பனவில் அதீத பழுவை ஏற்படுத்தாது குறைந்த வட்டிவீதத்தில் அதிகமாக கொடுப்பனவு செய்வதும், வட்டிவீத அதிகரித்த சூழ்நிலையில் முதலீடு அதிக பலனைக் கொடுக்கும். இவ்வாறு பலவகைகளிலும் பெறப்பட்ட அடமானக்கடனை குறைந்த காலத்தில் அதிகமாக குறைக்க எத்தனிப்பதே சிறந்த முடிவாகலாம்.


## HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

Raja Mahendran, P.Eng.
Broker / Owner



5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969

* INDEPENDENTLY OWNED AND OPERATED

**CONDO FOR SALE**

**HWY 427 & DUNDAS (TORONTO WEST)**

**Brand new condo. for sale.**

5% down.
2 Bedrooms.
2 Washrooms.
Corner units.

**CONDO. FOR SALE**

Brand new condo. for sale.
Only 10% down.
Closing fall 2015.
Rental guarantee available.

**CONDO FOR SALE**

Brand new condo with rental guar-antee. Only certain units available in Downtown Toronto. Close to CN Tower, Rogers center.
From $270k

**CONDO FOR RENT**

**YONGE & FINCH**

1 Bedroom condo for rent.
1 Parking. Available in mid of November 14, 2014.
Asking $1400.

**New condo projects By Tridel Special price**

.i. Islington & bloor
ii. Kennedy & 401
iii. AQUVASTA Project
- lakeview

# ரோகித் சர்மா உலக சாதனை

## விளையாட்டுத் தகவல்கள் 356

ரோகித் சர்மா உலக சாதனை. 264 ரன்கள் குவித்து, வரலாறு படைத்தார்.

இலங்கைக்கு எதிரான 4ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் ரோகித் சர்மா, 264 ரன்கள் குவித்து உலக சாதனை படைத்தார். இதுவே ஒருநாள் போட்டிகளில் தனியொரு வீரர் குவித்த அதிகபட்ச ரன்கள் ஆகும். கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த 4ஆவது ஒரு நாள் போட்டியில் பூவா, தலையாவில் வென்ற இந்திய அணி, முதலில் மட்டை பிடித்து ஆடியது. இதில் முதலில் மெதுவாக ஆடத் தொடங்கிய ரோகித், ஒரு கட்டத்தில் அதிரடியாக விளாசத் தொடங்கினார். இலங்கை பந்து வீச்சாளர்கள் அனைவரின் பந்துகளையும் பாரபட்சம் இல்லாமல் அவர் அடித்து ஆடினார். 173 பந்துகளை மட்டுமே சந்தித்து, 9 சிக்ஸர்கள், 33 பவுண்டரிகளுடன் 264 ரன்களைக் குவித்தார். 50ஆவது ஓவரின் கடைசிப் பந்தில் ஆட்டமிழந்தார். வீரேந்திர சேவாக் குவித்த 219 ரன்களே இதுவரை உலக சாதனையாக இருந்தது. இன்றைய ஆட்டத்தில் அதிரடி ரன் குவிப்பின் மூலம் ரோகித் அதை முறியடித்து முதலிடம் பிடித்தார். மேலும், ஒருநாள் போட்டிகளில் இரண்டு முறை இரட்டைச் சதம் விளாசிய ஒரே வீரர் என்ற பெருமையையும் பெற்றார். 200 ரன்களுக்கு மேல் குவித்தவர்களின் பட்டியலில் முதல் நான்கு இடங்களிலும் இந்திய வீரர்களே இடம் பெற்றுள்ளனர். இப்போதைய நிலையில், ரோகித் முதலிடத்தில் அவருக்கு அடுத்த இடங்களில் சேவாக், சச்சின் ஆகியோர் உள்ளனர். இந்த ஆட்டத்தில் இந்திய அணி, 50 ஓவர்கள் முடிவில் 404 ரன்கள் குவித்தது. இலங்கை அணியை 153 ரன் வித்தியாசத்தில் வெற்றி கொண்டது. ரோகித், ஆட்ட நாயகனாகத் தேர்வு பெற்றார்.

### வரலாறு படைத்த ரோஹித்!

இந்திய கிரிக்கெட் அணியின் தொடக்க வீரரான ரோஹித் சர்மா கிரிக்கெட் வரலாற்றை ஒரு கலக்கு கலக்கி விட்டார். ஒருநாள் போட்டிகளில் இரட்டைச்சதம் என்னும் எட்டிரமுடியாத இமாலய ஓட்டங்களை இருமுறை கடந்து உலகசாதனை படைத்துள்ளார். இந்திய அணியில் ஷேவாக், கம்பீர் இல்லாத நிலையில் யாரை தொடக்க வீரராக்கலாம் என்ற கேள்வி எழுந்தபோது டோனியின் சாய்ஸ் ரோஹித் சர்மா. அதிலும் 200-250 ஓட்டங்களை வெறும் 15 பந்துகளில் கடந்து ஒரு சாதனை, ஒரு இன்னிங்ஸில் அதிகபட்சமாக 33 பவுண்டரிகள், 264 ஓட்டங்களில் 186 ஓட்டங்கள் பவுண்டரி மற்றும் சிக்ஸர்கள் மூலம் எடுக்கப்பட்டவை என ரோஹித் ஒரே நாளில் நிகழ்த்தியிருப்பது பல உலக சாதனைகள். எல்லோருக்கும் ஒரே கேள்விதான், சச்சின், ஷேவாக் வரிசையில் ஒரு பொடியன் எப்படி இந்த ஒரு காதல் என பல சர்ச்சைகளில் சிக்கினார்.

இதைத் தொடர்ந்து உடல் கட்டுக்கோப்பு இல்லாமல், போர்ஃம் இல்லாமல் தவித்த ரோஹித்தை இந்திய அணி கழற்றிவிட்டது. ரோஹித் காதலை மறந்து வரலாறு படைத்த




சாதனையை நிகழ்த்த முடியும் என்பது தான். ஆனால் இது ரோஹித்தின் கடின உழைப்பு.


### கிரிக்கெட் பயணம்

ரோஹித்தின் அப்பா மராத்தி, அம்மா தெலுங்கு. விசாகப்பட்டினத்தில் பிறந்த ரோஹித் சர்மா, பிறகு மும்பையில் உறவினர்கள் வீட்டில் தங்கிப் படித்தார். பள்ளிகளுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டியில் தொடர்ந்து மூன்று சதங்கள் அடிக்க, மும்பையின் பிரபல பயிற்சியாளர்களில் ஒருவரான தினேஷ் லாட்டின் கவனம் இவர் மேல் குவிந்தது. இது மும்பை அணியில் அண்டர்-20யில் விளையாட வாய்ப்பை தேடித்தந்தது. பிறகு அண்டர்-17 மற்றும் அண்டர்-19 ஆகியவற்றில் இந்திய அணிக்காக விளையாடினார். இதைத் தொடர்ந்து 2006ம் ஆண்டு அண்டர்-19 உலகக்கிண்ணப் போட்டியில் இலங்கைக்கு எதிராக அதிரடியில் அசத்தினார். ரோஹித் தனது சாதனை பயணத்தை தொடர்ந்தார்.

### மும்பை அணித்தலைவர்

கடந்த 2006ம் ஆண்டு இந்தியா ஏ அணியில் இடம்பெற்று நியூசிலாந்து ஏ அணிக்கு எதிரான போட்டியில் விளையாடினார். 2006-2007ம் ஆண்டு ரஞ்சி கிண்ணப் போட்டியில் மும்பை அணிக்காக களமிறங்கினார். இந்த ஆரம்பப் போட்டியிலே குஜராத் அணிக்கு எதிராக 205 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். இதுவே ஐ.பி.எல் போட்டியில் மும்பை அணியின் அணித்தலைவராக உதவியது. மேலும் இவரது தலைமையில் மும்பை அணி சம்பியன்ஸ் லீக் போட்டியில் கிண்ணம் வெல்ல காரணமாகவும் இருந்தது. தவறிய ரோஹித் இந்திய அணியில் நுழைந்து பிறகு சாதனைகள் படைக்க ஆரம்பித்தார். ஒரு கட்டத்தில் ஐ.பி.எல் போட்டிகளின் நடுவில் இரவு நிகழ்ச்சிகளில் நடனம், நடிகையும் மொடல் அழகியுமான சோபியா ஹயாத்துடன்

ரோஹித் ஒரு கட்டத்தில் தனது தவறை உணர்ந்து பயிற்சியில் கவனம் செலுத்த ஆரம்பித்தார். தினமும் 3 மணி நேரத்திற்கு மேலாக ஜிம்மில் கடினமாக பயிற்சி செய்ய ஆரம்பித்தார். அணியில் கிடைக்கப்பெற்ற சிறிய வாய்ப்பையும் பயன்படுத்தி கொண்டார். இலங்கை அணிக்கு எதிராக தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி உலகசாதனை படைத்தது மட்டுமல்லாமல் தான் உலகக் கிண்ணம் வெல்ல தயாராக இருக்கிறேன் என்பதையும் நிரூபித்துள்ளார். இன்னும் கூட 50 ஓவர் விளையாடி இருப்பேன் இலங்கைக்கு எதிரான 4வது ஒருநாள் போட்டியில் ரோஹித் 264 ஓட்டங்கள் குவித்தது மட்டுமல்லாமல், 50 ஓவர் முழுவதையும் விளையாடினார். இதுகுறித்து அவர் கூறுகையில், காயத்தால் ஏற்கனவே சில மாதங்கள் ஓய்வு எடுத்து விட்டு வந்திருக்கிறேன். உண்மையிலேயே எனக்கு எந்த களைப்பும் தெரியவில்லை. நான் இருந்த மனநிலைக்கு இன்னும் 50 ஓவர்கள் கூட என்னால் தொடர்ந்து துடுப்பெடுத்தாட முடியும். கொல்கத்தா ஈடன்கார்டன் எனக்கு எப்போதுமே சிறப்பு வாய்ந்தது. இங்குதான் முதல் முறையாக ரஞ்சி கிரிக்கெட்டில் விளையாடினேன். எனது அறிமுக டெஸ்ட் சதத்தை அடித்தேன். அதில் இருந்து இங்குள்ள ரசிகர்கள் என்னை உற்சாகப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள் என்று தெரிவித்தார். தொடக்க வீரராக விளாசித் தள்ளும் ரோஹித் சர்மா கிரிக்கெட்டில் மட்டும் தனது கவனத்தை முழுமையாக செலுத்தினால் இன்னும் பல சாதனைகளை படைக்க முடியும் என்பது மறுக்க முடியாது என்பது இவர் படைத்த சாதனைகளில் இருந்தே தெரிகிறது.



எஸ். கணேஷ்


mhc

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4


Sell your home
FASTER MONEY
Sheppard & Meadowvale
$389,900
3 Bedrooms, 2 W Rooms
This Beautiful Townhouse Is In A High Demand Rough River Community
Niagara Dr & Simcoe St North
$507,990
4 Bedrooms, 4 W Rooms
PAll Brick And Stone Exterior. Hardwood Floors In Living/Dining Room
Ellesmere/ Markham
$435,000
3 Bedrooms, 1 W Room
Brick Bungalow In Demand Woburn Area Separate Side Entrance
Wilson & Conlin
$509,900
1+1Bedrooms, 3 W Rooms
Bathroom With HEATED FLOOR The Heart Of A Growing Neighborhood
RE/MAX
ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.Sc
Direct 416 - 276-1225
Your home sold in 30 days or we buy it
Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Office: 905-470-9800
Fax: 905-470-7770
Townline & Woodstream Ave
$444,900
4 Bedrooms, 3 W Rooms
Over $30,000 In Upgrades Spent, Bruce Espresso Oak Staircase
Conlin Rd/ Harmony Rd
$528,000
4+1 Bedrooms, 3 W Rooms
Hardwood Floors, Spectacularly Large Kitchen W/ Massive Granite Counter
10th Line/Hoover Park Drive
$634,900
4 Bedrooms, 3 W Rooms
Absolutely Gorgeous Full Brick & Stone 4 Yrs New Dir Access To 2 Car Grge.
Mccowan/Bur Oak
$738,800
4 Bedrooms, 4 W Rooms
Oversize-Garage, Double Driveway Upgraded KITCHEN CABINET
Markham Rd/Finch Ave
$449,900
3+1 Bedrooms, 2 W Rooms
FINISHED BASEMENT Ideal For Family With Small Children,
Coldstream/Ormond
$539,000
4 Bedrooms, 3 W Rooms
Eat-In Kitchen With Upgraded Kitchenaid Ss Appliances
Markham Road & Steeles Ave E
$660,000
4 Bedrooms, 3 W Rooms
Beautiful Detached 2 Garaged Home Easy Access To T.T.C Buses
14th Ave / 9th Line
$789,000
4 Bedrooms, 4 W Rooms
9' Ceilings And HARDWOOD FLOOR ALARM SYSTEM /Video Camera Around House
Bayly & Audley By The Lake
$499,500
3 Bedrooms, 4 W Rooms
Open Layout With Spacious Rooms, Breakfast Area And Family Room With Gas Fireplace
9th Line / 16th Ave
$550,000
3+2 Bedrooms, 3 W Rooms
Renovated Kitchen With Stainless Steel Appliances
Fincham & 16th
$699,000
4 Bedrooms, 3 W Rooms
Open Foyer With Spiral Oak Staircase And Ceramic Flr. Spacious, Bright Kitchen With B/Fast Area
Bethesda & 10th Line
$1,899,900
4 Bedrooms, 5 W Rooms
Over 5000 Sq Ft Sits On 1.04 Acres Backing To Sleepy Hollow Golf Course Finished W/O BsmtW/ Bar, Gas Fireplace
KZG 647-200-5833
I can also assist your Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# ஜனவரியில்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொது செயலாளருமாக இருக்கும் மைத்திரிபால சிறிசேனா மகிந்த ராஜபக்சவின் கூட்டணியில் இருந்து பிரிந்து எதிர்கட்சிகளின் கூட்டணியில் சேர்ந்துள்ளது இம்முறை தேர்தலில் ஒரு முக்கிய திருப்பு முனையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படு கிறது. மைத்திரிபால சிறிசேனா ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில்



தான் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனதா விமுக்தி பெரமுனை (JVP), சமூகநீதிக்கான தேசிய இயக்கம் (NMSJ) மற்றும் ஜாதிக ஹல உறுமய (JHU) என்பவற்றின் ஆதரவுடன் ஒரு பொது வேட்பாளராக எதிர்வரும் அதிபர் தேர்தலில் போட்டியிடப் போவதாக கூறியுள்ளார்.

இந்த எதிர்கட்சிகளின் ஒற்றுமை என்பது நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிபரின் ஆட்சிமுறையை ஒழிப்பதற்காக ஏற்படுத்தப் பட்டது. இது ஒரு நிரந்தர கூட்டணி அல்ல. இவ் எதிர்கட்சிகளின் கூட்டணியின் உடன்படிக்கை ஒன்று இன்னும் கைச்சாத்திடப்படவில்லை. இதனால் இக்கூட்டணியைப் பற்றி கூட்டணியிலுள்ள ஒவ்வொரு கட்சித்தலைவர்களும் வெவ்வேறு விதமாக கூறினாலும் எல்லோரும் தாங்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிபரின் ஆட்சிமுறையை ஒழிக்க ஒற்றுமையாக செயல்படுவோம் என்று கூறுகின்றனர். இப் புதிய எதிர்க்கட்சிக் கூட்டணியினர் கூறுவதில் சில:

- இக்கூட்டணியின் பொது வேட்பாளர் அதிபரானால் அவர் 100 நாட்கள் மட்டுமே நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிபராக பதவி வகிப்பார்.
- ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக கொண்ட தேசிய அரசாங்கம் நியமிக்கப்படும்.
- மூன்று மாதத்திற்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிபர் முறை ஒழிக்கப்பட்டு இலங்கை அரசின் அரசியல் சாசனம் திருத்தப்படும்.
- இதன் பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப் பட்டு பொதுத்தேர்தல் நடைபெறும். இத்தேர்தலில் வெல்லும் கட்சி தங்களது பிரதமரை தெரிவு செய்வார்கள்.
- இலங்கை அதிபரது நிறைவேற்று அதிகாரம் பறிக்கப்பட்டாலும் அவருக்கு சில அதிகாரங்கள் கொடுக்கப்படும். ஆனால் பிரதமரை தெரிவு செய்யும் அதிகாரம் இருக்காது.
- தற்போதைய அதிபர் மகிந்த ராஜபக்ச தோல்வியுற்றாலும் எக்காரணத்தை கொண்டும் அவர் சர்வதேச போர்க் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தப்பட மாட்டார். அவர்மீது இலஞ்ச ஊழல்பற்றி விசாரணை நடத்தப்படும். ஆனால் அவர்மீது நடைபெறும் சர்வதேச விசாரணைகளில் அவருக்கு ஆதரவாக புதிய அரசு செயல்படும்.
- இலங்கை அரசியல் சட்டத்தின் 18ஆவது அரசியல் அமைப்பு திருத்த சட்டத்தை இரத்து செய்து, 17ஆவது திருத்த சட்டம் மீண்டும் அமல்படுத்தப்படும். 17 ஆவது சட்டமூலம் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த தமிழ்கட்சிகள் உட்பட எல்லா கட்சிகளின் ஆதரவுடன் ஒக்ரோபர் 2001 இல் நிறைவேற்றப்பட்ட சுயாதீனமாக பல்வேறு பட்ட அமைப்புகளுக்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது சம்பந்தப்பட்ட திருத்தமாகும். 18ஆவது சட்டமூலம் என்பது செப்ரெம்பர் 2010 இல் தற்போதைய அரசால் இவ்வமைப்புகளுக்கு (தேர்தல் திணைக்களம், மனிதஉரிமைகள் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல்) நாட்டின் அதிபரே உறுப்பினர்களை நியமனங்கள் செய்வார் என்ற திருத்த மாகும். அத்துடன் 18ஆவது திருத்தமே அதிபர் தேர்தலில் ஒருவர் இருமுறை மட்டுமே போட்டியிடலாம் என இருந்ததை மாற்றியமைத்த திருத்தமும் ஆகும்.

கொழும்பு ஊடகங்களின் தகவல்களின்படி எதிர்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனாவிற்கு மறைமுக ஆதரவளிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் இந்த எதிர்கட்சிகளின் பொதுவேட்பாளரின் தேர்தல் பிரசாரங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கமாட்டாது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதேவேளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு அவசரப்பட்டு தீர்மானங்கள் எடுக்காது என நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேனா ஆளும் கூட்டணி அரசில் இருந்து வெளியேறியதைத் தொடர்ந்து இதுவரை 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கூட்டணி அரசில் இருந்து வெளியேறி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளனர்.

ஜாதிக ஹல உறுமயவின் பொது செயலாளரான மதகுரு அத்துரலிய ரத்தன தேரர் தெரிவிக்கையில் தனது ஆறு மாதகால முயற்சியே இந்த எதிர்கட்சிகளின் பொதுவேட்பாளர் தெரிவு என்றார். மகிந்த ராஜபக்ச நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிபர் முறையை ஒழிக்க மறுத்ததாலேயே இப்படி ஒரு எதிர்கட்சிகளின் பொது வேட்பாளர் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற முடிவுக்கு தான் வந்ததாக கூறினார். முதலில் ஐக்கிய தேசியக்கட்சிக்குள் ஒருவரை நியமிக்க யோசித்ததாகவும் ஆனால் அவர்களுக்கு இடையே கரு ஜெயசூரியாவையோ, ரணில் விக்கிர சிங்காவையோ அல்லது சஜித் பிரேமதாசா வையோ பொதுவேட்பாளராக நியமிப்பது என்று முடிவு எடுக்க இயலாமல் இருந்ததாலேயே தான் மைத்திரிபால சிறிசேனாவை நியமிக்கலாம் என ஆலோசனை வழங்கியதாகவும் மதகுரு அத்துரலிய ரத்தன தேரர் டெயிலி மிரர் ஊடகத்திற்கு நவம்பர் 26, 2014 இல் தெரிவித்திருந்தார். மேலும் தெரிவிக்கையில் தங்களுக்கு வெற்றி வாய்ப்பு இருந்தும் நாட்டின் நன்மைக்காக ஒரு பொதுவேட்பாள ரின் கீழ் அணிதிரள முன்வந்த ரணில் விக்கிரமசிங்க ஒரு தியாகி. இதனாலேயே அமையவிருக்கும் தேசிய அரசாங்கத்தில் ரணில் விக்கிரமசிங்காவை பிரதமராக்க வேண்டும் என தான் தெரிவித்ததாகவும் கூறினார்.



எதிர்கட்சிகளின் இந்த புதிய கூட்டணி மற்றும் பொதுவேட்பாளர் தொடர்பாக கருத்து தெரிவித்த மகிந்த ராஜபக்ச யூன் 2013 இல் விருது பெற மைத்திரிபால சிறிசேனா அமெரிக்கா சென்றிருந்தார். இதன்போது வெளிநாட்டுச் சக்திகள் மைத்திரிபாலாவுடன் இலங்கை அரசினை மாற்றுவதுபற்றி உடன்பாடுகள் எட்டப் பட்டிருக்கலாம். மைத்திரிபாலா சிறிசேனா இந்த அமெரிக்க பயணத்தின் பின்பு மாறிவிட்டார் என்றார்.


**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**
**இலவச ஆலோசனை வழங்கப்படும்**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் "எம்மை நாம் பாதுகாப்பது எப்படி" என்ற புத்தகம் விற்பனைக்கு உள்ளது.

இலவச ஆலோசனைகளுக்கு: **647.456.9796**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
**Cell: 613 850 9931**

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**



நந்தா ஐயாத்துரை

**Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555**

# SPECIAL DEAL FOR BUYERS & SELLERS

என் மூலம் வீடு வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலங்கை அல்லது இந்தியா சென்று வர இலவச விமானச்சீட்டுகள் எந்தவொரு குலுக்கலும் இன்றி வழங்கப்படும். அல்லது வேண்டுமானால் அதற்கு சமமான பணம் வழங்கப்படும்.

| Purchase Price | Number of free tickets |
|---|---|
| 400,000 - 674,999 | 1 |
| 675,000 - 849,999 | 2 |
| 850,000 - 999,000 | 3 |
| 1,000,000+ | 4 |

Also Free Moving

## March Special For Sellers

My listing Commission is Flate Rate of - $2,999 + HST
My listing Commission For Condo. is Flate Rate of - $999 + HST

**Services Offered:**

- Open Houses
- Professional Photography
- Flyer Distribution for Your Property
- Home Staging
- Free Moving

**Get More $$$ For Your House By Calling Me!**

என்னை அழைப்பதன் மூலம் உங்கள் கட்டணங்களை எவ்வாறு குறைப்பது உங்களின் வருமானத்துக்கு ஏற்ப வீடுகளை எவ்வாறு தெரிவு செய்வது போன்ற பல்வேறு விடயங்களுக்கான ஆலோசனைகளை வழங்கி உங்கள் முதலீட்டுக்கான உச்ச பயனை அடைய என்னை அழையுங்கள்.

(This Deal Start From March 01st to November 30th)



## Lourdson Antonipillai

(Sales Representative)

**Dir: 416.738.8824**

**Offi: 905.201.9977**

HomeLife / Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, #205, Markham ON, L3S 4N8

*Independently Owned & Operated


RemaxShan.com
Scarborough
Sheppard/Rouge River
$659,900
Detached
4+2 Beds 5 Baths
Oshawa
Wilson/Taunton
$439,900
Detached
4 Beds 3 Baths
Oshawa
Coldstream & Ritson
$469,500
Detached
4 Beds 3 Baths
Whitby
401/Thickson/Burns
$429,900
Detached
4+1 Beds 4 Baths
Whitby
Anderson And Taunton
$434,500
Detached
3 Beds 3 Baths
Ajax
Rossland And Westney
$400,000
Detached
3+1 Beds 3 Baths
Ajax
Harwood And Kinstston
$429,000
Detached
3 Beds 3 Baths
Ajax
Taunton And Harwood
$474,900
Detached
3 Beds 3 Baths
Ajax
Audley/Williamson
$489,000
Detached
4 Beds 3 Baths
Ajax
Harwood/Rossland
$489,900
Detached
3 Beds 3 Baths
MORTGAGE?
NO PROBLEM
BMO
RBC
CIBC
TD
PRIVATE LENDING ALSO AVAILABLE
Shan Thayaparan
Sales Representative
DIR 416.567.7675
shan@remaxshan.com
#1
RE/MAX
RE/MAX VISION
REALTY INC., BROKERAGE*
*Independently Owned & Operated. Not inteded to solicit
BUS 416.321.2228
#1 - 2210 Markham Rd.
Scarborough, ON M1B 5V6

# எது மடமை?



வாசனை மலர்கள் கொய்து
மாலைகள் கட்டிச் சூட்டி
பூசனை புரிந்து நாளும்
பொழுதுமாய் வணங்கி மேலும்
காசினை விட்டு வீசி
கடுவிளம் பரங்கள் செய்து
பேசரும் விழாவெ டுப்பார்
பிச்சனைச் சிறிதுங் காணார்!

கோயிலை வீழ்ந்து சுற்றிக்
கொள்ளுவர் அங்கம் நோக
தீயினில் குளிப்பர் முள்ளு
மிதிவடி செல்வர் ஏறி
வாயினில் நாவில் வேலை
வலிந்திருந் தேற்றித் தூக்குக்
காவடி ஆடி னாலும்
கடவுளைக் காண மாட்டார்!

காசிக்குப் பயண மாவர்
கங்கையில் மூழ்கி மீள்வர்
தேசங்கள் போற்றும் ஏனைத்
திருத்தலம் எல்லாம் காண்பர்
மாசிலாத் தெய்வ சீலர்
வாக்குகள் கேட்பர் ஆயின்
ஈசனைக் காண மாட்டார்
எடுத்தவிப் பிறப்பும் வீணே!

என்றெலாம் இகழ வேண்டாம்
எதனையிங் கெவர்செய் தாலும்
நன்றவர் மனதுக் கென்றால்
நமக்கொரு குறையு மில்லை
என்றுமே பிறரின் வாழ்க்கை
இன்பத்துக் கிடையூ றாக
நின்றவர் இல்லைச் சைவ
நீதியும் அதுவன் றாமே!

கடவுளைக் கண்டா லென்ன
காணாது போனா லென்ன
நடைமுறை வாழ்வின் அச்சு
நம்பிக்கை என்ப தாலே
கடவுளைக் கருதிச் செய்யும்
கடமையே கடவு ளாவர்
மடமையென் றிகழ் வோமாயின்
மடயர்கள் ஆவோம் நாமே!



- தமிழ்வேள் விநாயகர் கந்தவனம் -

## மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

## இராப்போசன விருந்தும் பொதுக்கூட்டமும

வெள்ளி விழா ஆண்டின் பூர்த்தி நிகழ்வாக இராப்போசன விருந்தும் பொதுக்கூட்டமும் நடைபெற உள்ளது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்: ***Ellesmere Community Center***
***20 Canadian Rd, Toronto, ON M1R 4B4***
**காலம்:** சனிக்கிழமை டிசம்பர் 27, 2014 **@ 6:00pm**

தொடர்புகளுக்கு: ***416.705.1493 / 416.451.8427 / 905.861.9323***
***www.mahajanan.org***

## அச்சுநகர் புனித வளனார்

## நத்தார் ஒன்றுகூடல்

அச்சுநகர் புனித வளனார் ஆலய பங்கு மக்களின் வருடாந்த நத்தார் ஒன்றுகூடல்.

**காலம்:** டிசம்பர் 06, 2014
**நேரம்:** சனிக்கிழமை மாலை 6:00 மணிக்கு
**இடம்:** இலக்கம் 30 சுவெல்ஸ் வீதியில் அமைந்துள்ள மல்வன் சமூக கலாசாரா நிலையத்தில் ***(Malvern Recreation Centre, 30 Sewells Road, Scarborough)*** நடைபெறவுள்ளது.
தொடர்புகளுக்கு: யோகா: ***416.319.8782***


**Computek College**
BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY
Registered as a private career college under the Private Career Colleges Act, 2005

Enroll in a Diploma Course and receive a FREE Laptop
(Offer valid until Dec 31, 2014)





Markham Campus Computek Students receiving **Free Laptops!**

**Food Handler Certification**
Saturday, Nov 15th

**Personal Support Worker (Weekend Class)**
Saturday, Nov 29th

Are you unemployed or under-employed?
Are you receiving or received EI?
Re-entering workforce after Maternity or Parental leave?

SECOND CAREER & OTHER FUNDING OPTIONS AVAILABLE CALL FOR DETAILS

### DIPLOMA COURSES

| | |
|---|---|
| Enterprise Network Engineering | 50 wks |
| Community Services Worker | 50 wks |
| Int. Application Development | 50 wks |
| Early Childcare Assistant | 38 wks |
| Personal Support Worker | 32 wks |
| Accounting & Payroll Admin | 35 wks |
| Medical Office Admin | 28 wks |
| Network Engineering | 28 wks |
| Computerized Accounting | 26 wks |
| Business Administration | 26 wks |

PART-TIME COURSES ( WEEKEND /EVENING)

Bank Teller, MS Office
Food Handler, Food Service Worker
AccPac, Simply Accounting, Quick books
Exam Prep: A+, MCSA, MCSE
ICDN 1, ICDN 2, Canadian Securities Course
C/C++, C#, Java, VB.net, HTML, SQL
Medical Coding & Billing
CPR & First Aid

WWW.COMPUTEK.EDU

Financial assistance may be available for those who qualify

| Toronto Campus | Markham Campus | Scarborough Campus |
|---|---|---|
| 301-2347, Kennedy Rd. (Kennedy/Sheppard) | 202 - 7 Eastvale Drive (Markham / Steeles) | 248-2390 Eglinton Ave E Kennedy/Eglinton) |
| 416-321-9911 | 905-471-3344 | 416-285-9941 |

# கல்விச்சபை உறுப்பினர் தேவையா?

சில நாட்களுக்கு முன்னர் Toronto Star பத்திரிகையில் எட்வார்ட் கீனம் என்பவர் மேற்படி தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதை வாசித்ததன் விளைவாகவே நான் இதனை எழுதுகிறேன்.

ஒக்ரோபர் 27ந் தேதி அன்று, மாநகரசபை தேர்தல் நடைபெற்றபோது கல்விச்சபை உறுப்பினர்களுக்குமான தேர்தல் நடைபெற்றது. வாக்குச் சீட்டினைப் பார்வையிட்ட வாக்காளர்கள் நகரசபை முதல்வருக்கும் வட்டார நகரசபை உறுப்பினருக்கும் யாரைத் தேர்ந்தெடுப்பது என்ற ஆலோசனையின் பின்னரே வாக்குச் சீட்டினைப் பெற்றிருப்பார்கள். ஆனால் அதேஅளவு முன்னேற்பாடான சிந்தனையுடன் கல்விச் சபை உறுப்பினர் தேர்வில் நாட்டம் காட்டியிருக்க மாட்டார்கள் என்பது உண்மை. யாருக்கு வாக்களிப்பது என்பதைத் தீர்மானிக்க முடியாமல் திக்குமுக்காடியவர்கள் பலர் முடிவில் கல்விச்சபைக்கான வேட்பாளர் ஒருவருக்குமே வாக்களிக்காமல் சென்றுள்ளார்களாம். ஏறக்குறைய தேர்தலில் வாக்களிக்க வந்தவர்களில் 10 முதல் 15% த்தினர் அப்பகுதிக்குரிய வேட்பாளர் பட்டியலை எட்டியும் பார்க்காமல் சென்று விட்டார்களாம்.

எம் மாகாணத்தில் 72 பாடசாலைச் சபைகள் உள்ளன. இதில் ரொறன்ரோவில் மாத்திரம் ரொறன்ரோ மாவட்ட பாடசாலைச்சபை, ரொறன்ரோ கத்தோலிக்க பாடசாலைச்சபை, ரொறன்ரோ அரசு பிரஞ்சுப் பாடசாலைச்சபை, ரொறன்ரோ பிரஞ்சு கத்தோலிக்க பாடசாலைச்சபை என நான்கு தனித்தனியான பாடசாலைச்சபைகள் செயற்படுகின்றன. தற்சமயம் ரொறன்ரோ பாடசாலைச் சபையில் 22 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களின் கண்காணிப்பில் 588 பாடசாலைகள் உள்ளன. ரொறன்ரோ கத்தோலிக்க பாடசாலைகளுக்கு 12 உறுப்பினர் உள்ளனர. அவர்கள் கண்காணிப்பில் 201 பாடசாலைகள் உள்ளன. பிரெஞ்சு அரசுப் பாடசாலைகள் 12 அதற்கான உறுப்பினரும் 12. பிரெஞ்சு கத்தோலிக்க பாடசாலைகள் 55. இதற்கும் 12 உறுப்பினர். மொத்தமாக 58 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் அன்பளிப்புத் தொகை $5,900 ஆகி உள்ளது. அதேசமயம் ஒரு மாணவர் சார்பாகத் தரப்படும் மானியம் அதிகரித்துக் கொண்டு போகிறது. TDSB மாணவர் தொகை 232,000 செலவிடும் தொகை $3 பில்லியன். TDSB 451 ஆரம்பப் பாடசாலைகள், 110 இரண்டாம் நிலைப் பாடசாலைகள், TDCSB 168 ஆரம்பப் பாடசாலைகள், 30 இரண்டாம் நிலைப் பாடசாலைகள் 300,000 மணவர்கள் இருந்த போது வழங்கப்பட்ட அன்பளிப்புத் தொகையில் இதனால் மாற்றம் இல்லை. அதே $26,000 தான் இப்போதும் கிடைக்கிறது. ஆக இவர்கள் பெறும் ஊதியம் தான் எவ்வளவு. அவர்களுக்குத்தான் வெளிச்சம். கல்விச்சபையில் தனியான அலுவலகம், குழு உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு அமர்வுக்கும் மேலதிகமாக $50, பொதுசனத்துக்காக $100 தொலைபேசிக் கட்டணம், பயணச் செலவு என ஊதியத்துக்கு மேற்பட்ட அனுகூலங்களும் (fringe benefits) இல்லாமல் இல்லை. பிழைத்துக் கொள்வார்கள். இது தேவையா?

இவ்வருடத்துக்கான செலவு வரவு அறிக்கையில் கத்தோலிக்க பாடசாலைச்சபை (TDCSB) $89,000,000 துண்டு விழ உள்ளதாம். இதனை எவ்விதம் ஈடு செய்வார்கள்? மாணவருக்கு வழங்கவுள்ள கல்விச்செயல் திட்டங்களில் எதனையாவது வெட்டாமல் இந்த இழப்பினை ஈடு செய்ய வேண்டும். செய்ய முடியுமா? மாகாண அரசின் கீழ் இயங்குகின்ற கல்விச்சபையின் கட்டமைப்பு, செயற்பாடுகள் பற்றி மைக் ஹாரிஸ் ஆட்சிக்கு முன் ஆட்சிக்குப்பின் என இரு கட்டங்களாக வகுக்க முடியும். மைக் ஹாரிஸ் கூட முதலில் கல்விப்சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பின்னர் படிப்படியாக வளர்ந்து மாகாண முதலவர் ஆகியவர். எனவே கல்விச்சபை பற்றிய முழுமையான அறிவுடையவராக இருந்தமையால் பாரிய பல மாற்றங்களை தனது ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்தார். 1997ம் ஆண்டினிலே கொன்சவேர்ரிவ் கட்சி ஒன்ராறியோ மாநிலத்தின் ஆட்சியை NDP யிலிருந்து கைப்பற்றியது. மைக் ஹாரிஸ் மாகாண முதல்வர் ஆனார். முதலில் அந்த அரசு ஒன்ராறியோவில் தனித்தனியாக இயங்கிய ரொறன்ரோ, ஸ்காபரோ, வட யோர்க், கிழக்கு யோர்க், எற்ரோபிகோக், யோர்க் நகரங்களை இணைத்து ரொறன்ரோ மாநகரமாக்கியது. 1997ம் ஆண்டிலே ஒன்ராறியோ அரசு நகரங்களை இணைத்து ஒரு மாநகரத்தினை உருவாக்கிய காரணத்தினால் அவை ஒவ்வொன்றிலும் தனித்தனியாக இயங்கிய கல்விச்சபைகளும் ஒன்றாகின. இதற்காக கல்விச்சபைகளைக் குறைப்பதற்கான சட்ட மூலத்தை (Fewer Schools Board Act Bill l104) அங்கீகரித்தது. இதன் விளைவாக மாகாணத்தில் இயங்கிய 124 கல்விச்சபைகள் 72ஆக சுருங்கின. கல்விச்சபை உறுப்பினரின் தொகையும் 1900த்திலிருந்து 700 ஆகியது.

ரொறன்ரோ மாநகரப்பாடசாலைச் சபைக்கான உறுப்பினர் தொகை 74ல் இருந்து வெறும் 22 ஆகியது. ரொறன்ரோ மாவட்ட பாடசாலைச்சபையின் கீழ் 600 பாடசாலைகளும் 300,000 மாணவர்களுமிருந்தனர். கல்விச்சபை உறுப்பினர் பதவி ஒரு முழுநேர வேலை அல்ல அதுவெறும் பகுதி நேர தன்வயத் தொண்டு எனக்கூறிய மாகாண முதல்வர் அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊதியத்தை, அது ஊதியமல்ல வெறும் அன்பளிப்பே (Honorarium) எனக்கூறினார். வருடமொன்றிற்கு அவர்கள் ஒவ்வொருத்தருக்கும் வழங்கப்பட்ட தொகை வெறும் $5,000 மாத்திரமே. அதாவது மைக் ஹாரிஸ் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற 1997ஆண்டில் கல்விச்சபை உறுப்பினர் பெற்ற ஊதியம் $40,000. இதன் விளைவு? பல கல்வியாளர்கள், ஓய்வு பெற்ற அதிபர்கள் எனத் தரமுடைய பலர் அடுத்து வந்த தேர்தலில் பங்கு பற்றவேயில்லை. இந்தப் பிச்சைக் காசுக்காகத் தமது நேரத்தை வீணாக்கு வதிலும் பார்க்க வேறு நல்ல தொழில் செய்து சம்பாதிக்கலாமே என்ற உத்வேகம்

Toronto District School Board

அவர்களை கல்விச்சபை பக்கம் பார்க்காமலே இருக்க வைத்து விட்டது. ஆகவே வேறு வேலை கிடைக்காமல் அல்லல் பட்டவர்களுக்கும் அரசியலுக்குப் புகுவதற்கான அடித்தளமாக இதனை உபயோகிக்க விரும்பியவர்களுக்கும் கல்விச் சபை போக்கிடமாகியது. இவர்களில் பலருக்கு கல்வித் திட்டங்கள் பற்றிய எந்தவிதமான அறிவும் இல்லாமல் இருந்தது கவலைக்குரியது. அவர்கள் கல்வித் திட்டங்களில் காட்டிய அக்கறையிலும் பார்க்க தமது வாழ்வை வளமாக்க என்ன செய்யலாம் என்பது பற்றியே சிந்தித்தார்கள். மைக் ஹாரிஸ் ஆட்சிபோய் லிபரல் கட்சியின் டால்ரன் மக்குவின்ரியன் ஆட்சிக் காலம் வந்தமை இவர்களது ஆசை அறுவடைக்கு உதவிற்று. அந்த ஆண்டு ஜுலை மாதத்தில் இவர்கள் தமது ஊதியத்தை 420% உயர்த்தினார்கள். இது வருடமொன்றிற்கு $5,000 திலிருந்து $26,000 ஆக உயர்ந்தது. ( National Post) பெயரளவுக்கு அவர்கள் வருடாந்த அன்பளிப்பு $5,900 மாத்திரமே. ஆனால் நகுக்காக இத் தொயினை $26,000. எப்படி மாணவர் பதிவுக்காக (enrollment) ஒவ்வொருவரும் $25,000 வரை பெறலாம். அவர்களது பணியில் ஏதாவது? ஹூம்! அதைப்பற்றி யார் சிந்தித்தார்கள். அது கிடக்கிறது. நாம் எமது பாட்டினைப் பார்ப்போமே என்பது அவர்களது சித்தாந்தம்! கல்விச் சபைக்கூட்டம் தெருச்சண்டையாகி விட்டதைக் காணமுடிகிறது. அவர்களுக்கிடையே நடைபெறும் அடிபிடியைக் கண்காணிப்பதற்காக கூட்டநேரத்தில் பொலிசார் வந்து நிற்பது கேவலம். கல்விச் சபை உறுப்பினர் ஒருவர் கல்வி இயக்குனரை பலாத்காரமாக அறையுள் முடக்கி வைத்தார் என்ற குற்றச்சாட்டும் கல்விச்சபையின் கீழ்த்தரமான நடவடிக்கைக்குச் சான்று பகர்கின்றன. இம்முறை தேர்ந்தெடுக்கப்பட்ட 22 பேர்களில் 11 பேர்கள் புதியவர்கள். இந்தப் 11 பேர்களில் நமது பார்த்தி கந்தவேள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் அவர் கல்வி பற்றியும் நிர்வாகம் பற்றியும் நன்கு தெரிந்தவர். ஆகவே அவரை வாழ்த்தி வரவேற்கலாம். புதிய கல்விச்சபை டிசம்பர் முதலாம் தேதி பதவியேற்கிறது. அதன் செயற்பாடுகளைப் பற்றி விரைவில் தெரிந்து கொள்வோம். கல்விச்சபை ஆற்றும் பணிகள் தான் என்ன? மைக் ஹாரிஸ் ஆட்சிக்கு முன்னர் குடிமக்கள் செலுத்தும் வரியில் ஒரு பகுதி ஆதனவரி எனப்பட்டது. அந்த வரி நேரடியாகவே கல்விச்சபையினுக்கு வழங்கப்பட அதனை வைத்தே கல்விச்சபைகள் தமது வரவு செலவுத் திட்டத்தினைத் தயாரித்தன. இந்த முறையினை மைக் ஹாரிஸ் முற்றாகவே மாற்றி விட்டார். இதனால் கல்விச்சபையின் ஒரு கை ஒடிந்தது. அப்படி என்றால் கல்விச்சபை தனது வரவு செலவு அறிக்கையை எப்படி அமைப்பது. அதற்கும் அவர் விடை பகர்ந்தார். கல்விச்சபையில் உள்ள மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட ஒரு விகிதாசாரப்படி மாகாண அமைச்சு மானியம் வழங்கியது. அதனைக் கூடத் தீர்மானிக்கும் அருகதையை கல்விச்சபையினுக்கு வழங்க அவர் மறுத்து விட்டார். இது கத்தோலிக்க பாடசாலைகளுக்கு நல்ல வாய்ப்பாக அமைந்தது. வேறு சமயம் சார்ந்த பிள்ளைகளை தமது பாடசாலையில் அனுமதிக்க வெகுவாகப் பிகு செய்தவர்கள் இப்பொழுது மாணவரைச் சேர்ப்பதில் தாராளம் காட்டினார்கள். எல்லாம் பணவருவாய் பற்றிய அறிவே.

அதுசரி கல்விச்சபைக்கு வேறு ஏதாயினும் பணி உண்டா? எதைக் கற்பிக்க வேண்டும், எப்படிக் கற்பிக்க வேண்டும் என்பதை மாகாணக் கல்வி அமைச்சே தீர்மானிக்கிறது. அதனை செய்விப்பதற்கான தலையாய பொறுப்பு மாத்திரம் கல்விச்சபையினுக்கு.



**பொன். கனகசபாபதி**
**அதிபர்**

தொடர்ச்சி 15ஆம் பக்கம்


## LAW OFFICE
### STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor

*3 Catherine Avenue,*
*Aurora, Ontario*
*L4G 1K4*

*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*

## COMMERCIAL UNITS FOR SALE
Main Floor. Retail commercial. Units for quick sale in a reputable. Indoor mall. Tenented. Vacant position Possible. Price included one parking. Heart of scarborough. Close to all amenities. Only a few units available for your business. Only $148,888. (Don't miss)

**Pl. call: 416.315.9397**

# அன்புடைமை - 7

திருவள்ளுவரின் 77வது குறளில் இருந்தே இந்த இதழின் தொடர் கட்டுரையை ஆரம்பிப்போம்.

'என்பி லதனை வெயில்போலக் காயமே
அன்பி லதனை அறம்'

இந்தக் குறளிற்குப் பரிமேலழகர் 'என்பு இல்லாத உடம்பை வெயில் போலக் காயும் அன்பிலாத உயிரை அறக் கடவுள்' என்றவாறு பொருள் உரைத்துள்ளார். 'அறம் எதுவென அறிந்தும் அதனைக் கடைப் பிடிக்காதவரை, அவரது மனச்சாட்சியே வாட்டி வதைக்கும். அது வெயிலின் வெம்மை புழுவை வாட்டுவது போலிருக்கும்.' என்று கலைஞர் இதற்கு விளக்கம் கொடுத்துள்ளார். 'எலும்பு இல்லாத வாடும் புழுவை வெயில் காய்ந்து வருத்துவது போல் அன்பு இல்லாத உயிரை அறம் வருத்தும்.' என்று மு.வ விளக்கம் கொடுத்துள்ளார். 'எலும்பில்லாத புழுக்களை வெயில் சுடுவது போல், அன்பில்லாத உயிர்களை அறம் துன்புறுத்தும்' என்று சாமி சிதம்பரனார் விளக்கம் கொடுத்துள்ளார். இந்தக் குறளில் அன்பு அல்லாத உயிர்களை அறம் வருத்தும் என்று கூறப்படுகின்றது.


இந்த உலகத்தில் வாழும் 7 பில்லியன் மக்களும் பால், நிறம், இனம், உயரம், நிறை எனப் பலவற்றாலும் வேறுபட்டு காணப்பட்டாலும் எல்லோரும் அன்பை விரும்புபவர்கள் என்ற ஒற்றுமையைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றோம். கடந்த இதழில் நாம் முதலில் எம்மீது அன்பைச் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேன். ஆம் இது முற்றிலும் உண்மையான விடயம் எனக் கருதப்படு கின்றது. எம்மீது நாம் அன்பு கொள்ளும் பொழுது மற்றவர்களும் எம்மீது அன்பு செலுத்துவார்கள் எனக் கருதப்படுகின்றது. எமது உள்ளுணர்வில் அன்பு இன்றி வெளியி ல் அன்பினைத் தேடினால் அது கிடைக்காது என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள். எமது உள்ளுணர்வின் விம்பமே வெளியில் உள்ள தொடர்பாக்கம் என்று கருதப்படுகின்றது. நல்ல உணவின் மூலமும், உடற்பயிற்சி மூலமும் உடலைப் பேணுவது போல் எங்கள் உள்ளத்தையும் நாம் அன்பினால் நிரப்பி நன்கு பேண வேண்டும். சுய முன்னேற்ற நூல்களாலும், ஆன்மீக வழிகாட்டிகளாலும் இந்தக் கருத்தே வலியுறுத்தப்படுகின்றது. இந்தக் கட்டுரையின் நோக்கமும் உங்கள் உள்ளத்தை அன்பினால் நிரப்புவதையே முதன்மையாகக் கொண்டுள்ளது.

எம்மைச் சுற்றிப் பெறுமதி மிக்க ஒரு சமூகத்தை நாங்கள் வைத்திருக்க வேண்டும். எம்மீது நாம் அன்பு செலுத்துவதற்கு நாம் எதைச் செய்ய வேண்டும் என்று ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கைகளைச் செய்ய



வேண்டும். இதை நாம் தான் ஆராய்ந்து கண்டுகொள்ள வேண்டும். எங்கள் உடலை நல்ல முறையில் பேணுவதும் எம் உள்ளத்தை அன்பால் நிரப்புவதற்குத் தேவையான ஒரு நடவடிக்கை ஆகும். நாம் வாழும் சூழலைத் துப்பரவாக வைத்திருப் பதும் ஒரு தேவையான நடவடிக்கை ஆகும். மற்றவர்களுடன் ஒப்பீடு செய்து எம்மைக் குறைத்துக் கொள்ளக் கூடாது. ஆன்மீக ஈடுபாட்டை அதிகரித்துக் கொள்ள வேண்டும். உங்களிடம் உள்ள திறமைகளுக்கேற்ற விடயங்களைச் செய்து கொள்ள வேண்டும். உங்களுக்கு மகிழ்ச்சி தரும் இடங்களில் நேரத்தைச் செலவழிக்க வேண்டும். கடந்த காலத்துச் சுமைகளை மனதில் போட்டுக் குழப்பாது இந்த நேரத்தில் செய்ய வேண்டிய விடயங்களில் கவனத்தைச் செலுத்த வேண்டும். எங்கள் மீது நாம் அன்பு செலுத்து வது என்பது அகங்காரம் கொள்ளுதல் என்று அர்த்தப்படக் கூடாது என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றார்கள். சுய அன்பு என்பது எம்மீது அக்கறை கொள்ளுதல், எம்மைப் பற்றி நாமே அறிந்து கொள்ளுதல், எமது பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளுதல், எமது வலிமை பற்றியும் குறைபாடுகள் பற்றியும் நேர்மையான கருத்தை வைத்திருத் தல் என்று அர்த்தம் கொள்ளலாம். எம்மீது நாமே அன்பு செலுத்துதல் (Love your self or Self Love) உளவியலில் ஒரு முக்கியமான விடயமாகக் கருதப்படுகின்றது.

எதிர் மறையான விடையங்களைச் செய்ய முன்பு நிறையச் சிந்திக்க வேண்டும். அன்புடைமை கொண்டு வாழ்வதற்கு கண்ணாடிக்கு முன்நின்று நான் என்மீது அன்பு கொண்டவராக இருக்க வேண்டும் என்ற ஆழமான உணர்வோடு உறுதி யெடுத்துக் கொள்ள வேண்டும். எம்மீது நாம் கோபம் அல்லது வெறுப்புக் கொள்ளாது இருக்க வேண்டும். மற்றவர்கள் உங்களைப் பாராட்டும் பொழுது நன்றி செலுத்தி விட்டு அந்தப் பாராட்டை உளமார ஏற்றுக் கொள்ளுங்கள். அது உங்கள் மீது உங்களுக்குள்ள அன்பை அதிகரிக்கும். உங்களின் நல்ல நண்பனாக நீங்களும் இருந்து கொள்ளுங்கள். உங்களிடம் உள்ள நேர் மறையான விடயங்களை நினைத்து மகிழ்ச்சியடையுங்கள். "நான் என்னை விரும்புகிறேன்" என்று அடிக்கடி நினைத்துக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையின் புதிய பரிமாணங்களை எண்ணி மகிழ்ச்சி கொள்ளுங்கள். தியானம் செய்வதும் நல்லது. உங்கள் மீது நீங்களே அன்பு செலுத்துவ தால் சுயபெறுமதியை அதிகரித்துக் கொள்ளலாம். மன அழுத்தங்களில் இருந்து இடைவேளை பெற்றுக்கொள்ளுங்கள். உங்களை மகிழ்ச்சிப்படுத்தும் விடயங்களை எண்ணிக் கொள்ளுங்கள் அல்லது குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு விருப்பமான விடயங்கள் என்ன என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். பொறாமைக்குச் சிறிதேனும் இடம் கொடுத்து விடாதீர்கள். உடற்பயிற்சி செய்து கொள்ளுங்கள். நுட்பமாக எங்களால் செய்ய முடியவில்லை என வருத்தம் கொள்ளாதீர்கள். இவ்வாறான செயற்பாடுகள் உங்கள் மீது நீங்களே அன்பு செய்ய உதவும். அன்புடைமை கொண்டு வாழ்வதற்கு இது முக்கியமானது.




அன்புடைமை பற்றித் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணக் கருத்துக்களை எழுதுங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com


# கல்வி...

அட இது போகுது கல்விச் சபைக்கான ஊழியர்களை நியமித்து ஒப்பந்தம் செய்யும் வேலையையாவது இவர்களுக்கு விட்டுக் கொடுத்தார்களா என்றால் அதுவும் இல்லை. பெற்றோர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சனை களுக்கு தீர்வு காணல், பெற்றோர்களுக்கும் பாடசாலைக்கும், கல்விச் சபைக்கு மிடையே ஒரு தொடர் பாடலை ஏற்படுத்தல் எனக்கூறலாம் தேர்தல் சமயத்திலே கூட வந்து பெற்றோர்களைக் காணாதவர்களா இதனைச் செய்வார்கள். பின் ஏனப்பா இவர்களை? இப்போ பல கத்தோலிக்க பாடசாலைகள் பெயரளவுக்குத் தான். கத்தோலிக்க பாடசாலைகள் அங்கே கல்வி கற்கின்ற மாணவ மாணவிகளில் பெரும்பாலோர் வேறு மதத்தவர். ஆகவே கத்தோலிக்க பாடசாலைகளுக்கென தனிப் பட்ட ஒரு கல்விச்சபை அவசியமா? இந்த அழகிலே ரொறன்ரோ மாவட்ட பாடசாலைச் சபையினுக்கும் கல்வி இயக்குனருக்கும் இடையே லடாய். தனது ஒப்பந்தப் பத்திரத்தை அவர்களுக்கு இவர் காட்ட மறுக்கிறாராம். கல்வி அமைச்சர் லிஸ் சாண்டல்ஸ் மற்றும் மாகாண முதல்வர் ஆகியோருக்கு சில உறுப்பினர்கள் இதில் தலையிட்டு சபைக்கும் கல்வி இயக்குனருக் கும் இடையே உள்ள பிரச்சனைகளுக்கு முடிவு காணும்படி வேண்டியுள்ளார்கள். திருமதி மார்கறற் வில்சன் எனும் அனுபவமிக்க கல்வியாளர் ஒருவரைக் கல்வி அமைச்சர் லிஸ் சாண்டல்ஸ அவர்கள் இந்த பிரச்சனைக்கு தீர்வு காண ஏதோயினும் வழி உண்டா என அறிந்து தனக்கு வருட முடிவுக்குள் அறிக்கை தரவேண்டும் என வேண்டியுள்ளார். அவருக்கு இட்ட இன்னொரு பணி இந்தக் கல்விச் சபையின் வருங்காலம் பற்றியது. மிகப் பெரிதாக இருப்பதால் தான்சிறப்பாக ஈயங்க முடியாமல் போகிறதோ எனவும் அறியுமாறு பணித்துள்ளார். இக்கல்விச்சபை கனடாவில் உள்ளவற்றில் பெரியதல்லாமல் அமெரிக்காவில் இது நான்காவது இடத்தில் தான் உள்ளது.

பாடசாலைகளிலே மாணவர் சேர்க்கை குறைந்து கொண்டு போவதால் அடுத்த மூன்று வருடங்களில் பாடசாலைகள் சபையினுக்கு அரசாங்கம் வழங்கும் மானியம் $5,000,000,000 குறையும் வாய்ப்புண்டு என எதிர்க்கட்சிகள் எதிர்பார்க்கின்றன. இதன் விளைவாக வகுப்புகளின் மாணவர் தொகை அதிகரிக்கும் வாய்ப்பும் ஆசிரியர்களை பதவி நீக்கம் செய்வதும் நடைபெறக்கூடுமாம். கல்வி அமைசர் அவர்களின் கூற்றுப்படி ஏறக்குறைய 600 பாடசாலைகளில் பாதி வகுப்பறைகள் மாணவர்கள் இல்லாமல் உள்ளன. இதற்கு பிள்ளைகள் பற்றாமையே ஒரு காரணமாகிறது.

2003இல் லிபரல் கட்சி ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னர் பாடசாலைச் சபைகளுக்கு ஒரு மாணவருக்காகக் கொடுக்கப்படும் வருடாந்த மானியம் 56.5%த்தினால் அதிகரிக்கப்பட்டது உண்மை என்றாலும் சில பாடசாலைச் சபைகளுக்கு வழங்கப்படும் மானியம் குறைகின்ற வாய்ப்பு உள்ளது. தற்சமயம் மாணவர்களுக்காக மாணவர் விகித அடிப்படையில் வழங்கப்படும் தொகை $22.4 பில்லியன் ஆகும் அதாவது 2003இல் இருந்ததிலும் பார்க்க ஒரு மாணவனுக்காகக் கொடுக்கப்படும் தொகை $4000 அதிகரித்துள்ளது. பாடசாலைச் சபைகளில் உள்ள பாடசாலைகளில் மெத்த மாணவர் தொகை குறைந்து கொண்டு போகிறது. இதனால் பாடசாலைகளுக்கு தேவையான கல்விச் செயல் திட்டங்களுக்கு வேண்டிய மானியம் அரசிடமிருந்து போதிய அளவு கிடைக்காமல் போயின் செயல் திட்டங்களை நிறுத்துவதா? அதனிலும் பார்க்க கல்விச்சபை உறுப்பினர்களையே இல்லாமல் செய்துவிட்டால் அத்தொகையினை வைத்து எத்தனையோ செய்ய முடியுமல்லாவா?

MATH, SCIENCE & ENGLISH TUITION
Math & Physics taken for all grades from grade 4 to 1st year university.
Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.Classes available at
Scarborough & Stouffville
Contact: 647.340.9490/ 416.732.2228



# இளமையைக் காக்கும் யோகா பயிற்சி

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

மனோதத்துவ அடிப்படையில் ஏற்படும் நோய்கள்தான் மிகவும் சிக்கலானவை என்று இன்றைய விஞ்ஞானம் கூறுகிறது. நமது உடலானது சரிவர செயல்படுவதற்கும், அதன் சக்தியை நாம் முழுமையாகப் பெறுவதற்கும் மனமானது உடலுடன் ஒத்துழைக்க வேண்டும். மனத்தை அமைதிப்படுத்துவது, புத்திக்கூர்மையை அதிகரிக்கச் செய்வது, சிந்தனைகளைத் தெளிவாக்குவது என்பனவற்றிற்கு இன்றைய நவீன மருத்துவத்தில் தெளிவான வழிமுறைகள் இல்லை. ஆனால் யோகா பயற்சியில் எந்த மருந்தும் இல்லாமல் இவற்றை நம் முன்னோர்கள் மிகவும் எளிதாக அடைந்திருக்கின்றனர்.

### மன அழுத்தமும் மருந்தில்லா மருத்துவமும்

மனமும் உடலும் ஒன்றுக்கொன்று அனுசரணையானவை என்பதை இன்றைய மருத்துவம் தெளிவாக்குகின்றது. மனநிலை சரியாகவோ அமைதியாகவோ இல்லாதவர்களுக்கு இரத்த அழுத்தம், ஆஸ்துமா போன்ற நோய்கள் வந்து சேர்கின்றன. இன்றைய வாழ்க்கை முறையில் நாம் எவ்வளவோ வசதிகளை அனுபவித்து வருகிறோம். அதிக உடல் சிரமமின்றி வாழ்க்கையை நடத்துகின்றோம். ஆனால் இந்த நாகரிக வாழ்வில் உருவாகியிருக்கும் அவசரம், பதட்டம், வேகம், தடுமாற்றம் ஆகியவை சுகத்தை தேடி நமது உடலை உலுக்கியெடுத்து வருகிறது. இன்றைய வாழ்க்கையில் நாள் முழுவதும் படபடப்பு (Tension) அதிகமாகவுள்ள மனநிலையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அப்போது நமது நரம்புகள் முறுக்கேறுகின்றன. இரத்த ஓட்டமும் அழுத்தத்தால் எல்லையை மீறும் அளவுக்கு அதிகரிக்கின்றது. இருதய துடிப்பும் நாடித்துடிப்பும் அளவு கடந்துபோகின்றன. ஒரு செயல்நிகழ்ந்து வெகு நேரத்தின் பின் அதன் பாதிப்பால் மன உழைச்சல் ஏற்படுகின்றது. அதன் விளைவுகளைப் பற்றிச் சிந்தித்தும் அதனை தவிர்க்கலாம். ஆனால் மனம் அதனை ஏற்றுக்கொள்ளாது.

நாம் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் எல்லா பிரச்சினைகளையும் யாரிடமும் மனம் விட்டுச் சொல்ல முடிவதில்லை. அப்போது மனதிற்குள்ளே அந்த சூழ்நிலையும் அதனால் நமக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களையும் எண்ணிப் பார்த்து கற்பனையில் விபரீத நிலைகளை உருவாக்கிப் பார்த்துக் கொள்கிறோம். இவ்வாறு அடிக்கடி நாம் பெறும் அனுபவம் உடல்நிலையில் சிக்கலான கோளாறுகளை ஏற்படுத்தி விடுகிறது. வயிற்றில் அமிலம் கூடி குடல்புண் (Ulcer) ஏற்படுதல், தலை வலி, மூட்டுவலி, நீரிழிவு போன்ற பலவும் இப்படி நாளடைவில் நமது உடலில் வந்து சேர்கின்றன.



இவ்வாறு அவதிப்படுபவர்களை இன்றைய மருத்துவ நிபுணர்கள் எவ்வாறு வைத்தியம் செய்து விடுவிக்க முயற்சி செய்யும் போது வெளிப்படையான அடையாளங்களை மட்டுமே கேட்டுத் தெரிந்து கொள்கின்றனர் அல்லது சோதனைகள் மூலம் புரிந்து கொள்கின்றனர். அவர்கள் செய்யும் வைத்தியமும் அந்த வெளிப்படையான அடையாளங்களைக் குணப்படுத்தும் முயற்சியுடன் நின்று விடுகிறது. அவர்கள் பரிந்துரைக்கும் மருந்துகளும் நோயின் அடிப்படை சிக்கலிலிருந்து நோயாளிகளை விடுவிப்பதில்லை.

உதாரணமாக இரத்த அழுத்தம் (Blood Pressure) கூடுவதை எடுத்துக் கொள்வோம். இது தொடர்ந்து ஒருவருக்கு இருந்து வரும் மனக்கவலை, மனக்கலக்கம் என்பனவற்றின் அடிப்படையில்தான் ஏற்படுகிறது. அதனால் அவரது உடல்நிலையும், நரம்பு மண்டலங்களும் பாதிப்படைகின்றன. ஆனால் இதற்கு மருத்துவர் என்ன செய்கிறார்? மருந்துகளைக் கொடுத்து இரத்த அழுத்தம் கூடாமல் பார்த்துக் கொள்கிறார். அதாவது உடலின் இயக்கம் மருந்துகளின் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. ஆனால் அடிப்படையான சிக்கலைத் தவிர்க்கவோ, உடல் நிலையைப் பலப்படுத்தவோ அது உதவுவதில்லை. இங்கேதான் நம் முன்னோர்கள் நமக்களித்த யோகாசன பயிற்சிமுறைகள் கைகொடுக்கின்றன.

இன்று மேலை நாடுகள் உட்பட உலகம் பூராகவுமுள்ள புகழ்பெற்ற மருத்துவ நிபுணர்களினால் யோகா முக்கியமானதாகப் பரிந்துரைக்கப்படுகிறது. பிரபல மருத்துவ மனைகள் பலவற்றிலும் யோகாசன சிகிச்சை (Yoga Therapy) முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### இளமையின் இரகசியம்

யோகாசன பயிற்சியினை தொடர்ந்து செய்து வருபவர்கள் கோபம், வெறுப்பு, பொறாமை போன்றவற்றில் ஈடுபடுவதில்லை. இந்த பயிற்சி ஒரு தனி மனிதனை உயர்த்துவதோடு அவனது ஆளுமையை, அழகை, ஆற்றலை ஆயுளை, இளமைப் பொலிவை அதிகரிக்கச் செய்கின்றது.

யோகாவிலுள்ள ஒவ்வொரு ஆசனங்களும் உடல் உள்உறுப்புகளையும் முதுகுத் தண்டையும் பலப்படுத்துகிறது. அதனால் நோயற்று வாழ முடிகிறது. முள்ளந்தண்டு நன்கு வளைந்து பூரணமான இயக்க சக்தியுடன் இருக்கும்வரை மனிதனின் இளமை நிலைத்திருக்கும். அத்துடன் இராஜ உறுப்புக்களான கல்லீரல், இதயம், மண்ணீரல், நுரையீரல், சிறுநீரகம் போன்றவை திறம்பட தமது வேலையைச் செய்யும் வரையில் முதுமையையும் மரணத்தையும் தள்ளிப் போடலாம். நீண்டநாள் வாழலாம்.



ஆரோக்கிய வாழ்வு

Diploma in Yoga Therapy (India)

416.289.2033 after 7:00pm

416.617.5721


AUM WELLNESS CLINIC IN

Healing Massage, Suffering From Pain?

Get Relief From:

முதுகுவலி கழுத்துவலி தோள்பட்டைவலி
முழங்கால் வலிகள் தீராததலைவலி நரம்புப்பிடிப்பு
நீரிழிவு தூக்கமின்மை கொலஸ்ரோல்
உடல் எடை குறைத்தல் இரத்த ஓட்டத்தை சீராக்குதல்

**போன்றவற்றிற்கு இவரை நாடுங்கள்**

Dr. Lata



Based on Appointment


Cell: 416.890.9217 Office: 647.304.6046

5215 Finch Ave. E. #220, Toronto, ON



YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# ஒரு குடை கீழ் பல சாம்ராச்சியம்

சென்ற மாதம் மார்க்கம் மக்னிக்கொல் சந்தியில் ஒரு அற்புதம் நிகழந்துள்ளது. 2901 மார்க்கம் வீதியில் புதுப்புதுக் கட்டிடங்கள் தினசரி தோன்றுவதைக் கண்டிருப்பீர்கள். இப்பகுதியில் ஒரு விரைவு மருத்துவ நடுவம் ஒன்றினை வைத்திய காலாநிதி சொ. செந்தில்மோகன் அவர்கள் தொடக்கி உள்ளார்கள். ஏன் அற்புதம் என இதனை வர்ணிப்பதாயின், இது காலமறிந்து, தேவையை உணர்ந்து, தெற்காசிய மக்கள் பெரும்பாலும், சிறப்பாகத் தமிழ் மக்கள் சுலபமாகச் செல்லக்கூடிய முறையில் நிறுவப்பட்டுள்ளமை ஏற்றம் தருவதாகும். சமூக அக்கறையுடன் இதனை செந்தில் மோகன் அவர்கள் ஸ்தாபித்துள்ளார்கள். இந்த வகையான விரைவு மருந்துவ நிலையம் மொத்தமாக ஒன்ராறியோவில் 10 வரை தான் உள்ளதாம். அவற்றில் இதற்கு முதலிடம் கொடுக்கக்கூடிய வகையில் சகல வசதிகளும் கொண்ட ஒரு நடுவமாக இதனைக் கூற முடியும். அப்படியாயின் அவசர தேவைக்காக மாத்திரம் தான் நோயாளர் இங்கே செல்லலாமா என வினா எழும்பலாம். இங்கு நேரடியாகச் சிகிச்சைக்கு (Walk- in- clinic) வேண்டிய நோயாளிகளும் செல்ல முடியும். சாதாரணமாகக் குடும்ப வைத்தியர்கள் அவசர சிகிச்சைக்கான பயிற்சியைப் பெற்றிருக்க மாட்டார்கள். ஆனால் இந்த நடுவத்தில் உள்ள வைத்தியர் அதற்கான பயிற்சியையும் பெற்றிருப்பதால் மருத்துவசாலை தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கும். மிகவும் தீவிரமான அவசர சிகிச்சை தவிர்ந்த அத்தனையும் இங்கே கவனிக்கக் கூடிய அளவுக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அங்கே என்ன தான் உள்ளன?



ஆய்கூடப் பரிசோதனை: உடனடியாக ஆய்வுகூடப் பரிசோதனை வேண்டுமாயின் அங்கேயே செய்வார்கள். ஆனால் விபரமான பரிசோனைக்காக தினசரி மூன்று முறை அங்கு வந்து ரொறன்ரோவின் பிரபலமான Life labs, மாதிரிகளைக் (samples) கொண்டு செல்வார்கள். விரைவில் அறிக்கை கிடைக்கும்.

***X.ray*** வசதிகள்: குடும்ப வைத்தியரிடம் போனால் அவர் X-ray எடுப்பதற்கு ஒரு ஆய்வு கூடத்திற்கே போகச் சொல்வார். இந்தப் பிரச்சினை மிக எளிதாக இங்கு தீர்க்கப்பட்டுள்ளது.

இயன் மருத்துவம்: இங்கு வருவோர் உடற்பயிற்சிக்காக வேறெங்கும் அலையா வண்ணம் அச்சேவைக்கும் இவ் நடுவம் வழி-செய்துள்ளது.

மருந்தகம்: வேறு எங்கும் அலைந்து திரி யாத முறையில் நோயாளிகள் தமக்குத் தேவையான மருந்துகளை உடனடியாக் பெற்றுக் கொண்டே வீடேகலாம்.

கண்பரிசோதனை

பல் வைத்தியம்

பொதுவான வசதிகள்: இவை எல்லாவற்றிற்கு மேலாக அங்கே உடனடிக் கவனிப்பு உள்ளது. பொது மருத்துவ மனை ஒன்றிற்கு அவசர சிகிச்சைப் பிரிவுக்குச் சென்றீர்கள் என்றால் படுப்பதற்கு ஒரு கட்டில் கிடைப்பதற்கே காத்திருக்கு வேண்டும். அந்த அளவுக்கு அங்கே நோளிகள் அதிகம். இங்கே போனால் உங்களை வரவேற்க ஏழு கட்டில்கள் உள்ளன. தேவைக்கு ஏற்ப இன்னும் அதிகரிக்கலாம். மொத்தத்தில் இந்த நடுவம் ஒரு சிறிய வைத்தியாசாலை.


Train to be a ...

Community Service Worker With CO-OP



Other Diploma Programs:

Computerized Accounting

THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE

Network Engineering

Microsoft | IT Academy Program

Business Administration

Medical Office Assistant

EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome

Customized Corporate Training available for:
*MS-Office 2003, 2007, 2010*
*Upgrade MS-Office 2003 to 2007 or 2010*
*Microsoft server 2003 and 2008 Subjects*
*A+ Certification / Cisco CCNA*

OACC PROUD MEMBER

citi COLLEGE

You may qualify for
SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179

Call Now: (416) 840-9179

Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005

www.CitiCollege.ca

Financial Assistance may be available to those who qualify

# பத்திரகாளி சோதிட நிலையம்

# BADRAKALLI ASTROLOGY CENTER




## Pandit Sri Hanuman

Kerala (Choddankiri)

## 416.846.2798

## 100% Guaranteed Result



The Pandith can read the Past, Present & Future by Hand prediction, name, date of birth relating to love, education, marriage, money. I will help in all problems and work with god and holy spirit. Are you suffering in silence and nobody knows your pain or sorrow, but you and god know. Well you are not alone, the holy spirit will guide you tome and convince you. I will remove and destroy all bad, witchcraft, jealously and black magic permanently with superior strength & holy given power to protect to you and your family from evil things.

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் **Pandit Sri Hanuman** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்.

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமை இலவசமாக நூல் கட்டப்படும்.


- கைரேகை
- நாம நட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- பெண் பிள்ளைகள் – பெற்றார் பிரச்சனைகள்
- திருமணயோகம்
- குழந்தை பாக்கியம்
- கணவன் – மனைவி ஒற்றுமையின்மை
- எதிரிகள் கண்ணூறு, நாவூறு
- சர்ப்பதோஷம்
- கர்ப்பதோஷம்
- கஷ்ட – நஷ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்றுகூடுதல்


- Business Investments
- Jealousy
- Childless Couples
- Depression
- Worries About Loved Ones
- Enemy Problems
- Money Problems
- Sexual Problems
- Love Problems
- House Protection
- Work Problems
- Money Blessing
- Family Arguments
- Drinking Problems

பிளெக் மெஜிக் அகற்றி பாதுகாப்புக் கொடுக்கப்படும்.

**5215 Finch Ave. East, Unit #257, Upstairs, Scarborough ON M1S 0C2**

**GTA Square Mall (2nd Floor) (Middlefield & Finch)**



வெந்தயம்: வெந்தயமும், வறுத்த கோதுமையும் சமமாக எடுத்து பொடி செய்து (கோப்பிக்குப் பதிலாக) பாலும் சர்க்கரையும் சேர்த்துப் பருகி வர உடல் மேன்மையடையும்.

செம்பருத்தி சர்பத் - 100 பூக்களுக்கு ஒரு படி சுத்த நீர் விட்டு, சரி பாதியாகும் வரை காய்ச்சி, ஒரு வீசை சீனாக்கற்கண்டு சேர்த்து சர்பத்தாக நன்றாகக் காய்ச்சி, காலை-மாலை அரை அவுன்ஸ் சிறுவர் முதல் பெரியோர் வரை பருகிவர, கணைச் சூடு உஷ்ணம் உடனே போகும். ஒரு மண்டலம் சாப்பிட சரீரம் பருத்துவிடும். மன உற்சாகம் தரும். சிறுவர் சிறுமியர் கவர்ச்சியான தோற்றம் பெறுவர்.



செம்பருத்தி குல்கந்து – கண்ணாடிப் பாத்திரத்தில் பூவின் மெல்லிய இதழ்களைப் போட்டு, அதன் மேல் சீனாக்கற்கண்டுத் தூளை நிறையத் தூவி வெயிலில் காய வைத்து விடவேண்டும். சில தினங்கள் பக்குவமாகக் காய்ந்தபின் கொஞ்சம் குங்குமப்பூ கலந்து வேறு போத்தலில் பத்திரப்படுத்த வேண்டும். இதை ஒரு தோலா அளவு நாள்தோறும் சாப்பிட்டு வந்தால், நல்ல ஆரோக்கியத்தையும் இரத்த புஷ்டியையும் தரும். மனதுக்கு விவரிக்க முடியாத உற்சாகத்தைத் தரும்.

செம்பருத்திக் காபி - இரண்டு அல்லது 3 புஷ்பங்களை ஒரு பாத்திரத்தில் போட்டு, பின் அதில் நன்றாகக் கொதிக்கும் தண்ணீரை ஊற்றி 5 முதல் 10 நிமிடங்கள் மூடி வைக்கவும். பிறகு எடுத்து வடிகட்டினால் முதல் தர கோப்பி கிடைக்கும். இத்துடன் பாலும் சர்க்கரையும் சேர்த்துப் பருகினால் ருசியாக இருக்கும். இரத்த புஷ்டியும், அதனால் ஆரோக்கியம் உண்டாகும்.

பார்லி டானிக் - வயதானவர்களுக்கும், நாட்பட்ட நோயாளிகளுக்கும், சீராக வளர்ச்சி பெற வேண்டிய குழந்தைகளுக்கும், தாய்ப் பாலற்ற குழந்தைகளுக்கும் நல்லது. தினமும் இரவு பாலுடன் தேனைக் கலந்து அருந்தவும்.

# ஒட்டாவா பாரதி நூலகம்

ஒட்டாவாவில் பாரதி நொவம்பர் மாதம் 11ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. புலவர் ஈழத்து சிவானந்தன் அவர்களால் நாடா வெட்டி திறந்து வைத்தபோது எடுக்கப்பட்ட படங்கள், மற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டோரையும் படத்தில் காண்கின்றீர்கள்.












Parkway Mall Mobilicity !!!
$50 OFF COUPON
$29/mo
Life Time Deal. No Contract.
Christmas SPECIAL
UNLIMITED Talk, Text & DATA
UNLIMITED Local Calling, Canada & US Long Distance
UNLIMITED Local & International Text messaging
UNLIMITED Internet & Mobile-Hotspot
FREE Caller ID, Voice Mail, Call Waiting
FREE 30 Cdn / US roaming minutes
Alcatel Flip $79.99 $0
Samsung T469 $99.99 $0
Prism One $129.99 $49.99
Alcatel OneTouch Evolve $169.99 $59.99
LG L70 $229.99 $129.99
Samsung Galaxy S4 $649.99 $359.99
No Contract !!
No Credit Check !!
PHONES $50 OFF
You can bring in your own phone
ONLY at
Mobilicity @ Parkway Mall (Kiosk beside Metro Supermarket)
Parkway Mall (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough (தமிழ்/English/Chinese)
M1R4B8, 416-999-9229
mobilicity
Now that's smart.


சக்தி ரிவியின்
குளோபல் சுப்பர் ஸ்டார் தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கான
பாடகர் தேர்வு ரொறன்றோவில் ஆரம்பமாகிவிட்டது.
Audition:
28-Nov-2014
Filming stars on
11-Dec.2014
கனடாவில் படமாக்கப்படும் பகுதிகளுக்கு அறிவிப்பாளராகப் பணியாற்ற ஆர்வமுள்ள இளைஞர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
கனடா, அவுஸ்த்ரேலியா, நியூசிலாந்து, மலேசியா, சிங்கப்பூர், இலங்கையிலிருந்து கலந்துகொள்ளவிருக்கும் போட்டியாளர்களை வெற்றி கொண்டு 15,000 அமெரிக்க டொலர்களோடு, உலகளாவிய சிறந்த பாடகராக முடி சூட்டிச் செல்லப்போகும் கனடா தமிழ்ப் பாடகர் யார்?
அடுத்த ஆண்டு ஜனவரியிலிருந்து 52 பாகங்களாக புலம்பெயர் நாடுகளிலும், சக்தி தொலைக்காட்சியிலும் 27 வாரங்கள் தொடர்ந்து ஒளிபரப்பாகவிருக்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சி.
GLOBAL SUPER STAR
வயதெல்லை 15 முதல் 30 வரை. பாட விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
விண்ணப்ப முடிவு தேதி: 05-12-2014.
facebook Global Super Star Canada
இணையப்பக்கம் http://globalsuperstar.tv
பதிவு செய்யத் தவறியவர்கள் உடனடியாக பிரபா பாலகிருஷ்ணனுடன் 416 357 5327 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

# NEW CONDO. DEVELOPMENT IN TORONTO



Special HomeLife/GTA Brokerage Gold Discount



## > Only 10% Down

**HomeLife / GTA Realty Inc., Brokerage***

**5215 Finch Ave, E, #203 Toronto, ON**

**Tel: 416.321.6969**

**Independently Owned & Operated*

# அந்நியர்களும் அபூர்வ விமானங்களும்

யெனற் கான் எனும் நாற்பத்தி இரண்டு வயதுடைய பெண்மணியும் அவர் கணவரும் (இப்பொழுது இருவரும் பிரிந்து வாழுகின்றார்கள்) அமெரிக்காவின் பீவர், வோசிங்ரன் எனும் பகுதியில் வசித்து வருகிறார்கள். இவர்களது வீடு ஒரு பின்தங்கிய இடத்தில் இருந்தது. சற்றுத் தொலைவில் சில இராணுவப் பகுதிகளும் இருந்தன. பாசைட் சர்வதேச விமான நிலையம் இவர்களது வீட்டிற்குச் சற்றுத் தள்ளி இருந்து. மூன்று பக்கமும் காடு போன்று மரங்களால் சூழப்பட்டிருந்தது. வீட்டின் பின்புறமாக, விசாலமான பகுதியில் இருந்த சுடுநீர்த் தொட்டி வைத்திருந்தார்கள். 1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் ஒருநாள் இரவு, பெனற்றும் அவரது கணவரும் அச்சுடுநீர்த் தொட்டியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். நேரம் சுமாராகப் பதினொரு மணி இருக்கும். எதுவித நோக்கமுமில்லாது, இரவின் விண்மீன்களைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்த இருவருக்கும் தற்செயலாகத் தான் அப்பொருள் தென்பட்டது யெனற் அது பற்றிக் கூறுவதைப் பாருங்கள்..

முக்கோண வடிவிலான வானூர்தி ஒன்று எங்களுக்கு மேலாக மெதுவாகப் பறந்து சென்றது. அதன் மூன்று மூலைகளிலும் வெண்ணிற வெளிச்சங்கள் ஒன்று மாறி ஒன்றாக ஒளிர்ந்த வண்ணம் இருந்தன. முக்கோண வடிவின் மையத்தில் ஒரு பிரகாசமான வெளிச்சம், எல்லாத் திசைகளிலும் திரும்பக் கூடியதாகக் காணப்பட்டது. அமைதியான, தெளிவான ஆனால் நல்ல இருளான அந்த இரவில் நானும் எனது கணவரும் எங்களது வீட்டின் பின் புறத்திலுள்ள சுடுநீர்த் தொட்டியில் ஓய்வாக இருந்து கொண்டிருந்தோம். முதலில் ஏதோ ஒரு ஆகாய விமானமாக இருக்குமோ என்றுதான் எண்ணினோம். ஆனால் அது மிகவும் மெதுவாக, சத்தமின்றி நகர்வதை அவதானித்தோம். சத்தமெதுவும் இன்றி, வெளிச்சங்கள் மூலைகளில் மாறி மாறி ஒளிர அது நகர்வதைப் பார்த்தால் எதையோ அது தேடுவதுபோல இருந்தது. இதுபற்றியே பேசிக் கொண்டிருந்த அவர்கள் அப்பொருள் ஒரு சாதாரண விமானத்தின் ஒலியினை எப்போது எழுப்பும் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அது நிகழ வில்லை. வடக்கில் இருந்து தெற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்த அப் பொருளுக்கு அத்தூரத்தினைக் கடப்பதற்கு இருபது நிமிடங்கள் ஆயினும் எடுத்து இருக்கும். முக்கோண வடிவில் அமைந்த அதன் மூன்று மூலைகளிலும் வெளிச்சம் மாறி மாறிச் சீராக ஆனால் ஒரு நேரத்தில் ஒன்று மாத்திரமே என்ற வண்ணம் ஒளிர்ந்து கொண்டு இருந்தது. அவர்களுக்கு மேலாக அந்தப் பொருள் வந்தபோது அதன் நடுவில் இருந்த வெளிச்சம் அவர்கள்மேல் திரும்பியது. குறைந்தது பத்து செக்கன்கள் என்றாலும் அந்த வெளிச்சம் அவர்களின் மேல் நிலைத்திருந்தது. அப்பொருளில் இருந்தவர்கள் அல்லது இருந்தவைகள் அவர்களை ஆராய்வது போல் இருந்தது என்றார் யெனற்.

அந்தப் பத்து செக்கன்களும் அவர்களால் அசைய, பேச முடியவில்லை, அக்கலத்தில் வந்தவர்கள் அவர்கள்மேல் அந்த வெளிச்சத்தால் என்னவோ செய்கையில் அவர்கள் விழிப்பாகவே இருந்தார்கள். ஆனாலும் ஒன்றுமே செய்யமுடியாதது போன்ற, ஒரு உறைந்து போனது போன்ற நிலையில் இருவருமே காணப்பட்டார்கள். அவர்களது அந்நேரத்துணர்வுகளை



அவர்களால் விபரித்துக் கூறமுடியாதிருந்தது. பின்னர் அவர்களைக் கடந்து தெற்காகச் சென்ற அந்த விமானம், தெற்கே இருந்த ஒலிம்பிக் மலைத் தொடரை அண்மித்ததும் சடுதியில் வேகத்தினை அதிகரித்து வேகமாகச் சென்று மறைந்து விட்டது. கொஞ்ச நேரம் அப்படியே திகைப்புடன் இருந்த அவர்கள் அது ஒரு சாதாரண விமானம் இல்லை என்பதை உணர்ந்து கொண்டார்கள். இன்று வரை தாம் கண்டது ஒரு இனம் தெரியாத பறக்கும் பொருள்தான் என்பதில் உறுதியாக இருக்கும் யெனற் அன்று தாமிருவரும் கண்டது எங்களது உலகத்தினது விமானம் இல்லை என்று கூறுகின்றார்.

இச்சம்பவத்தின் பின்னர் யெனற் கூறுவதும் ஆச்சரியமாக இருக்கிறது. ஏனெனில் இவர் ஒரு யுஎவ்ஓலொயிஸ்ற் இல்லை. ஆனாலும் அவர்களது சாயலில் தனது கருத்துகளை முன்வைக்கிறார். அப்பொருளானது இப்பூமி யின் மனிதர்களினது விமானமாக இருக்க முடியாது. அதுபோன்ற ஒரு விமானம் இருப்பின் எந்தவொரு அரசாங்கமும் தனது பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. அவ்வளவுக்கு சக்தி வாய்ந்த விமானம் போலிருந்தது. அந்த விமானம் உண்மையில் எம்மையெல்லாம் விட அறிவில் உயர்ந்த ஏதோவொரு வெளிக்கிரக மனிதர்களினது விமானமாகத் தான் இருக்கவேண்டும். அத்துடன் இப்பிரபஞ்சத்தில் மனிதர்களாகிய நாம் தனித்தவர்கள் இல்லை என்பதையும் இச் சம்பவம் கூறுகின்றது.

எனது கருத்துப்படி, பூமியின் மனித இனமானது சுமாராக 30,000 வருடங்களின் முன்னராகவே வேற்றுக்கிரக மனிதர்களுடன் நேரடித் தொடர்புகளைக் கொண்டிருந்திருக்க வேண்டும். அக்காலத்தில் எமது பரிணாம வளர்ச்சியும், அறிவியல் வளர்ச்சியும் இன்றுள்ள நிலையில் உள்ளது போல் இல்லை. எனவே இந்த வேற்றுக்கிரக மனிதர்கள் எமது பரிணாம வளர்ச்சிப் பாதை யில் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்திருக் கின்றார்கள். இதன் அடிப்படையில்தான் சமயம், சொர்க்கம் என்ற கருத்துக்களுடன் வெவ்வேறு மதங்களின் அடிப்படைகளும் தோன்றியிருக்க வேண்டும் யெனற்றின் கருத்தில் இருந்த சாராம்சம் இதுதான்.

சில விடயங்கள் எனக்குச் சிக்கலாகத்தான் இருக்கின்றது. 30,000 வருடங்கள் என்ற சமாச்சாரத்தினை எங்கிருந்து யெனற் பெற்றிருப்பார்? மனிதர்களது பரிணாம வளர்ச்சியில் வேற்றுக்கிரக மனிதர்களினது செல்வாக்கு ஏற்பட்டது என்ற சிந்தனை ஓட்டத்தினை எவ்வாறு பெற்றிருப்பார்? ஊடகங்களில் இருந்து பெற்றாரோ அல்லது அந்த உறைந்து போன பத்து செக்கன்களிலும் அவர்களுக்கு வழங்கப்பட்ட செய்தியோ தெரியவில்லை. ஒருவேளை அந்த உறைந்து போன பத்து செக்கன்கள் உண்மையில் ஒரு மணித்தியாலமோ அல்லது இரண்டு மணித்தியாலமோ ஆகக் கூட இருக்கலாம். அந்த நேர இடைவெளி யில் இவர்களுக்கு என்ன நிகழ்ந்தது என்பது இவர்களுக்கு தெரிந்திருக்காது. இப்படியாகத் தொலைத்த மணித்தியால அனுபவங்களை பலர் பெற்றிருக்கின்றார்கள்.

அடுத்த தடவையில் ஆய்வினை இன்னமும் சற்று விரிவுபடுத்துவோம்.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca







**Kingsway-Queensway**

சந்திக்கருகாமையில்

- எட்டு நிமிடங்களில் ரொரன்ரோ டவுன் ரவுன்
- இரண்டு நிமிடங்களில் கார்டினர் விரைவுப் பாதை
- நிமிடங்களில் பாடசாலை, வணிக மையங்கள்
- 24 மணிநேர பாதுகாவலர்கள் மற்றும் ரெனிஸ் கோர்ட், உடற்பயிற்சியரங்கம், உள்ளக,வெளியக நீச்சல் குளங்கள்
- குறைந்த விலையில் சகல வசதிகளும் உள்ளடங்கிய ஒரு அறை நவீன Condo

**Ragunathan** Mahesu - Sales Rep - **416-450-6833**

VEEDU REALTY INC. BROKERAGE

**416-759.6000**

**AERO COURIER**
Fast & Secure World Wide Service
உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது......
கொழும்பு-திருகோணமலை-மட்டக்களப்பு-மன்னார்-வவுனியா
கிளிநொச்சி-யாழ்ப்பாணம் கண்டி மற்றும் இந்தியா-ஐரோப்பிய
நாடுகள் அனைத்து இடங்களுக்கும் உங்கள் பொதிகளை
பாதுகாப்பாக அனுப்ப வேண்டுமா? எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!
**Tel: 416.292.0444** 5635 Finch Ave East Unit 2&3 Toronto On.M1B 5K9

# யேசுராஜா பேட்டி

யேசுராசா 70களில் இலங்கையில் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்களில் ஒருவர். அலை இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினர். நவீன இலக்கிய போக்குகள், நாடக முயற்சிகள், உலக சினிமா, இலக்கிய விமர்சனம் என பல புதிய தளங்களை இலங்கை தமிழ் இலக்கிய உலகில் அலை ஏற்படுத்தியது. பல்வேறு கட்டுரைகளையும், ஆக்கங்களையும் மேற்கூறப்பட்டுள்ள தளங்களில் எழுதியுள்ளார். இவரை மின்னஞ்சல் மூலம் பேட்டி எடுத்தவர் எஸ். மல்லிகா

1. உங்களைப்பற்றிச் சிறிய அறிமுகம்....

யாழ்ப்பாணத்திலுள்ள குருநகர் நான் பிறந்த ஊர். க.பொ.த. சாதாரணம் வரை, ஊரில் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையிலும், உயர்தர வகுப்பு ஸ்ரான்லி கல்லூரியிலும் பயின்றேன். தபாற் கந்தோர்த் தலைவர் தந்தியாளர் (Postmaster & Signallers) போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, 1967 இல் சேவையில் இணைந்து கொழும்பு, பசறை, பேராதனை, கண்டி, சுண்டிக்குளி ஆகிய இடங்களில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். யாழ்ப்பாணத்தில் வெளிவந்த 'திசை' வாரப் பத்திரிகையில் துணை ஆசிரியராகவும் பணி புரிந்துள்ளேன். மனைவி மேசி ஜெயரோசா விசேட பயிற்சி பெற்ற அறிவியல் ஆசிரியர். யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகவிருந்து தற்போது ஓய்வுபெற்றுள்ளார்.

2. உங்கள் எழுத்துலகப் பிரவேசம் பற்றிக் கூறுங்கள்....

எட்டாம் வகுப்பு மாணவனாக இருக்கும்போதே வாசிப்பில் ஈடுபடத் தொடங்கிவிட்டேன். ஊரில் சில வாசிகசாலைகள் இருந்தன. அவற்றிலும் குருநகர் சனசமூக நிலைய வாசிகசாலை ஏராளமான சஞ்சிகைகளுடனும், பத்திரிகை களுடனும் சிறப்பாக இயங்கியது. அம்புலிமாமா, கண்ணன், கல்கண்டு போன்றவற்றிலிருந்து தொடங்கி பின்னர் யாழ். பொது நூலகத்தையும் பயன்படுத்தி ஆழமான படைப்புகளைப் படிக்கும் பழக்கம் விரிவடைந்தது. கொழும்பு சென்றபின் இளம் இலக்கிய நண்பர்கள் பலருடன் பழக்கம் ஏற்பட்டது. அவர்களிற் பலர் கவிதை, சிறுகதை, நாடகம் முதலியவற்றை எழுதி வீரகேசரி, தினகரன் போன்றவற்றில் வெளியிட்டு வந்தனர். அந்தச் சூழலில் எனது அனுபவ உணர்வுகளைச் சில கவிதைகளிலும் சிறுகதைகளிலும் வெளிப்படுத்தினேன். ஆனால் அவை எனது குறிப்புப் புத்தகத்தில் மட்டுமேயிருந்தன. ஈழநாடு பத்திரிகையில் சிறிய கட்டுரைகள், தகவல்கள் வெளிவந்தன. பின்னர் மல்லிகை, கணையாழி, விவேகி இதழ்களில் சில புதுக்கவிதைகள் வெளிவந்தன.

3. சிறுகதையாளர், கவிஞர், இதழியலாளர் என்று பல முகங்களுடன் திகழும் தங்களுக்கு மிகவும் பிடித்த துறை எது?

மூன்று துறைகளுமே பிடித்தமானவைதான்! சிறுகதையும் கவிதையும் படைப்பிலங்கியங்கள் தன்னின் வெளிப்பாடாக அமைபவை. உணர்வு வெளிப்பாட்டின் பொருளுக்கேற்ப வடிவம் தன்னியல்பாக அமைகின்றது. இரண்டுமே இறுக்கமான சொற்தேர்வையும், வடிவ நேர்த்தியையும் கோரிநிற்பவை. இதழியலில் வேறுபட்ட பணிகளை ஆற்றும் தேவை உள்ளது. தகவல் தருதல், ஆக்கத் தொகுப்பு, சீர்செய்தல், விமர்சன முன்வைப்புகள், நல்லனவற்றிலும் அல்லனவற்றிலும் கவனக் குவிப்புச் செய்தல் போன்றவை செய்யப்பட வேண்டியவை. இவை பலரின் அதிருப்திக்குள் நம்மைத் தள்ளித் தனிமைப்படுத்தியும் விடும். ஆயினும், நேர்மைத் திறனுடன் பணியாற்றத்தான் வேண்டும். இளந்தலை முறையின் ஆற்றல்களைக் கண்டுபிடித்து ஊக்கப்படுத்துவ தோடு, அவர்களுக்குக் கலை இலக்கிய அறிவூட்டி வழிகாட்டும் பொறுப்பையும் நிறைவேற்ற வேண்டும். மூன்று துறைகளிலும் ஈடுபாட்டுடனேயே செயற்பட்டிருக்கிறேன்.

4. உங்கள் 'முதல் காதல்' சினிமா என்று கூறுகிறீர்கள்.... அத்துறை மீதான ஈடுபாடு தங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?

சிறுவனாக இருக்கும்போதே ஐயாவுடன் படம் பார்க்கத் திரை யரங்குகளுக்குச் சென்ற நினைவு உள்ளது. ஹரிதாஸ், பொன்முடி, இரத்தினகுமார், பாதாள பைரவி போன்றன நினைவுக்கு வருகின்றன. அக்காலத்தில்தான் சினிமாவின் மீதான ஈடுபாடு உருவாகி இருக்கவேண்டுமென நினைக்கிறேன். பின்னர் வளர்ந்தபின் சிவாஜி கணேசன் நடிக்கும் படங்கள்மீதும், ஸ்ரீதரின் நெறியாள்கையில் உருவானவை மீதும் விருப்பமிருந்தது. ஆயினும், 'திரைப்படம் ஒரு காட்சி ஊடகம்' என்ற சரியான பார்வையும், அதன் கலைத்துவப் பரிமாணம் பற்றிய புரிதலும் பின்னரே ஏற்பட்டன. கே.எஸ். சிவகுமாரனின் 'பத்தி' எழுத்துகள் மூலமாகவே இவ்விழிப்பு ஏற்பட்டது. கொழும்பில் வேலை பார்க்கும்போது அவரது வழிகாட்டலினால் பிரெஞ்சுத் திரைப்பட விழாவில் பார்த்த திரைப்படங்கள் இரசனையைத் தூண்டின. கொழும்பில் ஜேர்மன் கலாசார நிலையத்திலும், அலியான்ஸ் பிரான்சேஸ்ஸிலும், சர்வதேச கத்தோலிக்கத் திரைப்பட நிறுவனத்திலும் (O.C.I.C.) பிறமொழித் திரைப்படங்களைப் பார்க்க முடிந்தது. பேராதனைப் பல்கலைக்கழகக் கலையரங்கிலும், சிங்களம் உட்படப் பிறமொழிப் படங்களைப் பார்க்க வாய்ப்பிருந்தது. இதன் தொடர்ச்சியாகவே ஏ.ஜே. கனகரத்தினாவின் தலைமையின் கீழ், 'யாழ். திரைப்பட வட்டத்'தை அமைத்து (1979 – 1981) செயற்பட முடிந்தது. பின்னர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரனுடனும் இராமருபனுடனும் இணைந்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் திரைப்பட வட்டத்தில் (1998 – 2006), சிறந்த பிறமொழித் திரைப்படங்களையும், கவனத்துக்குரிய தமிழ்ப் படங்கள் சிலவற்றையும் வாரந்தோறும் காட்டவும் இயலுமானது. திரைப்படங்கள் தொடர்பான எனது கட்டுரைகளையும் மூன்று மொழியாக்கங்களையும் கொண்ட விரிவான தொகுப்பு நூல், 'திரையும் அரங்கும் : கலைவெளியில் ஒரு பயணம்' என்ற பெயரில் வெளிவந்துள்ளது!

5. சிங்களச் சமூகத்தில் கலை, இலக்கியப் பணிகள் எவ்வாறுள்ளன?

பொதுவாகவே தமிழர்களைவிடவும் சிங்கள மக்கள் மத்தியில் கலை, இலக்கிய ஈடுபாடு கூடுதலாக உள்ளது. அரசாங்க உதவி மட்டுமல்லாது தனியார் துறையினரின் ஒத்துழைப்பும் இத்துறைகளின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைகின்றன. பெரிய வெளியீட்டு நிறுவனங்கள் பல உள்ளன. அவை ஏராளம் நூல்களைப் பதிப்பிக்கின்றன. சமகாலத்தில் உலகில் புகழ்பெற்றவையெல்லாம் விரைவில் சிங்களத்தில் மொழியாக்கமாக வந்துவிடுகின்றன. கொடகே நிறுவனம், ஆண்டுதோறும் நூல்களுக்கும் விசேட ஆளுமைகளுக்கும் பரிசும் விருதும் வழங்குகின்றது. ஒரு நிறுவனம் சிறந்த நாவலுக்கு ஆண்டுதோறும் ஐந்து இலட்சம் ரூபா பரிசையும் விருதையும் வழங்குகிறது. இந்தியாவிலுள்ள சாகித்திய அக்கடமி, நஷனல் புக் ட்ரஸ்ற் போன்றதொரு அமைப்பு, சிங்கள மொழி நூல்களைத் தமிழுக்கும் தமிழ் மொழி நூல்களைச் சிங்களத்துக்கும் மொழியாக்கம் செய்து வெளியிட இங்கு உருவாக்கப்பட வேண்டும். இரு இனங்களிடையேயும் பரஸ்பர புரிந்துணர்வுக்கு அது உதவி யாக அமையும். ஓவியம், நாடகம், திரைப்படம் என்பன அங்கு நன்கு வளர்ந்துள்ளன. பிரசன்ன விதானகே, அசோக ஹந்தகம, பிரசன் ஜெயக்கொடி ஆகியோர் அண்மைக் காலத்தில் வெளிநாட்டுத் திரைப்பட விழாக்களில் விருதுகளை வென்றுள்ளனர்! பல விபரங்களை ஆங்கில மொழிப் பத்திரிகைகள் மூலமே பெற முடிகிறது.

6. தற்காலத்தில் ஈழத்தில் வெளிவரும் தமிழ்க் குறும்படங்கள் எங்கள் பிரச்சனைகளை முழுமையாகப் பேசுகின்றனவா?

எனக்குப் பார்க்கக் கிடைத்தவை ஓரளவுதான். பல குறும் படங்கள் வெளிவருவதைப் பத்திரிகைகளில் செய்தியாகவே பார்க்க முடிகிறது. பலர் உரிய பக்குவமில்லாது ஆர்வக்கோளாறால் முயல்கிறார்கள் என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது. பிரச்சினையை வெளிப்படுத்தும்போது வடிவ நேர்த்தியும் மிகவும் முக்கியம். சமூகத்தில் எவ்வளவோ பிரச்சினைகள் உள்ளன. எல்லாவற்றையும் குறும்படத்தில் கொண்டுவந்துவிடவும் முடியாது. இன்னுமொன்று, குறும்பட வடிவத்தின் வரையறுப்பையும் நாம் கவனத்திற் கொள்ளவேண்டும். இளங்கோ ராமின் 'மௌனக் கண்ணீர்', தர்மலிங்கத்தின் 'ஏன்?', ஜோசித்தனின் 'அப்பாவின் மிதிவண்டி' முதலியவை கவனத்துக்குரிய படைப்புகள் எனக் கருதுகிறேன்.

7. தமிழில் ஆரோக்கியமான – கனதியான திரைப்படங்கள் வராமைக்கான காரணங்கள் என்னவென்று நினைக்கிறீர்கள்?

தமிழ்த் திரைப்படங்கள் தமிழ் நாட்டில்தான் பெரிதும் தயாரிக்கப்படுகின்றன. திரைப்பட வணிகர்களால் வணிகநோக்கில் தயாரிக்கப்படுபவை அவை. இலாப நோக்கில் மட்டும் இயங்குபவர்களிடம் "ஆரோக்கியமான – கனதியான" கலைப் படைப்புகளை எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், பெருந்திரள் இரசிகர்களைத் திருப்திப்படுத்தும் "மசாலா" அம்சங்களைக்கொண்ட கதைகளை – ஆபாச ஆட்டம் பாட்டம், அடிபிடி வன்முறை, கோமாளி நகைச்சுவை, காதல் கனவுகத்தரிக்காய்.... என்ற எல்லாவற்றையும் சூத்திரமுறையில் திணித்தவற்றை – யதார்த்தமற்ற விதத்தில் உருவாக்கிக் காசு பார்ப்பது சுலபம் என்பதை அவர்கள் அறிவார்கள். நன்கு ஸ்தாபிதமாகிவிட்ட இப்போக்கைத் தகர்ப்பது கடினம். மாற்று முயற்சிகள் எப்போதும் பொருளாதார இழப்புகளைச் சந்திக்க நேர்கிறது. தற்போதைய டிஜிற்றல் தொழில்நுட்பம் குறைந்த செலவில்-ான படங்களைத் தயாரிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. மாற்றுமுயற்சிகள் பெருக இனி வாய்ப்புண்டு.

சற்று வித்தியாசமான திரைப்படங்கள் முன்பும் வந்துள்ளன. தற்போதும் வருகின்றன. இரசிகர்கள் வளர்த்தெடுக்கப்படுவ தும் அவசியம். அவர்கள் பார்த்து இரசிக்கும் படங்களின் "மூடத்தனங்கள்" பற்றி, ஊடகங்களிலும் வேறு வழிகளிலும் அவர்களுக்கு எடுத்துச் சொல்லப்படவேண்டும். பாடசாலைக-ளில் மாணவர் விழிப்பூட்டப்படுதலும் அவசியம்! தொடரும்


## கொய்யாத்தோட்ட மக்களின் கிறிஸ்மஸ் ஒன்றுகூடல்

கொய்யாத்தோட்ட மக்களின் கிறிஸ்மஸ் ஒன்றுகூடல் எதிர்வரும் மார்கழி மாதம் 13ம் திகதி 2014 அன்று, ***1686 Ellesmere Road, Scarborough M1H 2V5*** அமைந்துள்ள ***JC's Banquet Hall*** இல் இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது என்பதை கனடா வாழ் கொய்யாதோட்ட மக்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம். நீண்ட நாட்களுக்குப் பின்பு ஊர் உறவுகளைப் புதுப்பிக்க இந்த ஒன்றுகூடல் வழி வகுக்கும் என்பதால், அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இந்த ஒன்று கூடலில் உங்கள் பிள்ளைகளோ அல்லது நீங்களோ நிகழ்ச்சிகள் ஏதும் கொடுக்க விரும்பினாலோ அல்லது மேலதிக ஒன்று கூடல் பற்றிய விவரங்களை அறிய விரும்பினாலோ கீழே கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

இராஜசிங்கம் - ***416.258.1371*** / நந்தன்- ***416.830.9277*** / கிங்ஸ்லி - ***(416)-953-0370***

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

சிவா எனது கண்களையே பாருங்கள் ஸ்ரீபன் சிவாவுக்கு அறிவுறுத்தலாகக் கூறினார். இருவரும் ஒரு சிறிய மேசையின் எதிர் எதிர்ப் பக்கங்களில் இருந்தார்கள். சிவா நல்ல வசதியாக இருந்தான்..

'உங்களுடைய வலது கையை எனது கையின் மேல் வைத்து அழுத்துங்கள்

மேசையில் இருந்த ஸ்ரீபனின் இடது கையின் உள்ளங்கையைச் சிவா தனது வலது கையின் உள்ளங்கையால் அழுத்தினான்.
இன்னும் பலமாய் அழுத்துங்கள் சிவா அப்படியே செய்தான். கண்கள் ஸ்ரீபனின் விழிகளை ஆழமாகப் பார்த்துக் கொண்டு இருந்தன.
நல்லது சிவா, இப்பொழுது நீங்கள் ஆழ்ந்த உறக்கத்துக்குப் போகப் போகின்றீர்கள். நான் மூன்று வரையில் எண்ணியதும் நீங்கள் உறக்கத்துக்குள் சென்றுவிடுவீர்கள்.

ஸ்ரீபன் எண்ணத் தொடங்கினார். மிகவும் ஆறுதலாக எண்ணினார். ஆனால் உறுதியாக அவரது சத்தம் வந்தது.

ஒண்டு

இரண்டு

மூன்று

மூன்று எனக் கூறிய அக்கணமே தனது கையை ஸ்ரீபன் சிவாவின் கையின் அழுத்துகையில் நின்றும் வெளியே எடுத்துக் கொண்டார்.
சிவா அறிதுயில் நிலைக்குள் வந்து விட்டான்.

வித்தியாதரனும் கூட இருந்தார். இதுதான் வித்தியாதரனுக்கு அறிதுயில் பற்றிய முதல் நேரடி அனுபவம். முன்னர் ஒருபோதும் ஸ்ரீபனின் கிளினிக்குக்கு வந்ததில்லை. ஸ்மித் பதிவுகருவின் அருகில் இருந்து எல்லாவற்றையும் பதிவு செய்து கொண்டிருந்தார்.

சிவா நீங்கள் ....

ஸ்ரீபனின் நெறிப்படுத்தலின் வழியே சிவா எந்தவித தடங்கலுமின்றி பல விடயங்களைக் கூறத் தொடங்கினான். வித்தியாதரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவரது வாய் மற்றவர்களுக்குக் கேட்காது வொண்டபுல் என்றது.

இரண்டு மணியாகிவிட்டது. சிவா இன்னமும் வெளியில் வரவில்லை. நீலவேணிக்கு மெதுமெதுவாகப் பரபரப்பு தொற்றிக் கொண்டது. இரண்டு மணித்தியாலங்கள் எண்டால் பன்ரண்டு மணிக்கெல்லாம் முடிஞ்சிருக்க வேண்டுமே? இப்ப இரண்டு மணியாகுது. என்னவோ தெரியேல்லையே என மனதுக்குள் அங்கலாய்த்துக் கொண்டு இருந்தாள். நீரா இப்பவும் கூட இருந்தாள். இடையில் ஒரு தடவை வித்தியாதரன் வந்து போனார். நீராவிடம் ஏதோ கூறிவிட்டு, மீண்டும் உள்ளே சென்று விட்டார்.

நீரா ஒரு மணியளவில் நீலவேணிக்கு மக்டொனால்ஸில் இருந்து விரைவுணவுப் பொட்டலம் வாங்கி வந்திருந்தாள். முதலில் அதனை உண்ண மறுத்த நீலவேணி, நீராவின் வற்புறுத்தலால் உருளைக்கிழங்கின் வறுத்த சீவல்களை மாத்திரம் எடுத்து உண்டாள்.

அறையினுள்ளே சிவாவிற்கு வைத்தியம் நடந்து கொண்டு இருப்பதாகவும் எல்லாம் நல்லபடியாய் நடக்கிறது எனவும் வித்தியாதரன் கூறியதாக நீரா கூறியதன் பின்னரே நீலவேணி அதனைச் சாப்பிட்டு இருந்தாள்.

நேரம் மெதுமெதுவாக நகர்ந்து கொண்டு இருந்தது. மூன்றரை மணியளவில் வித்தியாதரன் ஸ்மித்துடன் வெளியே வந்தார். நீலவேணி இருக்கையில் நின்றும் எழுந்து வித்தியாதரனுக்கு கிட்வாக விரைந்து வந்து டொக்கடர்... அவள் கேள்வி கேட்க முன்பே வித்தியாதரன் பதில் கூறத் தொடங்கினார். வைத்தியம் நல்லபடியாக முடிந்து விட்டது. இப்ப எல்லாம் ஓகே என்றவர், சிவா ஓய்வு எடுத்துக் கொண்டு இருக்கின்றார். இன்னமும் அரை மணித்தியாலத்திலை வெளியாலை வந்திடுவார் எனக் கூறினார்.

**◊ கனி ◊**

நீலவேணிக்கு நிம்மதியாக இருந்தது. அப்ப இனி அந்தத் தலையிடி ஒண்டும் இனிவராது எண்டு சொல்லுறியள் டொக்டர்.

ஓம். இனி ஒரு பிரச்சனையும் இல்லை. நல்ல வடிவாய் திரிவர்.

அப்பாடா! அவர்பட்ட பாடு எனக்கெல்லோ தெரியும் என்றவள்,

டொக்டர், அந்த மக்டொனால்ஸ்சடியிலைதானே அந்த பேய் அவரைப் பிடிச்சது. நான் அப்பவும் சொன்னனான் சாப்பிட்டுட்டுப் போவோமெண்டு. தேப்பனும் மகனும் என்ரை பேச்சைக் கேட்டால்தானே. இப்ப பாருங்கோ எவ்வளவு சில்லெடுப்பாய் போச்சுது.

வித்தியாதரன் அவளின் அப்பாவித்தனமான பேச்சைச் சிரித்துக் கொண்டே கேட்டார்.

வித்தியாதரனின் முகத்தில் நீராவுக்கு, நீலவேணியிடம் ஏதோ கூற வேண்டும் அல்லது கேட்க வேண்டும் போன்ற தவிப்பொன்று இருப்பதை நீரா கண்டு கொண்டாள். ஆனாலும் ஒன்றும் பேசவில்லை. அதனை சரியெனக் கூறுவது போல ஸ்மித்தின் நடவடிக்கைகளும் இருந்தன..
வித்தியாதரன் மெதுவாகச் செருமிக் கொண்டே, நீலவேணியை அருகில் இருந்த இருக்கையில் அமரச் சொன்னார். அவளது இருக்கைக்கு முன்னால் ஒரு இருக்கையை இழுத்துப் போட்டுக் கொண்டு இருந்தவர் நீலவேணியை நிமிர்ந்து பார்த்தார்.

சற்று வித்தியாசமாக இது இருப்பதை உணர்ந்து கொண்ட நீலவேணி, டொக்டர் ஏதும்.... முடிக்கவில்லை. ஆனால் அவளது கண்கள் பயத்தைக் காட்டின. வித்தியாதரன் ஏதோ மறைக்கிறாரோ என எண்ணினாள்.

திரும்பி அக்கம் பக்கம் ஏனென்று தெரியாமலே பார்த்தாள். ஸ்மித்தும் நீராவும்

தொடர்ச்சி 33ஆம் பக்கம்



# BASEMENT RENT

**MIDLAND & EGLINTON**
Brand new 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.906.5013**

**MORNINGSIDE & STAINES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. January 01, 2015.
**416.494.7149 / 647.203.8774**

**WARDEN & HUNTINGWOOD**
Brand new bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities.
**416.720.8323 / 905.420.9790**

**MCCOWAN & LAWRENCE**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
**416.508.5383 / 416.894.9122**

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Avail. immediately.
**647.883.7045 / 416.264.6095**

**BELLAMY & BRIMORTON**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, park- ing, laundry. Close to TTC, school. Avail. immediately.
**416.509.0937 / 416.917.3846**

**HWY10 & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**647.232.9068 / 647.385.5011**

**NEILSON & FINCH**
Beautiful 2 bedroom bsmt for rent. Sep. entrance, Close to TTC, grocery & park. Small family or bachelors preferred.
தொடர்புகளுக்கு: **647.606.3230**

**MCCOWAN & FINCH**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. immediately.
**416.720.2171 / 416.298.1872**

**BRIMLEY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to bus, school, stores. Avail. immediately.
**416.294.5049 / 416.546.9566**

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. January 01, 2015.
**416.710.8304 / 647.716.9157**

**MARKHAM & LAWRENCE**
1 Big large bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, parking, internet. Close to all facilities. Avail. immediately.
**416.438.2552 / 647.853.5524**

**MORNINGSIDE & MCNICOLL (Seasons Dr.)**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. Ladies or couple preferred.
தொடர்புகளுக்கு: **416.833.8903**

**ELLESMERE & SCAR.GOLF CLUB**
Newly renovated 2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, internet. Close to University, TTC, school. Avail. immediately.
**416.550.8748 / 416.566.0595**

**WARDEN & FINCH**
Big bright rooms for rent. Sep. entrance, parking, laundry, internet. Full furnished. Close to all facilties. Avail. immediately. 40 வயதுக்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **647.391.4637**

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.3279**

**MCLEVIN & NEILSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, no parking, laundry. Close to all facilities. Avail. Anytime. Couple or single person preferred.
தொடர்புகளுக்கு: **647.853.8563**

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.300.6921 / 647.621.2813**

**MORNINGSIDE & MCNICOLL**
Brand new 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC - 133, 53, mall, school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: **416.420.4497**

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail.immediately.
தொடர்புகளுக்கு: **416.829.3212**

**MCCOWAN & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, Elementary & Highschool.
தொடர்புகளுக்கு: **416.823.7576**

**SHEPPARD & MORNINGSIDE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. Ladies or school students preferred. தொடர்புகளுக்கு: **416.283.8207**

**KENNEDY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, bank, school, bank. Avail. December 01, 2014.
**416.356.5532 / 647.349.0136**

**MIDDLEFIELD & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.266.8093**

**BRIMLEY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking. Close to TTC, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.737.4066**

**MEADOWVALE & SHEPPARD**
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to HWY 401, TTC. Move in ready with internet. தொடர்புகளுக்கு: **416.302.0733**

**9 TH LINE & 14TH AVE.**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Bills included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.400.5525**

**MORNINGSIDE & SHEPPARD ROUGH RIVER**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.892.2201**

**BIRCHMOUNT & LAWRENCE**
Newly renovated 2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, laundry. Groceries, bus, shopping centers close by. Avail. December 01, 2014.
**416.757.9998 / 647.637.5345**

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**905.471.2444 / 647.998.0181**

**MCCOWAN & ELSON**
Newly renovated bsmt apt. for rent. Sep. entrance, parking, laundry. Step to school, TTC. Quiet place. Park near-by. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.991.4437**

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, wi-fi included. Close to Era super market, TTC, school. Avail. December 01, 2014.
தொடர்புகளுக்கு: **416.838.9007**

**STAINES & STEELES**
Newly renovated 1 bedroom walk-out bsmt for rent. Open concept big windows. Close to Public school, TTC, HWY 407. Friendly neighborhood. Internet, cable. utilities inclu. No pets. Rent $800. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.309.3678**

**9TH LINE & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. December 01, 2014. Couple preferred. தொடர்புகளுக்கு:
**905.209.7998 / 416.918.1025 / 647.262.8443**

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. Couple preferred.
**416.578.8385 / 647.219.4505**

**MIDDLEFIELD & DENISON**
Brand new 2 bedroom BSMT for rent. Sept. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.937.1352**

**SEASONS & STAINES**
Newly built 2 bedroom bsmt for rent. Close to all facilities. Avail. December 01, 2014.
தொடர்புகளுக்கு: **416.284.6806**

**MORNINGSIDE & STAINES**
2 Bedroom bsmt for rent. Kitchen, washroom, laundry. Utilities included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.236.2024**

**BRIMLEY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, large kitchen, washroom, laundry, cable, internet. Close to TTC & all facilities.
தொடர்புகளுக்கு: **416.265.0162**

**FINCH & PHARMACY**
2 Bedroom walk-out bsmt for rent. Kitchen, living room, laundry, parking. Close to hospital, elementary / high school, TTC, SUBWAY. தொடர்புகளுக்கு: **416.491.2723 / 647.330.7221 / 416.457.8206**

**MCCOWAN & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall, internet, cable. Couple or working boys preferred. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:
**416.834.4200**

**MORNINGSIDE & STAINES**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, laundry, internet. Close to school, TTC, UFT Campus.
தொடர்புகளுக்கு: **647.470.7132**

**MARKHAM**
1 Bedroom BSMT apartment - McCowan & Denison - $800 per month
2 Bedroom BSMT apartment - McCowan & Denison - $1100 per month
2 Bedroom Walk Out BSMT Apartment - Markham & Sheppard - 2 B/R BSMT $1000
**SCARBOROUGH**
Room for rent - Markham & Sheppard - Ladies preferred - $500 per month.
Contact: **416.567.7675**

**MORNINGSIDE & SWELLS**
2 Bedroom bsmt for rent. Se.entrance, parking, laundry. Close to TTC, school. Avail. December 15, 2014.
தொடர்புகளுக்கு: **647.741.9339**

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.830.7689**

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall, YRT. Avail. immediately.
**416.576.0602 / 905.471.1374**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. December 01, 2014.
**647.349.0938 / 647.741.5335**

**EGLINTON & BELLAMY**
2 bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Avail. December 01, 2014.
தொடர்புகளுக்கு: **416.709.1723**

**MORNINGSIDE & STAINES**
Fully renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, washroom. Close to TTC, school, park, temple. Rent $800. Including utilities.
தொடர்புகளுக்கு: **416.726.3940**

மேலும் பக்கங்கள் 27, 28, 29

**www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**

# BASEMENT RENT

**9TH LINE & 14TH AVE.**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, TV. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.662.1418**

---

**BIRCHMOUNT & LAWRENCE**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, subway, school. Family or students preferred. Avail. December 01, 2014.
**416.701.9942 / 647.883.2257**

---

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sept. entrance, Parking, laundry. Close to all facilities. Avail. immediartely.
தொடர்புகளுக்கு: **647.287.8496**

---

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
3 bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Furnitures included. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.2253**

---

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen. Close to TTC, mall, temple. Avail. immediately.
Small family / ladies preferred.
தொடர்புகளுக்கு: **416.754.4917**

---

**BELLAMY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, free internet, cable.
2 people preferred. Close to TTC, mall, GO Station. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.877.1719**

---

**SCAR.GOLF CLUB & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, internet, cable. Close to all facilities. Avail. immediately.
No pets & No smoking.
தொடர்புகளுக்கு: **647.781.2536**

---

**9TH LINE & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. **416.939.9353/ 647.994.7410 / 416.875.3611**

---

**MORNINGSIDE & MCNICOLL**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**647.830.4653 / 416.759.4653**

---

**WARDEN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, living room, laundry, washroom, cable & internet including. Close to all facilities. Avail. immediately. பெண்கள் மட்டும்.
தொடர்புகளுக்கு: **647.469.1295**

---

**MCCOWAN & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, park ing, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.412.0406 / 416.271.9676**

---

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, Scarborough Town Center.
Avail. December 01, 2014.
**416.939.5752 / 647.530.4548**

# BASEMENT RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, UTSC, college, school. Avail. immediately.
1 Bedroom also available.
**416.432.7405 / 647.342.2243**

---

**KENNEDY & EGLINTON**
3 bedrooms BSMT for rent. Sep. entrance, parking, laundry, kitchen. Close to TTC, mall, school. No pets & No smoking. Family or single working person preferred.
Avail.immediately.
தொடர்புகளுக்கு: **416.757.7792**

---

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt also available.
**647.500.4564 / 905.472.1370**

---

**MARKHAM & FINCH / TAPSCOTT**
3 Bedroom or 4 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Rent $900 + 40% utilities. No smoking & No pets. No alcohol. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.855.2148**

---

**MARKHAM & LAWRENCE**
Bsmt for rent. Sep. entrance, kitchen. Avail. immediately. Utilities included. Close to TTC, HWY, mall. Rent $ 590.
தொடர்புகளுக்கு: **647.706.4881**

---

**DONMILLS & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Very strictly No smoking, No drink & No pets. Rent $550.
தொடர்புகளுக்கு: **647.855.2148**

---

**MARKHAM & 14TH AVE.**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Rent $550. Avail. immediately. 1 Bedroom also avail. தொடர்புகளுக்கு: **416.735.5623**

---

**BASEMENT & ROOMS FOR RENT ETOBICOKE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. 2 Bedroom also rent in main floor. Close to Humber College & all facilities. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: **416.318.4681**

---

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: **416.551.8379**

---

**BRIMLEY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.358.3714 / 416.587.2314**

---

**MARKHAM & PAINTEDPOST**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.402.2937**

# ROOM FOR RENT

**TAPSCOTT & MCLEVIN**
1 Bedroom for rent. Laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
Boys preferred.
தொடர்புகளுக்கு: **416.754.8947**

---

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom for rent. Laundry. Close to TTC, mall, school, bank. Working ladies preferred. Avail. January 01, 2015.
தொடர்புகளுக்கு: **416.312.8658**
Weekdays ( After 4:00pm)
Weekends (Anytime)

---

**WARDEN & LAWRENCE**
அறை வாடகைக்கு உண்டு. மிகுதி பேசி தீர்மானிக்கப்படும். மேலதிக தொடர்புகளுக்கு பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றை பதிவு செய்யவும்.
தொடர்புகளுக்கு: **647.388.1481**

---

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.356.1477**

---

**MIDDLEFIELD & DENISON**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Internet, cable. Avail. immediately.
Boys preferred.
**905.554.5810 / 416.648.1987**

---

**MARKHAM & ELLESMERE**
1 Bedroom for rent in 3 bedroom apartment. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.856.1983**

---

**MIDLAND & EGLINTON**
1 Bedroom for rent in a condo. Laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: **647.500.7136**

---

**FINCH & MIDDLEFIELD**
1 Bedroom for rent in a bsmt. Single person preferred. Kitchen available for light cooking. Close to all facilities.
தொடர்புகளுக்கு: **416.493.0590**

---

**ORTON PARK & LAWRENCE**
2 Rooms for rent in a bsmt. மாதம் வாடகை $350. Parking. Close to all facilities. அறைகள் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
**416.701.0667 / 647.928.0667**

# ROOM FOR RENT

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom for rent. Parking. Close to TTC, mall. Avail. immediately.
**647.346.0930 / 647.862.6590**

---

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
தொடர்புகளுக்கு: **416.335.5242**

---

**KENNEDY & ELLESMERE**
இரு முதியோர் (Husband & Wife) வாழும் வீடொன்றில் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. All utilities included. Laundry. Close to Highland Farm, TTC, school, Hopper hut. வேலை பார்க்கும் அல்லது படிக்கும் மாணவிகள் / பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.
**416.291.6667 / 416.895.8111**

## BASEMENT FOR RENT OR ROOM FOR RENT

**FINCH & NEILSON**
1 Bedroom for rent in a main floor. 1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. வயதானவர்கள் விரும்பத்தக்கது. விரும்பினால் சாப்பாடும் கொடுக்கப்படும்.
**647.351.6154 / 647.648.1272**

---

## HOUSE FOR RENT OR ROOM FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to TTC, mall. Single garage. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
**647.621.6701 / 416.856.7700**

## CONDO. FOR RENT

**NEILSON & TAPSCOTT**
Fully renovated 2 Bedroom condo. for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail.immediately.
தொடர்புகளுக்கு: **647.765.3303**

மேலும் பக்கங்கள் 26, 28, 29

# BASEMENT FOR RENT

## EGLINTON & BRIMLEY

2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school, stores.
தொடர்புகளுக்கு: **905.428.7887**

# BSMT FOR RENT

2 Bedroom bsmt for rent @ ***Middlefield & Elson***.
Both closed to public transit, shopping , Catholic & public schools & all amenities.

**Contact: 416.857.9773**

**CONDO. PROJECT - BRIMLEY GARDENS - SCARBOROUGH**

2 Bedrooms, 3 bedrooms, 1 bedroom Commercial units for sale. இவற்றை வாங்குபவர்களுக்கு 10% கழிவு மாதாமாதம் கொடுக்கப்படும். இது ஓர் அரிய வாய்ப்பு, தவற வேண்டாம்.

தொடர்புகளுக்கு: **416.727.6525**

**திருமண சேவை**

மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.

*647.556.4114 / 416.992.8782*

**வாகன போக்குவரத்து**

வெஸ்ரன் யூனிவசிட்டி தமிழ் மாணவர்களுக்கு ஸ்காபரோவில் இருந்து வாகன போக்குவரத்து சேவை நடைபெறுகிறது. உங்கள் பிள்ளைகளுக்கு பொருட்கள் கொடுத்து விடலாம். பின்பு வெள்ளி மாலை 5:30 மணிக்கு வெஸ்ரன் யூனிவசிட்டியில் இருந்து வாகனம் திரும்பும். எயர்போட் போக்குவரத்து சேவையும் உண்டு.

தொடர்புகளுக்கு: **416.880.5952**


மேலும் பக்கங்கள் 26, 27, 29


***LOOKING FOR PEOPLE TO FILL THE POSITION OF... • HOOD CLEANER •GENERAL HELPER***

***Qualifications: • Must live in Scarborough • Must have G2 or G Licence***

***Pay will be $11.50 + Vacation pay.***

Please email the resume to info@cpmcleaning.com. Please call between the hours of 9:00 am to 5:00 pm. Please do not call if not living in Scarborough or not able to use your licence. monthly you may earn more than $2000.

***Fax: 1866.608.0713 Tel: 416.453.0000***

**வேலை வாய்ப்பு**

ரொரொன்ரோவில் இயங்கிவரும் பத்திரிகையில் முழுநேரமாக தொழில் புரிவதற்கு தகுந்தவர் தேவைப்படுகின்றது. தமிழ், ஆங்கிலம் தட்டச்சு தெரிந்தவர், தமிழ், ஆங்கிலம் பேசக்கூடியவர் கீழுள்ள email இற்கு தங்களது சுயவிபரப் படிவத்தை (Resume) ஐ அனுப்பி வைக்கலாம். நேர்முக சந்திப்பிற்கு தெரிவு செய்பவர்கள் மட்டுமே அழைக்கப்படுவார்கள் என்பதனையும் தெரியப்படுத்துகின்றோம்.

*email: vlambaram@sympatico.ca*


# நினைவுகள் - இயக்குனர் ருத்ரைய்யா

## தமிழ்ப் பாலையில் ஒரு பசுஞ்சோலை!

தமிழ் சினிமா நூறாண்டு வரலாற்றில் 1975 – 1985 வருடங்களுக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. தமிழ் சினிமாவின் நூற்றாண்டு வறட்சியில் ஆங்காங்கே ஒளிரும் சில நம்பிக்கைக்குரிய படங்களில் பெரும்பான்மை யானவை இக்காலகட்டத்தில்தான் வெளி வந்தது. இன்றளவிலும் பேசப்படக்கூடிய படங்களாக இருக்கும் பாரதிராஜாவின் '16 வயதினிலே' (1977), ருத்ரைய்யாவின் 'அவள் அப்படித்தான்' (1978), மகேந்திரனின் 'உதிரிப் பூக்கள்' (1979), கே. பாலசந்தரின் 'தண்ணீர் தண்ணீர்' (1981), பாலு மகேந்திராவின் 'மூன்றாம்பிறை' (1983) என தமிழ் சினிமாவில் பெருமாற்றம் நிகழ்ந்த காலகட்டம் இது. பிறகு, இந்த மாற்றம் வணிக சினிமாக்காரர்களால் திட்டமிட்டு அழிக்கப்பட்டது வரலாறு. 'முரட்டுக்காளை' (1980), 'சகலகலா வல்லவன்' (1982) என வணிகத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்ட ஆறாக தமிழ் சினிமா தடம்மாற பல நம்பிக்கை இயக்குநர்கள், நடிகர்கள் அதற்கேற்றாற்போல் தங்களை மாற்றிக் கொண்டு அந்த ஆற்றோடு பயணம் செய்தார்கள். இவர்களில் இருந்து விலகி எதிர்நீச்சல் அடித்தவர் தமிழ் சினிமாவின் நுட்பமான கலைஞரும் சமீபத்தில் காலமானவருமான ருத்ரைய்யா (67) மட்டுமே. மனிதர்கள் அனைவரும் ஒருநாள் காலமாகத் தான் வேண்டும் என்றாலும், வணிகத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்ட தமிழ் சினிமாவின் மீது பெரும் கோபத்துடனும் அதனை மாற்றும் பெரும் கனவுடன் நுழைந்த இந்தக் கலைஞன் இரண்டு படங்களுடன் சூழலில் இருந்தே ஒதுக்கப்பட்டு, அதன்பிறகு 34 வருடங்கள் படம் எதுவும் செய்யாமல் அதற்கான முயற்சியிலேயே இருக்க வைக்கப்பட்டார் என்பது பெரும் சோகம், நல்ல தமிழ் சினிமா விரும்பிகளின் துரதிஷ்டம்!

சேலம் மாவட்டம் தலைவாசலைச் சேர்ந்தவர், ருத்ரைய்யா. தஞ்சை மாவட்டத்தை பூர்வீகமாகக் கொண்டவர். இவரது இயற்பெயர் ஆறுமுகம். திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் படித்த ருத்ரைய்யா, அதன்பிறகு சினிமா மீது கொண்ட ஈர்ப்பால் சென்னை அடையாறு திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து திரைக்கதை, இயக்கம் படித்தார். ஒளிப்பதிவாளர் நல்லுசாமி, ஞானசேகரன், அருண்மொழி, எடிட்டர் கண்ணன், பின்னாட்களில் இயக்குநர் கே. ராஜேஷ்வர் என அறியப்பட்ட சோமசுந்தரேஸ் வரர் ஆகியோர் இதேகாலகட்டத்தில் அக்கல்லூரியில் பயின்றார்கள். எனவே, கல்லூரிக்குள் ஒரு நல்ல நண்பர்கள் குழு ருத்ரைய்யாவுக்கு அமைந்தது. கல்லூரிக்கு வெளியே எழுத்தாளர் வண்ணநிலவன் நண்பரானார். ருத்ரைய்யா அப்போது ராயப்பேட்டை லாயிட்ஸ் காலனியில் தங்கியிருந்தார். வண்ணநிலவன் ஊரிலிருந்து சென்னை வந்து வேலை தேடிக்கொண்டிருந்தார். தன் அறை சகாவாக வண்ணநிலவனைச் சேர்த்துக்கொண்டார் ருத்ரைய்யா. 'அருமையான படிப்பாளியான ருத்ரய்யா, இக்காலகட்டத்தில் பிரான்ஸில் 1960களில் எடுக்கப்பட்ட 'புதிய அலை' திரைப்படங்களால் ஈர்க்கப்பட்டிருந்தார்' என்று அந்நாட்களை நினைவுகூர்கிறார் வண்ணநிலவன்.



திரைப்படக் கல்லூரிக்குள் மாணவர்கள் யூனியன் தலைவராக, தீவிரமாக செயல்படும் போராளியாக பெயர்பெற்ற ருத்ரைய்யா தங்கப் பதக்கம் பெற்று துடிப்புள்ள கலைஞனாக வெளியே வந்தார். அப்போது 'தமிழ் சினிமாவை உருமாற்ற வேண்டும்' என்ற ஆர்வத்தோடு இருந்த கமலஹாசன், ஆர்.சி. சக்தி, கே. பாலசந்தர் உதவியாளர் அனந்து ஆகியோர் அடங்கிய குழுவுடன் ருத்ரைய்யாவுக்கு நெருக்கம் ஏற்பட்டது. இவர்கள் சந்தித்தால் கோடார்ட், போலன்ஸ்கி, ரோஸெலினி, பிரெஸ்ஸான் என உலக சினிமாவைச் சுற்றி மணிக் கணக்கில் பேச்சு நீளும் என்பதால் இவர்களது சந்திப்பு குறித்து அச்சப்பட்டவர் களும் இருந்தனர். சென்னை திரைப்படக் கல்லூரியில் தனக்கு இருந்த செல்வாக்கை பயன்படுத்தி, வெளிநாட்டுத் திரைப்படங்களை வரவழைத்து இக்குழுவினருக்கு அறிமுகப் படுத்தினார் ருத்ரைய்யா. 'அக்காலகட்டத்தில் எல்டாம்ஸ் சாலையில் இருந்த எனது வீடு ஒரு சிறிய திரைப்பட விழாவைப் போல இருக்கும்' என்று ஒரு பேட்டியில் நினைவுகூர்ந்துள்ளார் கமலஹாசன். 'அபூர்வ ராகங்கள்' திரைப்படத்தில் பிரசன்னா என்ற பாத்திரத்தில் ஒன்றி நடிப்பதற்கு ருத்ரய்யா எனக்கு உதவினார். அந்தப் பாத்திரத்தைப் போலவே ருத்ரய்யாவும் இடதுசாரி கொள்கை உடையவர் என்பதால், அவரால் சிறப்பாக வழிகாட்ட முடிந்தது'' என்கிறார் அப்பேட்டி யில் கமலஹாசன். தமிழ் சினிமாவை அடுத்தத் தளத்திற்கு எடுத்துச் செல்லுமாறு ஒரு திரைப்படத்தை எடுக்க வேண்டும் என விரும்பிய ருத்ரைய்யா, ஒரு படத் தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்குவதற்கான வேலை களில் இறங்கினார். அவருடைய அக்காள் கணவர் உதவியுடன் 'குமார் ஆர்ட்ஸ்' என்ற நிறுவனம் உதயமானது. சென்னை, ஆழ்வார்பேட்டையில் பிரபல பின்னணிப் பாடகி பி. சுசீலாவின் வீட்டுக்கு அடுத்த பங்களாவில் 'குமார் ஆர்ட்ஸ்' இயங்கத் தொடங்கியது. இந்த இடத்தில்தான் 'பராசக்தி' படத்தைத் தயாரித்த 'நேஷனல் பிக்சர்ஸ் கம்பெனி' முன்பு இருந்தது.

ருத்ரைய்யாவின் முதல் சினிமா கனவு தி. ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்' நாவலைப் படமாக்க வேண்டும் என்பதுதான். அதற்கு நாயகனாக கமல்ஹாசனை மனதில் வைத்திருந்தார். முதலில் திரைக்கதை வசனத்தை எழுத்தாளர் வண்ணநிலவன் எழுதினார். திரைக்கதைக்கு ஒப்புதல் வாங்குவதற்காக, அப்போது டில்லியில் இருந்த தி. ஜானகிராமனைச் சந்திக்க, தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரயிலில் வண்ண நிலவனை டெல்லிக்கு அனுப்பிவைத்தார். தி. ஜானகிராமனுக்கு முன்பணமாகக் கொடுக்க 10 ஆயிரம் ரூபாயையும் வண்ணநிலவனிடம் கொடுத்தனுப்பியிருந்தார். அப்போது அது பெரிய தொகை. தி. ஜானகிராமன் தனக்குத் திரைக்கதை பற்றிப் பெரிதாகத் தெரியாது என்று சொல்லி, அவரது நண்பரும் இந்திப் பட இயக்குநருமான ரஷிகேஷ் முகர்ஜியிடம் கொடுத்துக் கருத்துக் கேட்க வேண்டும் என்றார். இதற்காக வண்ணநிலவன் 10 நாட்கள் டெல்லியிலேயே தங்கியிருந்தார். அத்திரைக்கதையை படமாக்க தி. ஜானகி ராமன் ஒப்புதல் கிடைத்தபிறகே சென்னை திரும்பினார். ஆனாலும், அப்படக் கனவு நிறைவேறாமலே கலைந்துபோனது. பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, தி. ஜானகிராமன் டெல்லியிலிருந்து ஓய்வுபெற்று சென்னை திரும்பியபோது அந்தப் பணத்தைத் திரும்பக் கொடுத்துவிட்டார்.

ருத்ரைய்யாவின் இரண்டாவது முயற்சி 'அவள் அப்படித்தான்.' இதில் பங்குபெற்ற பல தொழில் நுட்பக் கலைஞர்களுக்கு அதுதான் முதல் படம். பெரும்பான்மை வேலைகளில் தனது சக மாணவர்களையே ஈடுபடுத்தினார் ருத்ரைய்யா. ஒளிப்பதிவாளராக சக மாணவர் நல்லுசாமியை வைத்துக்கொண்டார். அவருக்கு உதவியாக அருண்மொழி, ஞானசேகரன் ஆகியோர் இருந்தனர். படத்தின் உதவி இயக்குனராகப் பணிபுரிந்த பாபுவும் ருத்ரையாவும் வகுப்புத் தோழர்கள். படத்தின் 'ஒன்லைனை' முழுமையாக எழுதிக் கொடுத்தவர் சோமசுந்தரேஸ்வரர். அனந்து, சோமசுந்தரேஸ்வர், வண்ணநிலவன் மூவரும் இணைந்து காட்சிகளையும் வசனத்தையும் எழுதினார்கள். 'இதில் நான் 20 காட்சிகளை எழுதினேன். யார், யாரிடம் எந்தெந்தக் காட்சிகளைக் கொடுத்து வசனம் எழுதி வாங்க வேண்டும்

தொடர்ச்சி 30ஆம் பக்கம்

# HOUSE FOR RENT

**BRIMLEY & SHEPPARD**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime. 2 Bedroom bsmt also for rent. Sep. entrance.
தொடர்புகளுக்கு: **416.999.4842**

**MARKHAM & STEELES**
3 Bedroom house for rent.
**HWY 07 & 9TH LINE**
5 Bedroom house for rent. Close to all facilities. Avail. immediately.
**647.284.2499 / 905.201.7693**

**MORNINGSIDE & NIGHT STAR**
4 Bedroom house for rent. Parking, laundry. Close to TTC, school. Avail. immediately.
**416.299.9183 / 647.341.5126**

**OSHAWA**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to University, mall. Avail. immediately.
**416.264.9642 / 416.833.9567**

**MCCOWAN & STEELES**
4 Bedroom house for rent. Parking, laundry. Close to Amadale school, TTC. Avail. January 01, 2015.
தொடர்புகளுக்கு: **905.470.6969**

**MARKHAM & PASSMORE**
3 Bedroom house for rent. Bsmt not finished. Parking, laundry. Close to TTC, school, mall, HWY 401 & 407. Avail. immediately.
**647.888.3436 / 647.269.0193**

**TAPSCOTT & FINCH**
4 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.849.0759**

**MCCOWAN & BUR OAK**
3 Years old 4 bedroom house for rent. 2½ Washrooms. Mostly furnished. Close to TTC, school, Babu Take-out & catering & facilities. Avail. February 15, 2015.
தொடர்புகளுக்கு: **647.628.6991**

**COLLINS & ELLESMERE**
5 Bedroom house for rent. Parking, laundry. Close to Centennial college, U OF T. Family or student preferred. Avail. immediately.
**416.219.0028 / 416.293.6186**

**BELLAMY & ELLESMERE**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. January 01, 2015.
தொடர்புகளுக்கு: **647.344.2152**

**STAINES & STEELES**
4 Bedroom house for rent. 2 Garage parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: **416.899.4823**

**MORNINGSIDE & STAINES**
4 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. December 01, 2014.
**647.385.2447 / 416.988.2448**

**KENNEDY & ELLESMERE**
3 +1 Bedroom bungalow house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.292.3900**

மேலும் பக்கங்கள் 26, 27, 28

# HOUSE FOR RENT

**MIDDLEFIELD & PASSMORE (MIILLIKEN)**
3 Bedroom house for rent. 1½ washroom, Parking, laundry. Close to TTC, bank. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.844.7390**

**MEADOWVALE & SHEPPARD**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. அறைகள் தனித்தனியாக கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: **647.625.2150**

**MARKHAM & STEELES**
4 Bedroom 2 storey house for rent. Parking, laundry, 3 washrooms. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.995.3960**

**MCCOWAN & LAWRENCE**
3 Bedroom bungalow house for rent. Parking, laundry. Close to TTC, schools, bank, hospital, etc. தொடர்புகளுக்கு:
**647.309.9909 / 647.344.9379**

**WARDEN & ELLESMERE**
3 Bedroom house for rent.
**WHITBY**
3 Bedroom bsmt for rent.
**416.458.0319 / 647.955.5217**

**NEILSON & SHEPPARD**
3 Bedroom house for rent. 1 Bedroom bsmt also rent. Parking, laundry. Close to all facilities. Avail. December 01, 2014.
**416.287.6503 / 647.766.6503**

**9TH LINE & STEELES**
4 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.939.9353/ 647.994.7410 / 416.875.3611**

# HOUSE FOR SALE

**HARWOOD & KINGS CR.**
Brick detached bungalow house for sale - Ajax. Finished BSMT, sep. entrance. Close to all facilities. Price $299,900. Why pay rent. When you can own.
**MIDLAND & ST.CLAIR**
Store with Apartment for sale in Scarborough. Price $379,900. Tenant pays utilities, Rental incom $2,100 /permonth. தொடர்புகளுக்கு:
**416.917.0557**
***Rajah Masillamany***
***(HomeLife / Future Realty Inc.)***


## தையல் *Orders*

**BELLAMY & ELLESMERE**
Saree Blouses, Churidar, Flower girl's Dresses. All kind of Alteration.
***(Special made One Minite Saree)***
தொடர்புகளுக்கு: **647.624.6847**

## புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிகத் தரமான புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு.

- சிறியது $3
- நடுத்தரம் $4
- பெரியது $5



*வரி கட்டப்பட்டது*
தொடர்புகளுக்கு: **647.629.9095**

## விற்பனைக்கு

***Scarborough*** வில் ஓர் வாகனம் திருத்தும் நிறுவனம் (Garage) விற்பனைக்கு உண்டு. கறாச் நடத்த தேவையான உபகரணங்களும் சேர்த்து விற்பனைக்கு உண்டு. சிவா அல்லது சபா:
**416.752.2642/ 416.759.2769**
மேலும் யாழ்ப்பாணம் - சுன்னாகத்தில் KKS ரோட்டில் ஓர் சிறிய கடை விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: சிவா - **416.759.2769**

## காணி விற்பனைக்கு

நுணாவில் சந்திக்கு அருகாமையில் 3 கடையுடன் கூடிய 13 3/4 பரப்புக்காணியும், வீடு கட்டக்கூடிய 3 3/4 பரப்பும் விற்பனைக்கு உள்ளது.
**416.414.7892 / 078.396.8308**

## காணி விற்பனைக்கு

பளையில் இயக்கச்சி வாடியடி சந்தியில் 80 acre land மேட்டுக்காணி விற்பனை உண்டு.
**647.880.1416 / 077.500.2162**

## RESTAURANT FOR SALE

**KINGSTON & CLIFFSIDE**
PIZZAVILLE Restaurant for sale. Busy location. தொடர்புகளுக்கு:
Iqbal: **416.526.8454**

# CAR FOR SALE

2003 - Honda RVC, Toyota 2000 விற்பனைக்கு உள்ளன. 4 Door car.
தொடர்புகளுக்கு: **416.267.0072**

## பழைய பொருட்கள் தேவை

பழைய இரும்பு பொருட்கள், தொலைக்காட்சி பெட்டி, மற்றும் வேறு பல பொருட்கள் நீங்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு: **647.835.5244**

## TRANSPORT FOR WESTERN UNIVERSITY STUDENTS

- From Scarborough to London
- From London to Scarborough
- Friday, Saturday, Sunday.
- Food & packages can be delivered to students
- Can seat 7 passengers.
- Also Airport service.

தொடர்புகளுக்கு: **416.880.5952**

## TUITION

An experienced Graduate tutor for Grade 5 to Grade 10. Math & Science. Tuition Center இலும், வீட்டிற்கு வந்தும் குறைந்த கட்டணத்தில் கற்பிக்கப்படும். College University math short course. Guna Master: **647.834.7358**
atgunam@yahoo.ca

## TUITION CLASSES

Gr. 3 - Gr.12, College & University Math, Science, English, Functions Calculus & Vectors, Data, physics, Chemistry & Biology.
***University preparation class.***
***Calculus 1 &2, Linear Algebra, Statics & Dynamics, Mechanics, Physics, Chemistry.***
***Ruban Master: 416.817.8226***

## DAY CARE

**DANFORTH & EGLINTON**
6 மாதத்தில் இருந்து 3 வயது வரை உள்ள குழந்தைகளை கவனமாகவும் அன்பாகவும் பராமரிக்க வேண்டுமா? அத்துடன் Snacks, Meals & Activity programmes என்பன கொடுக்கப்படும். Pet Free.
**647.859.2492 / 647.765.4978**

# JOB JOB JOB

## TELE MARKETING

வேலைக்கு ஆள் தேவை. ஆங்கிலம், தமிழ் சரளமாக பேசத்தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **416.230.2991**

Scarborough வில் அமைந்துள்ள தமிழ் உணவகம் ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை. பகுதி நேரமாகவோ அல்லது முழு நேரமாகவோ விரும்பத்தக்கது. பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **416.615.1079**

**DANFORTH & BROADVIEW**
Cook, kitchen help, waiter wanted. Full-time or part-time விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **416.417.0750**

**TELE MARKETING**
Tele Marketing வேலைக்கு அனுபவமுள்ளவர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **416.292.3900**

## JOB JOB JOB

**MARKHAM & SHEPPARD**
***Stairs*** செய்யும் நிறுவனம் ஒன்றிற்கு அனுபவம் உள்ள ***Worker*** தேவை. ஆர்வமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். திங்கள் - சனிக்கிழமை. முழுநேர வேலை.
தொடர்புகளுக்கு: **416.830.3932**

**FINCH & MIDDLEFIELD**
GTA Square இல் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு Cashier, cleaner, cook ஆகிய வேலைகளுக்கு ஆட்கள் தேவை. தொடர்புகளுக்கு:
**416.318.9866**

## தையல் வகுப்புக்கள் தையல் *Orders*

**MARKHAM & LAWRENCE**
Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse மற்றும் Ladies Items தைப்பதற்கு கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். மணப்பெண்ணுக்கும் Saree blouse தைத்துக் கொடுக்கப்படும். Saree Blouse Block எடுத்து தைப்பதற்கு கற்பிக்கப்படும்.
**416.438.2552 / 647.853.5524**

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:**905.492.0259**

**சோலியில்லாமல் உடனடியாக உங்கள் வீடு, கொண்டோ அல்லது பேஸ்மெண்ட்டை வாடகைக்கு விட வேண்டுமா?**

அழையுங்கள்
**Jey 416-816-9011**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# நினைவுகள்...


28ஆம் பக்கத்தொடர்ச்சி

என்ற நுட்பம் ருத்ரையாவுக்குத் தெரிந்திருந்தது. அதன்படி காட்சிகளைப் பிரித்துக் கொடுப்பார்'' என்கிறார் வண்ணநிலவன். கே. பாலசந்தரின் உதவியாளராக இருந்த அனந்து திரைக் கதை, வசனம் தவிர மேலும் பலவகை களிலும் 'அவள் அப்படித்தான்' உருவாக்கத்தில் உதவியிருக்கிறார். 'கதை ருத்ரைய்யாவுடையதாக இருந்தாலும் ரஜினி, ஸ்ரீப்ரியாவின் கதாபாத்திரங்களை சிறப்பாக உருவாக்கியவர் அனந்துதான். 'அவள் அப்படித்தான்' என்ற தலைப்பே அவர் சொன்னதுதான்'' என்கிறார் ஒளிப்பதிவாளர் நல்லுசாமி.

1978... தமிழ் சினிமாவில் 'வண்ணம்' வந்து சில வருடங்களும் ஆகிவிட்டது. அந்த வருடத்தில் வெளியான படங்களில் பெரும்பாலானவை வண்ணப்படங்களே. ஆனாலும், பொருளாதாரச் சிக்கனத்துக் காகவே 'அவள் அப்படித்தான்' படத்தை கருப்பு வெள்ளையில் படம்பிடித்தார்கள். (ஆனால், அதுவே அப்படத்தின் சிறப்பம்சமாக இப்போது உணரப்படுகிறது.) 'அன்றைய தேதியில் கமல் பல படங்களில் நடித்து வந்தார். இருந்தாலும் 'அவள் அப்படித்தான்' படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டதுடன், தன் செல்வாக்கைப் பயன்படுத்தி பல உதவிகளையும் செய்தார். 'காஸ்டியூம்' வரை கவனித்துக்கொண்டார்'' என்கிறார் நல்லுசாமி. அப்போது வளர்ந்து வரும் நடிகையாக இருந்த 'படாபட்' ஜெயலட்சுமியை முதலில் தெரிவு செய்தார்கள். அவரும் ஒப்புக் கொண்டார். ஆனால், கமல் 'பிஸியாக' இருந்ததால், அவர் எப்போது ஓய்வாக இருக்கிறாரோ அப்போதுதான் படப்பிடிப்பு நடத்த முடியும் என்கிற நிலை. இதனால், தேதிகளை உறுதியாகக் கூற முடியாததால் 'படாபட்' ஜெயலட்சுமி விலகிக்கொண்டார். அதன்பிறகு, ஸ்ரீப்ரியாவை நடிக்க வைக்கலாம் என்று கமல் கூறினார். அப்போது 'ஆட்டுக்கார அலமேலு' என்னும் மிகப்பெரிய வெற்றியுடன் ஸ்ரீப்ரியா இருந்த நேரம். எனவே, மற்றவர்கள் தயங்க கமலே போன் செய்து ஸ்ரீப்ரியாவுடன் பேசி கதைசொல்ல நேரம் வாங்கினார். நல்லுசாமியும் ருத்ரையாவும் சென்றார்கள். ஸ்ரீபிரியா ஒப்புக்கொண்டார். அப்போது ஒரு லட்சம் ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்த ஸ்ரீபிரியா, இப்படத்துக்கு 30,000 ரூபாய் கொடுத்தால் போதும் என்று சொல்லிவிட்டார்.

இப்படத்துக்கு கமலுடன் ரஜினியையும் சேர்த்தால் நன்றாக இருக்கும் என்பது அனந்து அபிப்ராயம். ரஜினியையும் கமலே பேசி சம்மதிக்க வைத்தார். ரஜினியுடன் 'நினைத்தாலே இனிக்கும்' படப்பிடிப்புக்காக சிங்கப்பூர் சென்றபொழுது இதுபற்றி பேசி ரஜினி சம்மதத்தைப் பெற்றார் கமல். 'வித்தியாசமான ஒரு அணி படம் எடுப்பதற்காக வந்திருக்கிறார்கள் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்' என்று ரஜினி மிகவும் குறைந்த சம்பளம் வாங்கிக்கொண்டு நடித்தார். கமல்தான் இளையராஜாவையும் இப்படத்துக்கு ஒப்பந்தம் செய்தார். குறைவான முதலீடுதான் என்பதால் யாருக்கும் முன்பணம் கொடுக்கவில்லை. ஆனாலும், ஒரு நல்ல படம் உருவாகிறது என்ற மரியாதையில் அனைவரும் ஒத்துழைப்பு கொடுத்திருக்கிறார்கள். அப்போதெல்லாம் இசையமைப்பாளர்கள் பட நிறுவன அலுவலகத்துக்கே வருவார்கள். ருத்ரைய்யாவுக்கு ஆழ்வார்ப் பேட்டையில் அலுவலகம் இருந்தது. ஆனால், அலுவலகத்தில் காற்றாடி கிடையாது. மறுநாள் இளையராஜா வரப்போகிறார் என்பதால் முதல் நாள் மாலையே காற்றாடி வாங்கி மாட்டியிருக்கிறார்கள். ஆனால், இளையராஜா வந்தபோது மின்சாரம் இல்லாமல் போய்விட்டது. முதல் நாள் படிப்பிடிப்புக்கு ஸ்ரீப்ரியா கையோடு நாற்காலி கொண்டு வந்திருந்தாராம். ஆனால், 'அவள் அப்படித்தான்' படப்பிடிப்பு விதமோ வழக்கத்தில் இருந்து வேறுபட்டு இருந்தது. அங்கே யாருக்கும் நாற்காலி இல்லை. இதனை புரிந்துகொண்ட ஸ்ரீப்ரியா மறுநாள் நாற்காலி கொண்டு வரவில்லை. அதன்பிறகு, எல்லோருடனும் அவரும் தரையிலேயே அமர்ந்துகொண்டார். ருத்ரைய்யா, நல்லுசாமி, வண்ணநிலவன் நண்பர்கள் குழு வழக்கமாக சாப்பிடும் ஆழ்வார்ப்பேட்டை 'மெஸ்'ஸிலேயே உணவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். சுமாரான சாப்பாடுதான். அதைத்தான் கமல் உள்பட எல்லோரும் சாப்பிட்டிருக்கிறார்கள். ரஜினி, கமல் உள்பட எல்லா நடிகர்களும் என்ன ஆடை அணிந்து படப்பிடிப்புக்கு வருகிறார்களோ அதுதான் அவர்களுக்கு அன்று ஆடை. ஆடை வடிவமைப்பாளர் என்று யாரும் இல்லை. மேக்கப்பும் இல்லை.

படப்பிடிப்பு நாட்களில், எடுக்கப் போகும் காட்சிகளைப் பற்றி நல்லுசாமியுடன் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பே விரிவாக விவாதிப்பாராம் ருத்ரைய்யா. வசனங்களைப் பொறுத்தமட்டில் வண்ணநிலவனுடன் பேசுவார். வசனம் சரியாக அமையவில்லை என்றால் திரும்பவும் எழுதச் சொல்வார். அனந்து தினமும் காலையும் இரவும் தளத்துக்கு வந்து செல்வார். அவருடன் விவாதம் தொடரும். இப்படி சிற்பம் செதுக்குவது போல் ருத்ரைய்யா படத்தைச் செதுக்கினார். பெரும்பாலும் காட்சிக் கோணங்கள், வசனங்கள் உள்பட எல்லாமே ஏற்கனவே திட்டமிடப்பட்டு விட்டதால் படப்பிடிப்பு வேலைகள் வேகமாகத் தடையின்றி நடைபெற்றன. மிகச் சுருக்கமாக, 'இரண்டு மாதங்களில் தோராயமாக இருபதே கால்ஷீட்டில், ஆர்ரி 2 ட என்னும் மூன்று லென்ஸ் டர்ரெட்டைக் கொண்ட கேமராவை வைத்து இப்படத்தை உருவாக்கினார் ருத்ரைய்யா' என்கிறார் ஆவணப்பட இயக்குநரும் திரைப்பட பேராசிரியருமான சொர்ணவேல்.



- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -

இத்தனைக்கும், 'எங்களுக்கு எப்போது என்ன எடுப்போம் என்றே தெரியாது. திடீரென்று போன்வரும். இன்னிக்கு கமல் ப்ரீயாக இருக்கிறார். ஏதாவது காட்சி எடுக்கலாமே என்று. உடனே மற்ற நடிகர்கள் யார் ப்ரியாக இருக்கிறார்கள் என்று பார்த்து அவர்களை அழைத்து அனந்துவிடம் டயலாக் வாங்கி, லொகேஷன் பார்த்து படம் எடுப்போம். கமல் வீடு, எங்க அலுவலகம், ஸ்ரீபிரியா வீடு இப்படித்தான் படம் எடுத்தோம். நேரம் மிகவும் குறைவு. டிரைபாடில் வைத்து படம் பிடிக்க நேரம் ஆகும் என்பதால் பல காட்சிகளை நான் காமிராவை கையில் வைத்தே எடுத்தேன். நேரம் சேமிப்பதற்காக கட் பண்ணி எடுக்க வேண்டிய பல சீன்களை ஒரே ஷாட்டில் எடுத்தோம். ஸ்ரீப்ரியா, கமல் இருவருமே ரீடேக்கே போகமாட்டார்கள். ஒரே டேக்கில் நடித்துக் கொடுத்து விடுவார்கள். கமலோ, ஸ்ரீப்ரியாவோ டப்பிங்கில்கூட ஒரே ஒருமுறை லூப்பைப் பார்ப்பார்கள். அப்படியே பேசிவிடுவார்கள்'' என்கிறார் நல்லுசாமி. படம் தயாரிப்பில் இருக்கும்போதே விற்பனை ஆகிவிட்டது. ரஜினி, கமல், ஸ்ரீப்ரியா, இளையராஜா கூட்டணியில் ஸ்ரீதர் தயாரிப்பில் அப்போது வெளியாகி இருந்த 'இளமை ஊஞ்சலாடுகிறது' படம் நன்றாக ஓடியதால் 'அவள் அப்படித்தான்' படத்துக்கு நல்ல எதிர்பார்ப்பு இருந்தது. இதனால், விநியோகஸ்தர்கள் கொடுத்த பணம் படப்பிடிப்பு நிற்காமல் செல்ல உதவியது. ஆனால், படம் முடிந்து போட்டுக் காட்டிய போது, விநியோகஸ்தர்கள் அனைவரும் தயங்கினார்கள். 'அன்றுதான் என் வாழ்க்கையிலேயே மறக்க முடியாத நாள். படம் பார்த்தவுடன் அனைவர் முகத்திலும் சவக்களை! ரேட் குறைவாகத்தான் விற்றிருந்தோம். எனவே அனைவரும் பிரிண்டுகளை வாங்கிக் கொண்டார்கள். ஆனால், நல்ல தியேட்டர்களில் வெளியிடவில்லை'' என்கிறார் நல்லுசாமி.

படம் வெளியானதும் மோசமான எதிர்வினை. 1978 தீபாவளி அன்று 'அவள் அப்படித்தான்' வெளியானது. இதனுடன் 12 படங்கள் வெளியாகின. கமல், ரஜினி இருவருக்கும் தலா மூன்று படங்கள். இந்த 12இல் 'ஆனந்த விகடன்' பத்திரிகை விமர்சனத்தில் 'அவள் அப்படித்தான்' படத்துக்குத்தான் குறைவான மதிப்பெண் 100க்கு 28. கமல்ஹாசனின் 'சிவப்பு ரோஜாக்கள்' படமும் இந்த 12இல் ஒன்று. 'சிவப்பு ரோஜாக்கள்' பெரிய வெற்றி 'அவள் அப்படித்தான்' படத்தை ரசிகர்கள் கண்களில் இருந்து மறைத்துவிட்டது. சில இடங்களில் தியேட்டர் நாற்காலிகளை ரசிகர்கள் உடைத்ததாகத் தகவல். இரண்டே வாரத்தில் தமிழ்நாடு முழுக்க 'அவள் அப்படித்தான்' படம் அனைத்துத் திரையரங்குகளிலிருந்தும் திரும்பி வந்துவிட்டது. ஆனால், அதன்பிறகு ஒரு மாயம் நிகழ்ந்தது. ஆறு மாதம் கழித்து சென்னை ச.்.பையரில் காலைக் காட்சியாக மட்டும் படத்தை வெளியிட்டிருந்தார்கள். அப்போது ஏதோ வேலையாக சென்னை வந்திருந்த இந்தியத் திரையுலகின் திரைப்பட மேதையான மிருணாள் சென், இரவு ஏதாவது படம் பார்க்கலாமே என்று 'அவள் அப்படித்தான்' படத்தை 'பார்த்திருக்கிறார். மறுநாளே அவர்தான் தங்கியிருந்த விடுதிக்கு பத்திரிகையாளர்களை வரவழைத்து, 'படம் மிகவும் அற்புதமாக உள்ளது. தமிழில் இப்படியான படம் வந்தது ஆச்சரியம் ஆனாலும், ஏன் நீங்கள் நல்ல படத்தை ஆதரிப்பதில்லை' என்று புகழ்ந்து பேட்டி கொடுத்தார். பத்திரிகைகள் அவர் பேட்டியை வெளியிட்டதுடன் ரஜினி, கமல், ஸ்ரீப்ரியா, ருத்ரய்யா பேட்டிகளையும் வெளியிட்டன. பாரதிராஜாவும் ஒரு பேட்டி கொடுத்திருந்தார். 'எந்த மாதிரியான வேட்கைகளுடன், தேடலுடன் நான் சினிமாவுக்கு வந்தேனோ அதைத் திரும்பிப் பார்க்க வைத்தது 'அவள் அப்படித்தான்''' என்றார் அவர். தமிழக அரசின் மூன்று விருதுகள் கிடைத்தன. நல்லுசாமிக்கு சிறந்த ஒளிப்பதிவுக்கான விருது கிடைத்தது. பிறகு. 'அவள் அப்படித்தான்' மீண்டும் வெளியாகி சென்னை, மதுரை, கோவை, திருச்சி ஆகிய நகரங்களில் 100 நாட்கள் ஓடியது.

'அவள் அப்படித்தான்' படத்தை எடுத்ததில் ருத்ரைய்யா பொருளாதாரரீதியாக நிறையப்

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா பெருமையுடன் நடத்தும்

**ஒளிவிழா - 2014**

*Date: Dec. 20, 2014 Saturday Time: 5:30 PM*
*Place: Metropolitan Centre*
*3840 Finch Ave . Scarborough ON M1T 3T4*

ஒளிவிழாவில் நெடுந்தீவு உறவுகள் நண்பர்கள் ஒன்றிய ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம். எங்கள் இனிய தாய்மண் உறவுகளை பாசத்தோடும் நேசத்தோடும் சந்திப்போம்.

*S. Nimal: 416.816.7994 / K.Thurai: 416.890.5273 / N.Ruban: 416-567-0950*
*Email : delftcanada@hotmail.ca*
*Thanks to all of our members and supporters throughout these 21year*

நன்றியுடன்: நெடுந்தீவு மக்கள் ஒன்றிய நிர்வாகம் கனடா

# மெற்போமின் - உலகிலேயே நீரிழிவுக்கான முக்கிய மாத்திரை

உலகிலேயே நீரிழிவுக்கான முக்கிய மாத்திரை மெற்போமின் (Metformin). உலக சனத்தொகையில் 382 மில்லியன் மக்கள் நீரிழிவு நோயினால் தற்போது பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் 2035 இல் இத்தொகை 600 மில்லியனாக மாறிவிடும் என உலக சுகாதார நிறுவனம் (WHO) குறிப்பிட்டுள்ளது. இது ஒவ்வொரு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நீரிழிவு தினமாகவும் செயல்பட கூறியுள்ளது. சர்வதேச நீரிழிவு கூட்டமைப்பு (International Diabetes Federation) இதற்காக பல நடவடிக்கைகளை எடுத்தும் வருகிறது. சத்தற்ற உணவு, உடற் பயிற்சியின்மை, மரபு வழி தொடர்பு, வயோதிபர்களின் அதிகரிப்பு போன்ற அடிப்படைக் காரணங்களாலேயே வேகமாக இந்நோய் ஏற்பட்டு வருகிறது. நீரிழிவு பற்றி விளங்கிக்கொள்ள A,B,C,D,E,S,S என்ற அமைப்பினை செய்துள்ளது.

A என்பது AIC எனப்படும் முறையால் இரத்தத்திலுள்ள குளுக்கோஸ் மட்டத்தினை அறிவதாகும். B என்பது இரத்த அழுத்தம் பற்றிய அளவீடு. C என்பது கொலஸ்ரோல் அளவு. D என்பது இதயத்தினை பாதுகாக்கும் மருந்துகள் (Drugs). E என்பது உடற்பயிற்சி (Excercise) பற்றியது. S புகை பிடிப்பதை நிறுத்துவது (Stop Smoking). S மன அழுத்தத்தினை கட்டுப்படுத்துவது (Stress Management). இந்த வகையிலேயே நீரிழிவு நோயாளிகள் கண்காணிக்கப்படுவர்.

மேற்கூறிய வழிகாட்டுதல் மூலம் பல்வேறு மாத்திரைகள் இந்நோய்க்காக உதவு கின்றன. சில சந்தர்ப்பங்களில் Insulin என்ற மருந்தினை ஊசிமூலம் செலுத்தவும் வேண்டியுள்ளது. பொதுவாக இரத்தத்தி லுள்ள குளுக்கோசினை கட்டுப்படுத்தி விட்டால் நோய் மாறிவிடும் என பலர் நினைக்கிறார்கள். எனினும் நரம்பியல் சேதம், சிறுநீரகநோய்கள், இரத்த அழுத்தம் வேறுபாடு, கண்ணில் ஏற்படும் நோய்கள், இதய தாக்கம், கொல்ஸ்ரோல் அளவு என பலவிடயங்களை அவதானிக்க வேண்டியுள்ளது.

இன்று எவரைப் பார்த்தாலும் தங்களுக்கு நீரிழிவு உள்ளதெனக்கூறுவர். அதிலும் பலருக்கு இந்நோய்க்காக முதலில் பாவிக்கப்படும் 'Metformin' என்ற குளிசையின் பெயரே தெரிவதில்லை. 'வெள்ளை குளிசை' என்பார்கள். காலையில் ஒன்று பின்னேரம் ஒன்று என்பார்கள். சிலர் காலையில் இரண்டு பின்னேரம் இரண்டு என்பார்கள். சிலர், தான் இன்சுலின் எடுப்பதாக சொல்லிக் கொள்வர். எனினும், பெரும்பாலானவர்களின் வாயில் வரும் மாத்திரை 'Metformin' என்பதே யாகும். இதற்கு முக்கிய காரணம் உலம் முழுவதிலும் இம்மாத்திரை முக்கியமான தும், சீரியதுமானதுமாக உள்ளமையாகும்.




நீரிழிவு உடையவர்களது குளுக்கோஸ் அளவினை கட்டுப்படுத்த வேண்டியதே முதல் நிலையாகும். எனவேதான் இதன் ஆரம்ப நிலையில் metformin எனப்படும் மாத்திரை பயன்படுகிறது. இந்த மாத்திரையின் செயற்பாடு ஈரலில் (Liver) உள்ள குளுக்கோசினை குறைப்பதின் மூலம் இன்சுலினை இரத்தத்தில் சேர்க்க முடிகின்றது. ஒரு நோயாளிக்கு மருந்துகளை வழங்க முன்பு இரத்தச் சோதனை செய்யப்படுகிறது. பொதுவாக இரவு உண்ணாது காலையில் எடுக்கப்படும் அளவீடு மூலமே நீரிழிவு உள்ளதா? என கணிக்கப்படுகிறது. இந்த அளவீடு குளுக்கோஸ் 7MMOL/L மேல் செல்லுமென்றால் கட்டாயம் இந்த மாத்திரையை எடுக்க வேண்டி நேரிடும்.

1922 ஆம் ஆண்டு Emil Werner, James Bell ஆகியோர் நீரிழிவுக்கான மருத்துவ ஆய்வுகளை செய்திருந்தனர். எனினும் நீண்ட காலம் இது பெரிதும் பலனளிக்காத நிலையில் 1957 ஆம் ஆண்டு பிரான்சிய அறிஞரான Jean Sterne என்பவரே இந்த மருந்தினை கண்டு பிடித்தார். metformin என்ற பெயரிலும் Glucophage என்ற பெயரிலும் உருவான இம்மாத்திரையின் பெறுபேறு காரணமாக எல்லா நாடுகளும் பயன்படுத்த ஆரம்பித்தன. 1958 இல் பிரித்தானியாவும், 1972 இல் கனடாவும், 1995 இல் ஐக்கிய அமெரிக்காவும் பயன்படுத்தத் தொடங்கின.

படிப்படியாக உலக நாடுகள் எங்கும் இம்மருந்து வேறுவேறு பெயர்களில் தயாரிக்கப்படுகின்றது. இந்த மருந்து வந்த பின்னரே 30வீதமான நீரிழிவு இறப்புக்கள் குறைந்துள்ளன. இன்று ஒரேயொரு நீரிழிவு ஆரம்ப மாத்திரையாக இது விளங்குவதே சிறப்பானதாகும். கனடியரான பிரடிக் பாண்ட் இன்சுலினை கண்டுபிடித்தமை உலகிற்கு எவ்வளவு உதவியதோ அதேபோல் இன்று Metformin நீரிழிவு நோய்களை குறைக்கும் மருந்தாக இது உள்ளது. இதனை glucose eater எனவும் தருவர். Glucophage, Riomet, Glumetza Fortamet என்ற பெயர்களிலும் தயாராகின்றன. எமது உடலில் உள்ள இரத்தத்திலுள்ள குளுக்கோஸ் (சீனி) சத்தினை குறைக்கும் வாய் மூலம் பாவிக்கப்படும் மாத்திரை (வில்லை) இதுவாகும். Tablet அல்லது Pill என்பதனை குளிசைகள், குளிகைகள், வில்லைகள், மாத்திரைகள் எனவும் அழைப்பர். இந்த மாத்திரை நீரிழிவு வகை ஒன்றுக்குப் பயன்தராது. நீரிழிவு 2க்கு மட்டும் பயனளிக்கும். இன்சுலின் பாவிப்பவர்கள் கூட இதனையும் சேர்த்து பாவிக்க நேரிடலாம்.

இம்மாத்திரையின் செயல்பாட்டினை அறிந்தால் நீரிழிவு உள்ளவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவும், சர்வரோக நிவாரணி யாகவும் கூட விளங்குகிறது. பொதுவாக நீண்ட கால நீரிழிவும், உயர் இரத்த அழுத்தமும் இருந்தால் அவர்களுக்கு கடுமையான, சிக்கலான நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இருதயநோய், பக்கவாதம், நரம்புசேதம், கண் பிரச்சினைகள் என்பன ஏற்படலாம். சிலரை மிகவும் உடற்பருமன் உள்ளவர்களாக (Obese) காண்போம். நிறைகூடிய இவர்களுக்கு நீரிழிவு வர வாய்ப்புண்டு. எனவே இவர்களுக்கும் இந்த மருந்தே உதவுகிறது. கர்ப்பமுற்ற பெண்களுக்கான நீரிழிவு (Gestational) ஏற்படுமிடத்து இதுவே உதவுகிறது. கர்ப்பபையில் ஏற்படும் பல்வேறு பிரச்சினை களுக்கு உதவுகிறது. தற்போது இம்மாத்திரை 500mg, 850mg, 1000mg அளவுகளில் வருகிறது. ஒவ்வொருவரது குளுக்கோஸ் அளவுக்கேற்பவே வைத்திய ரால் வழங்கப்படுகிறது. எனினும் 2550mg க்கு மேல் பாவிக்க கூடாது. உணவு அருந்தியவுடனே போடுவதே சிறப்பானது. இதனால் வயிற்றுக் குமட்டல் (Nausea), வாந்தி என்பன தடுக்கப்பட முடியும். இதனுடன் வேறு குளுக்கோஸ் கட்டுப்பாட்டு மாத்திரைகளையும் எடுக்கலாம். எனினும் குளுக்கோஸ் அளவுகளை அடிக்கடி சோதனையிட வேண்டும். ஒருவேளை எடுக்கத் தவறிவிட்டால் அடுத்து வழமையான மாதிரி எடுக்கலாம். இரண்டு வேளைக்குரிய மாத்திரைகளை ஒன்றாக போடக் கூடாது. பொதுவாக இந்த மாத்திரையை இதற்கு ஒவ்வாதவர்கள் எடுக்கக் கூடாது. கடும் தொற்று நோய், கடும் மனக்காயம், சத்திர சிகிச்சை செய்தவர்கள், கர்ப்பிணிகள், தாய்ப்பால் கொடுப்பவர்கள் எடுக்கக்கூடாது. உடலிலிருந்து அதிக நீர் வெளியேறியவர் கள் (Dehydration), உடலை கதிர்வீச்சு சோதனைக்கு உட்படுத்தியவர்கள், குறைந்த வேளையில் கூடிய மது அருந்தியவர்கள், இரத்தத்தில் கூடிய அசிட் சத்து உள்ளவர்கள், பிராணவாயு இரத்தத்தில் குறைந்தவர்கள், சிறுநீரக தொழில்பாடு குறைந்தவர்கள், ஈரல் நோய் உள்ளவர்கள், நீரிழிவு வகை 1 உள்ளவர்கள் இந்த மாத்திரையை எடுக்க கூடாது. உண்மையில் இரத்தத்திலுள்ள குளுக்கோஸ் அளவினை இம்மாத்திரை குறைக்குமே தவிர முற்றாக நீரிழிவை மாற்றி விடாது. உடல்நிலை நன்றாக தெரிந்தாலும் தொடர்ந்து பாவிக்க வேண்டும். வாழ்நாள் முழுவதும் இது தொடர வேண்டும். வைத்தியரிடம் கூறாது இதனை நிறுத்தக் கூடாது. தற்போது திரவ (liquid) வடிவிலும் இது வருகிறது. மாத்திரைகளை உடைக்கவோ, சுவைக்கவோ, நொருக்கவோ கூடாது.


பொதுவாக இம்மாத்திரை பாவிப்பவர்களில் ஒரு வீதத்தினரே தங்களுக்கு பக்க விளைவுகளை ஏற்படுத்துவதாக கூறுவர். அநேகமாக எல்லாம் சமாளிக்கக் கூடியவையே. பொதுவாக வயிற்றோட்டம், பசிக்குறைவு, நாக்கில் உலோகச்சுவை, அடிக்கடி வாயு வெளியேறல், வயிற்றுவலி, வாந்தி எடுத்தல், எடைகுறைவு ஏற்பட்டால் வைத்தியரிடம் கூற வேண்டும். இவை சமாளிக்க கூடியவை. ஆனால் பதற்றம், குடிகாரரைப்போல் நடையில் மாற்றம், கண் பார்வை மங்குதல், வியர்த்தல், தடுமாற்றம், தோல் வெழுத்தல், ஒருமுகப்படுத்த முடியாமை, தூக்கம் வருதல், கடுமையான பசி, தலைவலி, வயிற்றை பிரட்டுதல், நரம்பு தளர்தல், பயங்கர கனவு வரல், நித்திரை கொள்ளமுடியாமை, நடுக்கம், வாய் குளறுதல் போன்றவை மிகவும் கடுமை யானவை. இதற்கு உடனடியாக வைத்தியரை நாட வேண்டும். தற்செயலாக மேலதிக மாத்திரைகளை எடுக்க நேரின் Provincial Poison நிலையத்தை அழைக்கலாம். காரணம் மிகவும் அவசர சிகிச்சை செய்ய வேண்டி வரலாம்.

பொதுவாக metformin மாத்திரை எடுத்துக் கொண்டு பல வேண்டாத செயல்களை செய்வதால் மரணத்தில் போய்முடியலாம். மருந்து அறிவுறுத்தல்களையோ, வைத்தியரின் அறிவுரையையோ, மருந்து வழங்குபவரின் குறிப்புக்களையோ அசட்டை செய்பவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். ப ல



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 33ஆம் பக்கம்





Niru
BRAND®
FOOD PRODUCTS
நிரு பிரான்ட்
வறுத்த மிளகாய்த்தூள்
ROASTED
CURRY (CHILLI) POWDER
POUDRE DE CURRY (ROTIES)
NIRU
PINEAPPLE JAM
Pure Gingelly Oil
(Sesame Oil)
Huile De Sesame Extrite
De Graines De Toute
Premiere Qualite
Kitul Treacle
CHILLI SAUCE
CONDENSED
Sweetened Condensed Mi
300ml.
SPICY COFFEE
COW GHEE
JACK
Tel: 416-750-1976 Web:www.niru.com e-mail: info@niru.com

# நரியும் கோழிகளும்

விவசாயியின் பண்ணை ஒன்றில் கோழிகள் பல ஒரு கூட்டில் வாழ்ந்தன. பொதுவாக அவற்றின் வாழ்க்கை மிக சுலபமாக போனது. ஆனால், அவ்வப்போது ஒரு நரி அந்த கூட்டின் பழைய கதவை தள்ளித் திறந்து, உள்ளே நுழைந்து, இரண்டு கோழிகளை தூக்கி கொண்டு சென்று உண்டு விடும். நரி உள்ளே வரும் பொழுதுதெல்லாம், கோழிகள் எல்லாம் பயந்து போய் யோசிக்காமல் இங்கும் அங்கும் பறக்கும்.

இது பல காலமாக நடந்து கொண்டு இருந்தது. நரி மிகக்கவனமாக இருந்ததால், விவசாயியால் நரியை பிடிக்க முடியவில்லை. இவ்வாறு இருக்கையில் விவசாயி புதிதாக சில கோழிகளை வாங்கினார். அவையும் மற்ற கோழிகளுடன் இருந்து பழகின. அவை வந்து கொஞ்ச நாட்களுக்கு பின்னர் நரி மறுபடியும் வந்து இரண்டு கோழிகளை எடுத்து சென்றது.

இதைக்கண்ட புதிய கோழிகளில் ஒன்று 'ஏன் நீங்கள் ஒன்றும் செய்யவில்லை?' என முன்பிருந்த கோழிகளைக் கேட்டபோது அவை தங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்றும் நரி தங்களை விட பலசாலி என்றும் கூறின. இதை நம்பாத புதுக் கோழியும்




பொறுமையாக இருந்தது. ஒவ்வொரு முறை நரி வந்தபொழுது அது நிலத்தில் ஒரு கோடு கீறியது. இப்படி கொஞ்சக்காலம் சென்றது.

ஒருநாள் அந்த புது கோழி மற்ற கோழிகளிடம், 'நான் நரியை எப்படி தடுக்க முடியுமென்று கண்டுபிடித்துவிட்டேன்' என்றது. சந்தோசத்துடன் மற்ற கோழிகள், அந்தக் கோழி கூறியதை கேட்க ஆரம்பித்தன. 'நரி ஒவ்வொரு அமாவாசை இரவும் வருகிறது. நிலா இல்லாத இருட்டில் நரியை நாங்களோ, விவசாயியோ காண முடியாததால் அது அந்த நாளில் வருகிறது' என்றது.

சரி, ஆனால் நாங்கள் என்ன செய்யலாம்? எனக் கேட்டது ஒரு கோழி. புதுக்கோழியும், 'நாங்கள் அடுத்த அமாவாசை இரவில், நரியிற்காக காத்திருப்போம். நரி கதவு திறக்கும் போது...' என தன் திட்டத்தை கூறத் தொடங்கியது.

அமாவாசை இரவும் வந்தது. நரி வழமையைப் போல விவசாயியின் வீட்டில் எல்லா விளக்குகளும் அணைந்த பின்புதான் கோழிக் கூட்டிற்கு வந்தது. காதை கதவின் மேல் வைத்து கேட்டது. எல்லா கோழிகளும் தூங்கிக் கொண்டு இருந்தன. ஒரு சத்தமும் இல்லை. கதவை தள்ளி நரி மெதுவாக உள்ளே சென்றது.

திடீரென நரி மீது எல்லாக் கோழிகளும் ஒற்றுமையாக பாய்ந்தன. சில கொத்தின, சில சத்தமிட்டன. நரியும் பாய்ந்து விழுந்து ஓடி வெளியே சென்றது. அதை துரத்தி கொண்டு சில கோழிகளும் சென்றன. சத்தம் கேட்ட விவசாயி எழுந்து வந்து நரியை துரத்தி அடித்து கொன்றார். அதன் பின்னர் நரியின் தொல்லை இல்லாமல் கோழிகள் வாழ்ந்தன.

**நீதி: ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.**



**ஞா. ஆரணி**
**அகவை 16**

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# மெற்போமின்...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

வருடங்கள் வாழ வேண்டியவர்கள் இடையிலேயே இறந்து போய்விடுகின்றனர். கண்ட இனிப்பு பலகாரங்களை சாப்பிட்டுக் கொண்டு மருந்தும் எடுப்பது பிரயோசனமானதல்ல. அல்லது மறந்து போய் எடுக்காமல் விடுவதும் தவறானது. மிகவும் முக்கியமான விடயங்களை தவறவிட்டு உயிருடன் விளையாடுபவர் பலர்.



இக்குறிப்பிட்ட மாத்திரையை எடுப்பவர்கள் மதுவை கூடிய அளவு எடுக்காமல் விடுவது நலம். அப்படி எடுக்க நேர்ந்தாலும் சிறிய அளவில் எடுக்க வேண்டும். எம்மவர்கள் அடிக்கடி 'பார்ட்டி'களில் கலந்து நிறையவே குடிக்கிறார்கள். சிலவேளைகளில் காய்ச்சல், தொற்றுநோய், அறுவைச் சிகிச்சை போன்ற சந்தர்ப்பங்களில் வைத்தியரிடம் கூறலாம். இவ்வேளையில் வைத்தியர் insulin பாவித்து பிரச்சினை முடிந்ததும் மாத்திரையை தொடர-லாம். சிலர் metformin உடன் வேறு நோய்களுக்கான மாத்திரைகளை பாவிப்பர். இதனையும் அறிவிப்பது நலம். நல்ல உணவு அவசியம். இது உணவுக்கான மறு மாத்திரை அல்ல. சிலவேளைகளில் சிலர் தமக்கு சிறுநீரக பிரச்சினை பற்றி சொல்லாமல் விட்டுவிடலாம். 3 மாதங்களுக்கு ஒரு தடவை செய்யப்படும் இரத்தப் பரிசோதனை மூலம் இதனை அறியலாம். சிலருக்கு இம்மருந்து சேர்ந்து பல பிரச்சினைகளை உண்டாக்கலாம். இதனை lactic acidosis என்பர். இந்நோயாளிகளினால் 50 வீதத்தினர் இறக்க நேரிடுகிறது. மருந்தினால் சிலருக்கு பிரயோசனம் இல்லாமலும் போகலாம். இதற்கு மாற்றீடாக வேறு மருந்து வழங்கப்படும். பல மருந்துகள் இந்த மருந்துடன் இணைந்து வேலை செய்வது கடினமாகும். எனவே எடுக்கும் மருந்து பற்றி வைத்தியரிடம் கூற வேண்டும். மதுசாரம், குடும்ப கட்டுப்பாட்டு மருந்துகள், Estrogen, Morphine, Phenytoin, Quindine, Thyroid Products, Vancomycin போன்ற பல மருந்துகள் இடைத்தாக்கம் செய்து பிரச்சினைகளை உண்டு பண்ணும். அத்துடன் உயிர்ச்சத்து வில்லைகள் (Vitamins), மூலிகை மருந்துகள் (Herbal) இருந்தாலும் குறிப்பிடுவது நலம்.

கனடாவில் ஏனைய நாடுகளை விட மிக வேகமாக நீரிழிவு நோய் ஏற்படுகிறது. தென்னாசியவர்கள் வெகுவாக பாதிக்கப்படுவர். தற்போது 3.1 மில்லியன் மக்கள் நீரிழிவு சோதனையில் உள்ளனர். அதாவது 4 பேரில் 1வர் இந்நோய் ஏற்பட்ட, ஏற்படக் கூடியநிலையில் உள்ளனர். 2020 இல் இது மூன்றுபேருக்கு ஒருவராக மாறலாம். இதனால் matformin மாத்திரைகளின் உற்பத்தியும் பல மடங்காகும். இம்மருந்து புற்றுநோயையும் குறைக்கவல்லது என புதிய ஆய்வுகள் உள்ளன. தனக்கு நிகரில்லாத இன்சுலின் மருந்து கனடாவிற்கு பெருமை தருவது போல் முதலில் பிரான்சிய நாட்டில் தயாரான இம்மாத்திரை நீண்டகாலமாக உலக நீரிழிவு நோயாளிகளுக்கு உதவி வருகிறது.

# ..பிடித்தவர்கள்

25ஆம் பக்கத்தொடர்ச்சி

இருக்கைகளில் இருந்திருந்தார்கள். ஸ்மித் தன்னை கொஞ்சம் இயல்பாக்கிக் கொண்டு இருந்தார்.

நீலவேணி, வித்தியாதரனைப் பார்த்தாள்.

சிவாவிற்கு ஒரு பிரச்சனையும் இல்லை. இனித் தலையிடியோ கனவுகளோ வராது. ஆனால் இனிமேலும் துப்பரவாய் வராது எனச் சொல்ல முடியாது. அப்பிடி வராமல் பண்ணுறதிற்கு ஒருவழி இருக்கிறது. அதுக்கு நீங்கள்தான் ஒத்துழைக்க வேணும். பீடிகையுடன் வித்தியாதரன் கேட்க, குழப்பமாக வித்தியாதரனைப் பார்த்தாள் நீலவேணி.

சிவாவையும் கேட்டனாங்கள். நீங்கள் ஓமெண்டால், அவருக்கும் சம்மதமாம்.

சிவா பட்ட வேதனை அவளது கண்களின் முன்னால் வந்தது. நான் என்ன செய்ய வேணும்,

சிவாவுக்குச் செய்த ஹிப்னரைஸ் வைத்தியத்தை உங்களுக்கும் செய்ய வேணும்., வசதிப்பட்டால் உங்கடை மகன் திருவுக்கும் செய்ய வேண்டும்.

நீலவேணி அதிர்ந்து விட்டாள்.

தொடரும்....

# Education

## Review Questions14 -22

### ➢ CHEMISTRY 12


(A) Explain " disproportionation" and "comproportionation" in redox reactions.

(B) Balance the equation in acidic solution


(i) $FeS + NO_3^- \rightarrow Fe^{3+} + NO + SO_4^{2-}$

(ii) $HNO_3 + HCl + NH_4Cl \rightarrow NO_2 + Cl_2 + HClO_4 + H_2O$

Give IUPAC names of the following




Give reaction conditions




### BIOLOGY 12

(I)Describe the functional and evolutionary importance of "introns".

(II) Describe the role of the hypothalamus in the production of urine?

### ➢ PHYSICS 12

A Child (P) slides down a frictionless slide –X with 32° incline. An another Child (Q) slides down a slide -Y with 32° . The speed of child -Q at the bottom of the slide is exactly half of the speed of child- P. Determine the coefficient of kinetic friction between the child -Q and slide- Y. (Assume the lengths of the slides X and Y are same)

### ➢ ADV. FUNCTIONS 12

$$\text{(i)}\quad \tan(a+b)\tan(a-b) = \frac{\sin^2 a - \sin^2 b}{\cos^2 a - \cos^2 b}$$

$$\text{(ii)}\quad \tan\left(\frac{\pi}{4} - \alpha\right) = \frac{\cos 2x}{1+\sin 2x}$$

### ➢ DATA MANAGEMENT 12

refer14-21.Data MGT..question

Find the probabilty the sum of the cards and the die is 5

### CHEM12(b) 14-20

errors: replace the bullets in the previous issue by the following digits & obtain the answer

$4H_2O + Cl^- \rightarrow ClO_4^- + 8H^+ + 8e$

$4\ (2Cl^- \rightarrow Cl_2 + 2e)$

$2\ NH_4^+ + H_2O - 8e \rightarrow N_2O + 10H^+$

$2\ NO_3^- + 10H^+ + 8e \rightarrow N_2O + 5H_2O$

## Answer Key : 14-21

### ➢ BIOLOGY 12

Cancer cells rapidly dividing and abnormally reproducing. Cell division occurs followed by DNA replication. Chemical analogues that mimic the structure of nucleotides will prevent DNA polymerase and therefore the DNA replication will be prevented. Thus cancer cells won't be able to reproduce/ further division.

### ➢ DATA MANAGEMENT 12

Two cards, and odd number rolled

Odd and even + even and odd

$$\frac{20}{40}\text{X}\frac{20}{39}\text{X}\frac{3}{6} + \frac{20}{40}\text{X}\frac{20}{39}\text{X}\frac{3}{6} = \frac{10}{39}$$

### ➢ ADV. FUNCTIONS (12)

$$\sin x \le \frac{\sqrt{2}}{2}\quad (0, \frac{\pi}{4}) \cup (\frac{3\pi}{4}, \pi)\quad \text{(ii)} = 17$$

Ans. key 14-22 - next issue
☎ 647 341 3975
K.A.Srikrishnaraj PhD
ask@ keentutoringcentre.com
KEEN TUTORING CENTRE

# நினைவுகள்...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

பாதிக்கப்பட்டார். ஒரு பத்திரிகை நேர்காணலில் அவரிடம், 'அவள் அப்படித்தான்' படத்தின் மூலம் கையைச் சுட்டுக் கொண்டீர்களா?" என்ற கேள்விக்கு, 'உடலையே சுட்டுக்கொண்டேன்' என்று பதில் சொன்னார். ஆனாலும், 'அவள் அப்படித்தான்' படம் மூலம் அவருக்குத் திரையுலகில் ஆதரவுகளும் குவிந்தன. 'ஒரு படைப்பு உடனடியாக மக்களைக் கவரா விட்டாலும், படைப்பாளிக்கு லாபத்தைத் தராவிட்டாலும், அது நல்ல படைப்பாக இருந்தால், காலம் கடந்து ஏற்றுக்கொள்ளப்படும் என்பதற்கு உதாரணம் 'அவள் அப்படித்தான்'. தமிழ்த் திரைப்பட வரலாற்றில் இப்படம் மறுக்க முடியாத படமாக நிலைபெற்றுவிட்டது'' என்கிறார் கமலஹாசன். 'அவள் அப்படித்தான்' வெளிவந்து கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகள் ஆகப்போகிறது. 'அவள் அப்படித்தான்' படத்துடன் வெளியான 'சிகப்பு ரோஜாக்கள்', 'மனிதரில் இத்தனை நிறங்களா' படங்களை இன்று யாரும் நினைவுகூர்வது இல்லை. ஆனால், 'அவள் அப்படித்தான்' இன்றும் மீண்டும் மீண்டும் பார்க்கப்படுகிறது தமிழ் சினிமா வரலாற்றில் இன்றளவிலும் பேசப்படக்கூடிய படமாகவே இருக்கிறது. 'இதுதான் ருத்ரையாவின் உண்மையான வெற்றி. கிட்டத்தட்ட 27,000 அடி கறுப்பு வெள்ளை படமான 'அவள் அப்படித்தான்' நல்ல சினிமா உந்துதலில் மைய நீரோட்ட சினிமாவில் செய்த இடையீடு. இன்று தமிழ் சினிமா வரலாற்றின் ஒரு இனிய கனவாக



இது இருக்கிறது'' என்கிறார் சொர்ணவேல். 'அவள் அப்படித்தான்' படத்துக்குப் பிறகு 'ராஜா என்னை மன்னித்துவிடு' என்ற படத்தைத் தொடங்கினார் ருத்ரைய்யா. இதிலும் கமல்ஹாசன்தான் நடிப்பதாக இருந்தது. கதை கேட்ட கமல்ஹாசன், 'கதை சிறப்பாக உள்ளது'' என பத்திரிகைகளுக்கு பேட்டியும் கொடுத்தார். ஆனால், 'சகலகலா வல்லவன்' போன்ற படங்களின் வெற்றி, அவரைத் தயங்க வைத்தது. 'சிகப்பு ரோஜாக்கள்', 'சகலகலா வல்லவன்', 'ராஜபார்வை' போன்ற வணிக நோக்குப் படங்கள் செய்வதுதான் தன் எதிர்காலத்துக்கு நல்லது என கமல் நினைத்திருக்க வேண்டும். அவற்றுக்குள் தான் விரும்பிய 'புரட்சி'களை செய்து திருப்திபட்டுக்கொண்டார் கமல். அடுத்து, 'கிராமத்து அத்தியாயம்' படத்தைத் தொடங்கினார் ருத்ரைய்யா. நந்தகுமார், ஸ்வர்ணலதா, சந்திரஹாசன் நடித்த இப்படம் 1980ஆம் ஆண்டு வெளியானது. இளையராஜா, பஞ்சு அருணாச்சலம் போன்றோரின் முழு ஒத்துழைப்பு இருந்தும் இந்தப் படம் வெற்றிபெறவில்லை. ருத்ரைய்யாவிடம் எதிர்பார்க்கப்பட்ட தரத்தில் இந்தப் படம் வரவில்லை. 'கிராமத்து அத்தியாயம் தோல்வி சினிமாவில் ருத்ரைய்யாவின் அடுத்த அத்தியாயத்தை எழுத முடியாமலே முடக்கி, அவரது இறுதிப் படமானது.

1984இல் மீண்டும் படம் செய்ய திட்டமிட்டார் ருத்ரைய்யா. இதற்காக ரஜினியைக் கதாநாயகனாக மனதில்கொண்டு, கடலோரக் கிராமத்தை மையமாக வைத்து ஒரு கதையை ராஜேஷ்வர் எழுதினார். ருத்ரைய்யா நினைத்ததுபோல நட்சத்திரங்கள் கிடைக்கவில்லை. எனவே, அப்படம் நின்றுபோனது. அந்தக் கதைதான் பின்னர் பாரதிராஜா இயக்கத்தில் 'கடலோரக் கவிதைகள்' படமாக வெளிவந்தது பெரிய வெற்றியையும் பெற்றது. சிவாஜிகணேசனை பீஷ்மர் கதாபாத்திரமாக்கி 3-டி தொழில்நுட்பத்தில் மகாபாரதக் கதையை படமாக எடுப்பது, சுஜாதா கதை - திரைக்கதையில் ரகுவரனை வைத்து 'டிஎஸ்பி 7' என்ற படம் என தொடர்ந்து ருத்ரைய்யா எடுத்த முயற்சிகள் அனைத்தும் செயல்வடிவம் பெறாமல் திட்ட அளவிலேயே நின்றுவிட்டன. 'நீண்ட இடைவெளிக்குப்பின், ஷேக்ஸ்பியரின் ரோமியோ - ஜூலியட் கதையைத் தற்காலச் சூழலில் ஒரு திரைப்படமாக எடுக்கலாம் என்று முடிவு செய்தோம். ஏ.ஆர். ரஹ்மான்தான் இசை. வைரமுத்துவிடமும் பேசினோம். ஒளிப்பதிவாளராக பி.சி. ஸ்ரீராமை முடிவுசெய்து, அவரைத் தொடர்புகொண்டோம். அவர் 6 மாதம் கழித்துச் செய்யலாம் என்றார். நாங்கள் ஒப்புக்கொண்டோம். ஆனால், வணிகரீதியில் சிலரைச் சந்திக்க வேண்டியிருந்தது. அதை ருத்ரய்யா விரும்பவில்லை. அந்தத் திட்டம் கைவிடப்பட்டது'' என்கிறார் இயக்குநர் கே. ராஜேஷ்வர். தனது இறுதி காலத்தில் ருத்ரய்யா, மனைவியிடமிருந்து விவாகரத்து பெற்று சென்னை லாயிட்ஸ் காலனியில் உள்ள வீடு ஒன்றில் தனியாக வசித்து வந்தார். ருத்ரையாவுக்கு ஒரு மகள் உள்ளார். அவர் கனடாவில்தான் வாழ்கிறார். கடைசி வரைக்கும் படம் எடுப்பதற்கான நம்பிக்கையை ருத்ரைய்யா விட்டுவிடவில்லை. ஆனாலும், சினிமாவின் வணிகரீதியான நடைமுறைகளில் அவருக்கு இருந்த முரண்பாடுகளுடன் சமரசம் செய்ய அவர் தயாராக இல்லை. அதனாலேயே நிறைய வாய்ப்புகளைத் தவறவிட்டார். ஒரு இடதுசாரிக்காரராக சினிமாவை ஆயுதம் என்று நம்பியவர் அவர். அந்த ஆயுதத்தால் தமிழ் சினிமாவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டியவர். இரண்டு படங்களுடன் ருத்ரைய்யா முடங்கிப் போனது தமிழ் சினிமாவுக்கும் தமிழகத்துக்கும் பேரிழப்பு.

# திரை விமர்சனம் - அவள் அப்படித்தான்

நூற்றாண்டை நெருங்கும் தமிழ் திரையுலக வரலாற்றில் இணையற்ற மைல்கல்லாக போற்றப்படும் படம் 'அவள் அப்படித்தான்'. ருத்ரைய்யாவின் தயாரிப்பு மற்றும் இயக்கத்தில் ரஜினிகாந்த், கமலஹாசன், ஸ்ரீபிரியா உள்ளிட்ட பிரபலங்கள் நடித்திருந்த 'அவள் அப்படித்தான்' இந்தியா வில் வெளியான மிகச்சிறந்த 100 படங்களில் ஒன்றாக மதிப்பிடப்படுகிறது!

இந்தப் படத்தின் மையக்களன் மிக நுட்பமானது. தன்னுடன் பழகும் ஆண்களின் தொடர்ச்சியான துரோகத்தினால் பாதிக்கப்பட்டு எல்லா ஆண்களின் மீதும் வெறுப்பை உமிழும் ஒரு பெண், தன்னை அணுகும் ஒரு நல்ல குணமான ஆணையும் அவ்வாறே வெறுப்பை கொட்டி ஒதுக்கி, பின்னர் தன் தவறை உணருகின்ற கதை. இதை சொல்லியிருக்கும் விதம் அதற்கு முன்பும் பின்பும் என எப்போதும் தமிழ் சினி-மா முயற்சித்துப் பார்த்திராதது. எனவே, இன்றைக்கும் தமிழ் சினிமாவுக்கு இது புதியதாக இருக்கிறது. ஆண் - பெண் உறவில் ஏற்படும் அகச் சிக்கலை கச்சிதமாகவும் நுட்பமாகவும் பேசும் இப்படம் பெண்ணியம், பெண் சுதந்திரம் போன்ற சிந்தனைகளை தமிழில் முன்னெடுத்த முயற்சிகளில் முக்கியமானது. 'முழு வானில் ஒரு பாதை' என்ற பெயரில் பெண்களின் பிரச்சனைகளை ஆவணப்படம் எடுக்க நினைக்கும் அருண் (கமல்), அவனுக்கு உதவ நினைக்கும் நண்பன் தியாகு (ரஜினி), தியாகுவின் அலுவலக ஊழியர் மஞ்சு (ஸ்ரீபிரியா) ஆகிய மூவரைச் சுற்றி நகர்கிறது கதை. என்றாலும், மஞ்சுவின் உளவியல் வெளிப்பாடுதான் திரைக்கதையின் மையம்.

இளம்பிராயத்தில் தனது அம்மா இன்னொருவனுடன் படுக்கையைப் பகிர்ந்துகொண்டிருப்பதைப் பார்த்துவிடுகிறாள், மஞ்சு. அம்மா என்பதன் புனிதத் தன்மை உடைந்து நொறுங்குகிறது. தனது மனைவி அப்படித்தான் என்று அவளது அப்பாவுக்கும் தெரியும். ஆனால் அவரால் ஒன்றும் செய்யமுடிவதில்லை. இது மஞ்சுவின் மனதை வெகுவாக பாதிக்கிறது. தனது அம்மா சோரம்போனதை நினைத்து தனிமையில் வாடுகிறாள். தனிமை அவள் மீதான பாலியல்



பலாத்காரத்தை நிகழ்த்துகிறது. அம்மாவும் அப்பாவும் வீட்டில் இல்லாத நேரத்தில் அம்மாவின் காதலன் மஞ்சு மீதும் கை வைக்கிறான். இந்தச் சம்பவங்களால் உருவான மனச் சிக்கல்களுடன் கல்லூரியில் நுழைகிறாள். கல்லூரியில் க்ருபா என்ற சகமாணவனுடன் காதல் உருவாகிறது. சந்தர்ப்பவசத்தால் காதல் உதிர்கிறது. அவனைப் பிரிய நேர்கிறது. அதன்பின் மனோ என்பவனுடன் காதல்கொள்கிறாள். அவனோ மஞ்சுவைப் பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறிகிறான். பிறகு ஒரு அலுவலகத்தில் வேலைக்குச் சேர்கிறாள். அங்கே மஞ்சுவின் உயரதிகாரியாக வரும் தியாகுவோ பெண்களின் மீது ஒரு ஆணாதிக்கவாதியின் பார்வையை வைத்திருப்பவர். பெண்களை வெறும் போகப்பொருகளாக மட்டுமே பார்க்கிறவர். மஞ்சுவையும் அவர் ஒருமுறை முயற்சிக்கிறார். இவை எல்லாம் சேர்ந்த கசப்பான நினைவுகளால் அவள் சூழப்படுகிறாள். அது சமூகத்தின் மீதான, குறிப்பாக ஆண்களின் மீதான வெறுப்பாக மாறுகிறது.

அருணின் படமுயற்சிகளுக்கு மஞ்சுவைத் துணைக்கு அனுப்புகிறான் தியாகு. அருணின் மென்மையான ஆண்மை குணம் மஞ்சுவிற்குப் பிடித்திருக்கிறது. இருந்தாலும், அவளது கடந்தகால அனுபவங்கள் ஏற்படுத்திய ஆண்கள் மீதான சந்தேகம் காரணமாக அவனிடம் கடுமையாகப் பேசுகிறாள். அவள் மனதில் வேர்விடத் துடிக்கும் அருண் மீதான காதலை எச்சரிக்கையுடன் தவிர்க்கிறாள். அருணின் வீட்டிற்குச் செல்லும் மஞ்சு, அங்கிருக்கும் ஒரு புத்தகத்தைக் கையிலெடுத்து, 'நீங்க கம்யுனிஸ்டா?" என்று கேட்கிறாள். 'இல்லையே...! எல்லாத்தையும் தெரிஞ்சிக்கத்தான் படிக்கிறேன். அப்படியே இருந்தாத்தான் என்ன?" என்று சொல்கிறான். 'எனக்கு செகப்பக் கண்டாலே எரிச்சல்' என்று எங்கோ நகர்ந்து செல்கிறாள். கடுமையான வார்த்தை களையும் நடத்தைகளையும் தன்னைச் சுற்றி சுவராக எழுப்பிக்கொண்டு சமூகத்திடமிருந்து தப்பிக்கப் பார்க்கும் மஞ்சு, அந்த சுவராலேயே அருணை இழக்கிறாள். கடைசி யில் கோயம்புத்தூரிலிருந்து மனைவியுடன் சென்னைக்கு **தொடர்ச்சி 38ஆம் பக்கம்**

**- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -**




# இலக்கியவாதிகளின் மறைவு

கனடா, ரொறொன்ரோ தமிழியல் மாநாடு அமைப்பு மற்றும் கனேடிய தமிழ் இலக்கியத் தோட்டம் போன்ற தமிழ் அமைப்புக்களில் முனைப்பாக இயங்கி வந்த ரொறொன்ரோ பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர் திரு. செல்வா கனகநாயகம் அவர்களின் மறைவு தமிழ் உலகிற்கு பேரிழப்பாகும். ரொறொன்ரோப் பல்கலைக்கழகத்தில் இருபதாண்டுகளுக்கு மேலாக ஆங்கிலப் பேராசிரியராக கடமையாற்றி வந்தவர். 'The Royal Society of Canada' எனும் கல்விசார் நிறுவனம் ஃபெல்லோஷிப்புக்கு அவரை தெரிவுசெய்து கௌரவித்தது.



முக்கியமாக ரொறொன்ரோவில் இருந்து இயங்கும் மற்றும் வருடாவருடம் உலகின் பல பாகங்களில் இருந்து சிறந்த, குறிப்பாக தமிழரிற்கு பெருமை சேர்க்கும் எழுத்தாளர்களை கௌரவிக்கும் 'தமிழ் இலக்கியத் தோட்டம்' நிறுவனர்களில் ஒருவரு என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியரும், 'தமிழ் இலக்கிய வரலாறு' என்ற நூலின் ஆசிரியருமான வி. செல்வ நாயகம் அவர்களின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

இடதுசாரி தமிழ் இலக்கியவாதியான எஸ். பொன்னுத்துரை அவர்கள் யாழ்ப்பாணம் நல்லூரை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வதிவிடமாகவும் கொண்டவர். தன் பிற்கால வாழ்வை தன் மகனுடன் அவுஸ்திரேலியாவில் கழித்தவர். தனது 83ஆவது வயதில் இவ்வுலகை நீத்துவிட்டார் என்ற செய்தி இலக்கிய வட்டத்தில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. அவரிற்கு 'விளம்பரம்' பத்திரிகையின் அஞ்சலியை செலுத்துகின்றோம்.

இவர் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களிடையே பல புதுமைகளையும் புரட்சிகளையும் புகுத்தியவர். கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், கதைகள் என சகல துறைகளிலும் தனது சிறந்த ஆற்றல்களை வெளிக்காட்டியவர். தனது ஆக்கங்களுக்கான தலைப்புகளிலும் புதுமை செய்தவர். அவற்றில் தீ, வீ, ஆ, கா போன்ற ஒற்றை எழுத்துகளும், சில ஈரெழுத்துச் சொற்களும், சடங்கு போன்ற நானெழுத்துகளும், அப்பையா எனும் சுயசரிதை போன்றவற்றையும் குறிப்பிடலாம். தனித்தமிழ் அல்லாத புதிய சொற்களை ஆக்குவதும் மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய வழக்கத்திலுள்ள சொற்களை உபயோகித்தலும் எனப் பல உத்திகளைக் கையாண்டவர். தமது புத்திரரிற்கு நவீனமான (அனுர, மித்ர, புத்ர, எந்ர) பெயர்களை சூட்டியவர். அவர் வாலிபனாக இருந்த காலத்தில் பிறந்த தன் சகோதரனுக்கு சரத்சந்திரர் எனப் பெயர் சூட்டியவர். ஏனைய எழுத்தாளர்கள் இவரை ஆபாசங்கள் எழுதுபவர் எனவும் பச்சை பச்சையாக எழுதுபவர் எனவும் கூறி முகம் சுழித்தனர். ஒவ்வொரு சொல்லும் வீரியம் மிக்கதாக மனிதனின் இயல்பான மனஅவசங்களை வெளிப்படுத்துவதாக இருப்பதைக் கண்டு நவீன எழுத்தாளர்கள் வியந்தார்கள். இடக்கரடக்கல் விதியால் உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்துவதில்லை என்பது மற்றைய எழுத்தாளர்கள் பற்றிய இவரது பார்வை.



மனிதனின் வாசிப்பு உலகம் விரிவடையத்தொடங்கிய காலத்தில் பிறமொழிக் கதைகள் மூலம் - நவீன எழுத்துக்களில் பரிட்சயம் வந்தபோதுதான் எஸ்.பொ வின் எழுத்துக்கள் எத்தனை காத்திரமானவை என்பது வெளிச்சமாகியது. ஆரம்பத்தில் கனக செந்திநாதன் மூலம் இவரது எழுத்துக்கள் யாழ்ப்பாணத்திலும் தமிழ்நாட்டிலும் பரவியது. இலக்கியத்துறையில் பரீட்சார்த்தமாக 'மத்தாப்பு' எனும் நாவல் ஐவரால் எழுதப்பட்டது. அது தோன்றியவிதம் பலருக்கு அதிசயத்தைக் கொடுத்தது. பல விருதுகளை தன்னகத்தே கொண்ட இவருக்கு ரொறொன்ரோவில் இருந்து இயங்கும் தமிழ் இலக்கியத்தோட்டம் 'வாழ்நாள் சாதனையாளர்' என்ற விருதினை வழங்கி கௌரவித்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கடல்

கடல் தான் உனது பெயரோ காவியமும் படைத்தாயோ
சுனாமி என்பதும் நீ தானோ
நம் உறவுகள் எல்லாம் உன் வலையில்
சிக்கிக் கொண்டது நிஜம் தானோ

நீ பேரழகு என்று சொன்னாரே பெருமளவில் வந்து கண்டாரே
காவிய நாயகன் என்றாரே கதைகள் பலவும் சொன்னாரே
வளங்கள் நிறைந்தது என்றாரே வள்ளல் என்றும் சொன்னாரே
ஆழ்கடல் சென்று வந்தவர்க்கு வெகுமதி தந்ததாய் சொன்னாரே
தஞ்சம் என்று வந்தவரை தாங்கிக் கொண்டாய் என்றாரே



கரையினில் நின்று கால் நனைத்தால் கவலை எல்லாம்
தீரும் என்றார் கவிஞர் சொன்னது பொய் தானே எல்லாம்
கட்டுக்கதை தானே நீ நய வஞ்சகன் என்பது மெய் தானே

உன் மடியினில் தவழ தவித்தவரே உன் அணைப்பினில்
கிடந்து துடித்தனரே பகைவரையும் நீ மிஞ்சி விட்டாய்
படு கொலைகள் செய்து விட்டாய் படைத்தவன் கேட்பான்
பதில் சொல்லு விதியென நீயும் விடை சொல்லு
பழியினை அவன் மீதே போடு விளையாடுவான் உன்னோடு

**- இனியா -**


யாழ். இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடா

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

**காலம்:** ஞாயிற்றுக் கிழமை, டிசம்பர் 07, 2014 **நேரம்:** காலை 10.00 மணி
**இடம்:** ஸ்காபரோ சிவிக் சென்ரர்
***(Council Chamber, Scarborough Civic Center)***
***150 Borough Dr. Scarborough ON M1P 4N7)***

உங்கள் கருத்துக்களைத் தெரிவித்து புதிய நிர்வாகக் குழுவைத் தெரிவு செய்வதற்காக அனைத்துப் பழைய மாணவர்களையும் ஆசிரியர்களையும் யாழ் இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடா அன்புடன் அழைக்கிறது.

கதிர்: ***416.856.6900*** கிருஷ்: ***416.930.9119***
***http://jhcacanada.com*** ***www.jaffnahinducanada.com***

# சூரியபாலனுக்கு ஓர் அஞ்சலி!

## மனங்களில் நிலைத்த இடம்பெற்ற மனநல மருத்துவர் சூரியபாலன்

சூரிய பாலனாய் சுடரொளி பரப்பினீர்!
நேரிய வழியில் நிதானம் காத்தீர்!
காரியம் தனிலே கருத்தாய் இருந்தீர்!
வீரியம் பேசா நற்சேவகன் நீரே!
ஆரிவரென்று அறிமுகம் பாராது
வாரியணைத்து வைத்தியம் செய்தீர்!
நேரிவர்க்கு நிகராவர் மிகமிக சிலரே!
நிலைத்தே பலருளம் நிறைந்திருந்தீரே!

மனநலம் குறைந்தோர் மக்கள் மத்தியில்
இனசனத்தவரிடத்தில் இழிநிலை போக்கியே
புதுவாழ்வு பெற்று பூரிப்பாய் வாழந்திட
அதுவே இலட்சியமென ஆற்றினீர் சேவை
உழைத்தே ஊதியம் பெற முடியாதோர்
உதவியை அரசிடம் பெற்றிட
ஆவன செய்தீர்
மக்கள் சேவைகள் மனித தெய்வம்
மனதாரத் துதிக்கின்றார் மக்கள் உமையே!

வைத்திய சேவை மகத்தான சேவை




வருந்திடும் உயிரை காத்திடும் சேவை

விந்தையாய் வேதனையுறும் உயிர்கெலாம்
சிந்தையில் தெம்பு பிறந்திடச் செய்யு
எந்தை இறைவர்க்கு அடுத்த நிலையில்
வந்தனைக்குரியவர் வைத்தியர் எனலா
எந்தனை ஈசன் படைத்தது எல்லோர்க்கும்
பண்புடன் சேவையாற்றல் என்கடன் என்றீர்!

மானிடம் மகத்துவம் பெற்றுயர்ந்திட
மாண்பளித்திடும் மனிதம் அதன் அடித்தளம்
தேனினுமினிய செய்கை பலவால்
தேசு மிகுந்திடும் இதுவே உண்மை
காணிடும் போது கடவுளர் இவரென
காட்சி தெரியும் கைகூப்பித் தொழுவர்
வானிலும் ஒளிர்வர் நல் வைத்தியர்
வாய்த்த நற்சான்று சூரியபாலன்!

மரணம் என்பது உயிர்களின் இயற்கை
மண்ணுளோர் யாவரும் மரிப்பர் ஓர்நாள்
பெரியர், சிறியர், அறிவாளி, அறிவிலி
தெரிவதில்லையே காலனின் கண்களில்

பிறந்தோர் யாவரும் இங்கேயே தங்கினர்
பின்வருவோர்க்கு இருக்கவே இடமில்லை
மக்கள் சேவகன் மகேசன் சேவகன்
மண்ணில் இலங்குமே அவர் புகழ் என்பர்



**நா. க. சிவராமலிங்கம்**




நகைச்சுவைத் தொடர் 298

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நீசன்






மாவீரர் நாள் உலகரின் கண்களை விட்டு மறையவில்லை.
எத்தனை வருடங்கள்...
ஊரைவிட்டு வந்தோம்... உறவைவிட்டு வந்தோம்... என கலங்குபவர்கள் தமது உயிரைத்துச்சமெனெ நினைத்து எமக்காக உயிர் நீத்தவர்களை மறந்தவர்களை நினைத்து கவலைப்பட்டார்.



கைகள் வலிக்க வலிக்க 7, 8 பிளாஸ்ரிக் பாக்கை சுமந்துகொண்டு ஐ பொட் அகிலாவும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் வர ஆட்டிலறி அன்னம்மாவும், உலகரும், ராசம்மாவும் ஆவலுடனும் ஆச்சரியத்துடனும் பார்த்தனர்.




பிளாக் வெள்ளிக்கிழமை தமிழ் கடையள்ளை வெங்காயமும் ராசவள்ளிக் கிழங்கும் சரியான மலிவு. அதுதான் வாங்கிக்கொண்டு வாறம் என செக்கண்ட்புளோர் செல்லம்மா சொல்லும்போது உலகர் மனதில் வந்த ஆத்திரத்தை சிரிக்காமல் சிரித்து சமாளிச்சு கொண்டார்.

உலகண்ணை வெள்ளைக்காரரைப் பாருங்கோ எங்களை மாதிரித்தான் எங்களுக்கு ஐப்பசி வெள்ளி அவைக்கு கறுப்பு வெள்ளி என சொல்லி சிரித்தா.



வாற கிழமை கடையள்ளை கிறிஸ்மஸ் சேல் நடக்குது. ஐ போன் ரூ கோ என்றா ஐ பொட் அகிலா. நானும் வாறன் என செக்கண்ட்புளோர் செல்லம்மா சொல்ல முதலே ஓம் வறுத்த அரிசிமாவும் வன்கூவர் செத்தல் மிளகாயும் சேல் போடினமாம் போய் வாங்கிக்கொண்ட வா என சொல்ல ஐ பொட் அகிலா தனது ஐ பொட்டை ஓன் பண்ணி படங்களைப்பார்த்து சிரித்தா.



தான் ஆரம்பத்தில் வாங்கிய செல்போன் அதனைத் தொடர்ந்து வயது போகப்போக நவீன போன் வாங்கி ஐ பொட் வாங்கியது வரை உலகர் நினைத்துப் பார்த்தார். தொழில்நுட்ப வளர்ச்சியும் அவசியமற்ற பொருட்களை வாங்கி நாம் பணத்தை விரயம் செய்வதை ஒரே வீட்டில் பழையது புதியது என பலவிதமான பாவிக்காத செல் போன்கள் சார்ச்சர்கள் கவர்கள் எத்தனை குறைந்த கால சேவையுடன் ஓய்வு பெறுகின்றன. திரும்பி விற்கவும் முடியாது எறியவும் முடியாது கஸ்டப்பட்டு வேலை செய்து நவீன உலகத்தில் வீணாக பணத்தை விரயம் செய்வதுதான் மிச்சம்.



உலகர் பட்டிமன்றம், கவியரங்கம் என்றால் முண்டியடித்துக்கொண்டு சென்றகாலம் உண்டு. இன்று ரி.வி.யில் வாழ்க்கை முறைக்கு ஒத்துவராத தலையங்கங்கள் ஏதோ பாத்தது கேட்டதுடன் சரி.

கடந்த மாதம் இங்குள்ள ஆலயங்களில் செஞ்சொற் கலாநி-தி செல்வர் ஆறு. திருமுருகனின் பல சொற்பொழிவுகள். தலையங்கத்துக்கேற்ற கருத்துச் செறிவுள்ள சொற்பொழிவு. சிறுவர் பெரியோர் எல்லோரும் புரிந்து கொள்ளும் தமிழ் வசன நடை.



அது மட்டுமல்ல, அவரின் நடையும் எளிய நடைதான். சாதாரண காரில் வந்து போனார். நண்பர்கள் வீட்டில் தங்கினார். மற்றவைக் கெண்டால் லிமோசின் கார், பெரிய ஸ்ரார் கொட்டல், நேரடி ஒலி (ஒளி) பரப்பு என முணுமுணுத்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா.

உண்மையாக மக்கள் சேவை செய்பவர்கள் விளம்பரத்தையும் ஆடம்பரத்தையும் விரும்புவதில்லை என்பதற்கு உவர் நல்ல உதாரணம் என உலகரின் காதில் சொன்னா ஆட்டிலறி அன்னம்மா.

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மறைவிற்குப் பின் எத்தனை பொறுப்புகள். சிவபூமி என்ற பெயரில் எத்தனை தர்மஸ்தாபனங்கள். வாழ்க! வளர்க! அவரது சேவைகள்.



இதேவேளை ஐ பொட் அகிலாவுடன் சேர்ந்து செக்கண்ட்புளோர் செல்லம்மா உலக அரசி யல் செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்தா. ஈராக்கில் அமெரிக்க, கனேடிய விமானங்கள் பயங்கர குண்டுவீச்சு. அமெரிக்காவில் கறுப்பு இன இளைஞனை பொலிசார் சுட்ட வழக்கின் தீர்ப்பில் அதிருப்தியடைந்த மக்கள் கடைகள், மோல்களை தீக்கிரையாக்கினர் என தனது உரை நடையில் வாசித்துக் கொண்டிருந்தா.

ம்..ம்..எங்கும் அரசியல் பிரச்சினை தான் என நீண்டபெருமூச்சு விட்டா செல்லம்மா. தெரி-யாமல் தேவையில்லாமல் அரசியல் கதைக்காதை எண்டு ஆட்டிலறி அன்னம்மா சொல்ல உலகண்ணை குஸ்பு விளக்கமில்லாமல் அரசியல் கதைக்கலாம் நான் கதைக்கக்கூடாதோ? என செக்கண்ட் புளோர் செல்லம்மா சொல்ல.



எல்லோர் மனதிலும் இடம்பிடித்த எஸ். பொன்னுத்துரை அவர்கள் எழுதிய புத்தகத்தின் பக்கங்களை மாறி மாறி உலகர் புரட்டிக் கொண்டிருந்தார். கடந்தவாரம் அவுஸ்திரேலியாவில் அவரின் மறைவு பலரின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.




ஞாபகம் இருக்கிறதா? டிசெம்பர் 01......14



1. சர்வதேச எயிட்ஸ் தினம்

3. சர்வதேச ஊனமுற்றோர் தினம்



5. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் (தமிழ் உரைநடையின் தந்தை)


9. உலகின் (கனடாவில்) முதல் 24 மணிநேர தமிழ் வானொலி. கனேடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் பரீட்சார்த்த ஒலிபரப்பு ஆரம்பம் (1995)

9. அனைத்துலக ஊழல் எதிர்ப்பு தினம் (2003)



10. மனித உரிமைகள் நாள்

11. சுப்பிரமணிய பாரதியார் ஜெயந்தி



# திரை...

வரும் அருணை, மஞ்சு வரவேற்பதுடன் படம் முடிகிறது. கமல், ரஜினி, ஸ்ரீப்ரியா மற்றும் துணை நடிகர்கள் அனைவரும் பாத்திரத்திற்கேற்ற பங்களிப்பை சரியாகச் செய்திருக்கிறார்கள். கமல்தான் காதாநா-யகன். அருணாக வருகிறார். மஞ்சுவின் இறந்தகால நிகழ்வுகளை அவளின் மூலமே அறிந்து, அவள் மீது அனுதாபம் கலந்த தன் காதலை வெளிப்படுத்தும் பாத்திரம். ஆனால், ஒரு சிக்கலான சூழ்நிலையில் மஞ்சு அதை மூர்க்கமாக நிராகரிக்க, மனம் உடைந்து போய் தன் பெற்றோர் நிச்சயித்த பெண்ணையே (சித்ரா) திருமணம் செய்து கொள்கிறார். ஸ்ரீப்ரியாவின் தனித்துவமான நடிப்புக்கும் திறமைக்கும் மஞ்சு பாத்திரம் ஓர் எடுத்துக்காட்டு.

மஞ்சுவிற்கு மேலதிகாரியாகவும் அருணுக்கு நண்பராகவும் வரும் தியாகு பாத்திரத்தில் நடித்திருக்கிறார் ரஜினி. மிக சுவாரசியமான பாத்திரம். நெற்றியில் விபூதி பட்டையும் கையில் மது கோப்பையுமாக 'நான் என்ன சொல்றேன் மச்சான்" என்று பேசும்போது களை கட்டிகிறது. இவ்வளவு திறமையுள்ள நடிகரை, எப்படியெல்லாம் மாற்றி வீணடித்திருக்கிறார்கள் என பிற்கால திரைப்படங்களைப் பற்றி நினைத்துப் பார்க்கும்போது வருத்தம்தான் ஏற்படுகிறது. இப்படத்தின் பெரிய பலமும் இன்றும் இப்படத்தைக் கூர்மையுடன் வைத்திருப்பதும் இதன் வசனம்தான். வசனத்தை எழுத்தாளர் வண்ணநிலவன், 'அமரன்' இயக்குநர் கே. ராஜேஷ்வர், அனந்து மூவரும் சேர்ந்து எழுதியிருக்கிறார்கள். மஞ்சு - அருண் - தியாகு மூவருக்கும் இடையேயான உரையாடல்களால் நிறைந்திருக்கிறது படம். ஆங்கில வசனங்கள் அதிகம் இடம்பெற்று இருந்தாலும் கதைச் சூழலுக்குப் அழகாக பொருந்துகின்றன. ஒரு சமூக சேவகி கேமரா முன்பு தோன்ற, 'மேக் அப் போடனுமா'' என்று கேட்கிறார். அதற்கு மஞ்சு பதில்: 'நீங்க எப்பவும் போடுவீங்களே இந்த சொசைட்டி மேக்அப், அதைப் போட்டா போதும்." அருண் தன் மீது அபிமானம் காட்டுவதை வெறுக்கும் மஞ்சு, அவரை வெறுப்பேற்ற தியாகுவுடன் ஒரு பார்ட்டிக்கு செல்வார். அங்கே இருவரும் தனியாக இருக்கும் சூழ்நிலையில், தியாகு தவறாக அவரை அணுக முயல, அவரது கன்னத்தில் அறைந்துவிடுவார், மஞ்சு. மறுநாள் மஞ்சுவை சந்திக்கும் தியாகு முந்தின நாள் நடந்த நிகழ்வைப் பற்றிய எந்தவித சலனமும் இல்லாமல் உரையாடலைத் தொடங்குகிறார். இதைக் கண்டு திகைத்துப் போய் நிற்கும் மஞ்சுவிடம் அவர் சொல்கிறார்: 'ஒரு ஆம்பளை, தனியா இருக்கற பொண்ணுகிட்ட எப்படி நடந்துகனுமோ அப்படித்தான் நான் நடந்துகிட்டேன். ஒரு துணிச்சலான பொம்பள எப்படி நடந்துகனுமோ அப்படித்தான் நீயும் நடந்துகிட்ட. லீவ் இட்." இதுபோன்ற உண்மைகளைப் போட்டுடைக்கும் வசனங்களுக்காக மட்டுமே இந்தப் படம் இன்னும் பல வருடங்கள் பேசப்படும்.

இளையராஜாவின் பின்னணி இசையும் பாடல்களும் இன்னொரு பலம். படத்திலுள்ள மூன்று பாடல்களுமே அருமையான பாடல்கள்தான். 'உறவுகள் தொடர்கதை' (யேசுதாஸ்), 'பன்னீர் புஷ்பங்களே' (கமல்ஹாசன்), வாழ்க்கை ஓடம் செல்ல' (ஜானகி) ஆகிய மூன்று பாடல்களையும் இன்றும் கேட்கலாம். நல்லுசாமி - ஞான சேகரன் ஒளிப்பதிவு மிகவும் துணிச்சலானது. நிழலுருவக் காட்சிகளை குறைவான வெளிச்சத்தில் எடுத்திருக்கிறார்கள். வெற்றிகரமான பரீட்சார்த்த முயற்சி. அன்றைய தமிழ் சினிமாவுக்குப் புதிது.

இயக்கமும் தயாரிப்பும் ருத்ரைய்யா. நமது சமூகத்தின், உறவுகளின், ஊடகத்தின் போலித் தனங்களை ஈவு இரக்கமின்றி உரித்துப் போட்ட துணிச்சல்காரர். எண்ணிக்கையில் அதிகமான அண்மைக் காட்சிகள், திரைக்கதைகளுக்கான இலக்கணங்களாக தமிழ்த்திரை தொன்று தொட்டுப் பின்பற்றி வந்த மரபுகளை முற்றிலுமாகப் புறக்கணித்தது என்று அன்று எடுக்கப்பட்ட புதிய முயற்சி இன்றும் புதியதாகவே இருக்கிறது. பெண்ணிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் படங்கள் மிகவும் குறைவாகவே தமிழில் வந்துள்ளன. அதுவும் இந்தப் படம் பெண்ணியம் வேறு பேசுகிறது. சிறந்த தமிழ்ப் படங்களை வரிசைப் படுத்தினால் முதல் ஐந்து படங்களுக்குள் 'அவள் அப்படித்தான்' கண்டிப்பாக இடம்பெறும்.

# HOUSE FOR SALE நீர்கொழும்பு - இலங்கை









Custom Built (2009) Luxury Two Story House

(Excellent Revenue Potential)

- 5 Bedrooms (4W/AC) 3 Full washrooms. Seperate Convertible Guest house or storage unit w/full bath and urinals.
- Large living and dinning areas with 10ft. Cathedral ceilings.
- Separate entrance to the 2nd floor which has a completely kitchen this property has video surveillance and is being sold completely furnished, is ready to move in condition.
- Completely fenced, beautifully landscaped property on approx 45 perch w/in ground lawn sprinklers, many fruit trees, seperate parking area, septic system and two tube wells.
- 5 Minute walk to shops, restaurants, the beach and major beach hotels situated in quite setting w/access to Rani Mawatha, Marians place & cemetery road.

**Cell: 647.588.1714 / Email: roshand@rogers.com**



"Let me help you make the right choice"

SchurenSriskandarajah B.A.
Sales Representative

HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8

SCHUREN.CA • 416.333.9393



BRINGING YOUR DREAMS TO LIFE TODAY call Vany Jeganmohan for BUYING, SELLING & INVESTING • RESIDENTIAL & COMMERCIAL

Vany Jeganmohan
Sales Representative
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca

HomeLife/GTA Realty Inc., Brokerage*
Bus: 416.321.6969
Fax: 416.321.6962

GTA Square, 5215 Finch Ave. E., # 203, Toronto, ON M1S 0C2
Higher Standards Agents... Higher Results!™




"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
List Buy Sell
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
All Stars Realty Inc., Brokerage

வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
No Credit or Bad Credit
கவலை வேண்டாம்
Guaranteed Result



For All Your Real Estate Needs
BUY OR SELL
Terrence Thambyrajah
Sales Representative
Dir : 647-709-1202
Bus: 905-201-9977
Fax: 905-201-9229
E-Mail: terrence.thambyrajah@gmail.com
HomeLife/Future Realty Inc.,Brokerage*
*Independently owned and Operated





Canada Trust வங்கியில் அனைத்து
Mortgage கடன் வசதிகள் பெற்றுக்கொள்ள
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Low Mortgage Rates



அகத்தின் அழகு முகப்பில் தெரியும்.....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

Free Real Estate Class - Call: 416.321.6969

RealEstate / Commercial Investments



DUFFERIN & LANGSTAFF
Truck Repair
BUILDING, BUSINESS + EQUIPMENTS
Price: $1.3 Million



HWY 27 & KING RD
Gas station for sale
Asking price: 749,000



FINCH & MCCOWAN
Bedroom :3 + 1
Washroom: 3
Price : $489,990



BELLAMY & EGLINTON
LEASE
Bedroom : 3
Washroom: 2
Price : $ 1900



MARKHAM & FINCH
KNIT WEAR
BUSINESS + FOUR UNITS
Asking price: 829,900



PORTUNION & KINGSTON
BUSINESS FOR SALE
Asking Price: $119,900



RE/MAX Dynasty Realty Inc.
A. Anton Jeeva B.Eng
Ranked among the top 1% of all Realtors in the GTA
Mortgage can be arranged from 2.4%
Mortgage Rates Starting From 2.5%
Dir: 416.575.5055
Remax Dynasty Realty Inc., Brokerage 8 Shadlock St, Unit #7 Markham, ON L3S 3K9



THE TRUSTED MORTGAGE AGENT
"Solution For Ever Mortgage"
MORTGAGE ALLIANCE The Guardian
•I will arrange your 1st Mortgage with 5% down.
•Need a 2nd Mortgage???
"When banks say no We say yes"
@ Interest rate starting from 6.99%+.
Thayalan Gobalakrishnan
(M12001612)
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Contact: 416.575.3211
E-Mail: thaya.gobal@gmail.com
*Some Terms & Conditions May Apply



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969
* INDEPENDENTLY OWNED AND OPERATED